



**"ஜின்னாஹ்" ஷரீபுத்தீன்**

**(மருதம்)**

# கருகாத பசுமை

# ஆசிரியரின் பிற நூல்கள்

## வெளிவந்தவை

| | | |
|---|---|---|
| 1. | பாலையில் வசந்தம | 1989 |
| 2. | முத்து நகை | 1989 |
| 3. | மஹ்றஜபீன் காவியம் | 1991 |
| 4. | புனித பூமியிலே காவியம் | 1995 |
| 5. | பனிமலையின் பூபாளம் | 1995 |

## வெளிவரவிருப்பவை

1. கருகாத பசுமை (புதினம்)
2. பண்டார வன்னியன் காவியம்
3. ஜின்னாஹ்வின் சிறுகதைகள்
4. ஜின்னாஹ்வின் இருகுறுங் காவியங்கள்
5. ஜின்னாஹ்வின் கவிதைகள்

# கருகாத பசுமை

"ஜின்னாஹ்" ஷரிபுத்தீன்
(மருதம்)



அன்னை வெளியீட்டகம்
ம ரு த மு னை

இந்நூலானது
தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள், சபையின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள போதும், இந்நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

இலங்கைத் தேசிய நூலகம் –வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு

ஷரிபுத்தீன் ஜின்னாஹ்
கருகாத பசுமை/ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
தெஹிவளை ஞ ஆசிரியர், 2000
பக்கங்கள் : 114 + XX ச. மீ. 18
ISBN 955 - 96932 - 0 - 4 விலை 100.00
i. 894.8113 டி.டி.சி 21 ii. தலைப்பு
1. தமிழ் நாவல்

**ISBN 955 - 96932 - 0 - 4**

**"KARUKATHA PASUMAI"**

© : HAMZIA FAREEDA
16, School Avenue,Off Station Road,
Dehiwela, Sri Lanka
T.P: 730378, 078690488

Author : Dr.A.Jinnah Sherifudeen (Marutham)

Cover Design by : Roshan Hamid Sherifudeen

Price : 100/=

Printed by : A J Prints, Dehiwela.

# சமர்ப்பணம்

தந்தை போல் தாய் போல் என்றன்

தோள்வலுத் துணையாய் எம்மான்

நீதிசேர் வழியில் வாழ்ந்தே

நிமலன்நற் பதமுஞ் சேர்ந்த

சூதிலார் அல்ஹாஜ் எம். என்

ஷரிபுத்தீன் தமக்கிந் நூலை

ஓதியோன் உடன்பி றந்தோன்

உவந்துமே சமர்ப்பித் தேனே

*தமிழ்ப் பேரறிஞர் திருமிகு எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்*

*அளித்த அறிமுக உரை*

# கவிஞர் படைத்த காதல் கதை

“கருகாத பசுமை” என்பது மலை நாட்டைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் ஒரு நவீனம். இது ஒரு குடும்பக் கதை.

தேவியின் பெற்றோர் இறந்து போக, தன் சகோதரி வாஸந்தியையும், தம்பி ராஜாவையும் பொறுப்பேற்று வளர்த்துப் படிக்கவைத்து ஆளாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இளவயதிலேயே அவள் தோளில் சுமையாகிறது. கல்வியில் தீராத நாட்டமுள்ள தேவி, தான் படிப்பதற்கு வசதி கிடைக்காமல் போய்விட்ட போதிலும், தன் தங்கையைப் படிப்பித்து, எப்படியும் அவளை ஒரு பட்டதாரியாக்கி விட வேண்டும் என்று பாடுபடுகிறாள். தன் சகோதரர்களின் முன்னேற்றத்திற்காகத் தன் சொந்த வாழ்க்கையையே தனி வாழ்க்கையாக்கித் தியாகம் செய்கிறாள். இடையில் எத்தனையோ இடைஞ்சல்கள். எனினும் ஒரே உறுதிப்பாட்டுடன் உழைத்துத் தன் இலட்சியத்தில் வெற்றி காண்கிறாள். எனினும் இடையில் குறுக்கிடும் ஒரு வில்லனின் வெறிக்கு அவள் கற்பு பலியாகிறது. அதன் பின் அவள் என்ன ஆனாள்? இதுவே கதையின் புனைவு.

இந்தக் காலத்தில் நாவல் எழுதும் சுஜாதா, தேவிபாலா, இந்துமதி போன்றவர்கள் கையாளும் நவீன டெக்னிக்குடன், எதிர்பாராத திருப்பங்கள், மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள், பிளாஷ்பாக் உத்திகள் இதில் இல்லை. இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்னால் வடுவூர் துரைசாமி ஐயங்கார், நாரணதுரைக் கண்ணன், கோதைநாயகி அம்மாள் போன்றவர்கள் கையாண்டு வெற்றிகண்ட நரேஷன் என்ற பாங்கினையே கையாண்டு எழுதியிருக்கிறார். இந்தப் பால்நடை படிப்பதற்கு எளிதாகவும், சுவையாகவும், சுகானுபவம் தருவதாகவும் இருக்கின்றது.

இதில் விசேஷம் என்ன வென்றால், இது எழுதப் பட்டிருக்கும் ஆற்றோட்டமான தமிழ் நடைதான். நாவலாசிரியர் ஓர் இடத்தில் மலை நாட்டின் நீர் அருவிகளை ரசித்து வர்ணிக்கிறார்.

“எழில் கொஞ்சும் மலைநாட்டின் அழிவில்லாப் பெருஞ் செல்வம் நீர் வீழ்ச்சிகள். சிறிது சிறிதாய் ஊற்றெடுத்து ஒன்றுபட்டு மலை மண்ணைச் சீராட்டிச் செழிக்கச் செய்து, பீட பூமிகளையும் சமவெளிகளையும் தன் பெருங்கொடையால் சீராட்டிக் கடலோடு சங்கமிக்கும் அழகு இந்தப் பொன்னாட்டின் பெரும் பேறாகும்”.

இவருடைய தெளிந்த கண்ணாடித் தமிழ் நடையே, அவருடைய இந்த வர்ணனையில் வரும் சிற்றாறுகளுக்கும், நீர் வீழ்ச்சிக்கும் ஒப்பிடலாம்.

அன்பர் ஜின்னாஹ் ஷரீபுத்தின் இந்த நாட்டில், இப்போது நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் புகழ் பூத்த, தலை சிறந்த தமிழ்க் கவிஞர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாவலில் தாம் ஒரு கவிஞரே தான் என்பதைத் தமது வசன நடையிலும் அவர் காட்டியிருக்கிறார். பற்பல இடங்களில் அவர் சிதறியிருக்கும் உவமானங்களும் உபமேயங்களும் நம்மைப் பெரிதும் கவர்கின்றன.

“வெண் பிஞ்சுச் சோள விதையடுக்கி வைத்தது போல் பற்கள் முத்தென ஒளிர்ந்தன.”

“தன்னைக் கருக்கித் தன் உடன்பிறப்புகளுக்கு மணந்தரும் அகிலல்லவா, அவள்?”

“லயத்தின் எல்லாக் காம்பறாக்களிலும் குப்பி விளக்குகள் தங்கள் ஓய்வினை முடித்துக் கொண்டு மெல்லச் சிரித்தன. பத்தாம் இலக்கக் காம்பறாவிலும் அதிலொன்று தன் பணியைத் தொடங்கியது”

“நாட்டுக்கே உணவூட்டும் பொருளாதாரத்தின் முதுகெலும்புகள், நாள் ஒரு வேளைக்கு நாதியற்றுக் கிடந்தன”

“வரவரக் கூடும் சூரியனின் உஷ்ணம் போல் அவளின் சுரமும் அதிகரித்துக் கொண்டே சென்றது”

"நூற்றாண்டுகளாய்த் தோட்டத்து ஜனங்களின் இரத்தத்தை உறிஞ்சி உடல் வளர்த்த முதலாளி வர்க்கத்தின் மறுபிறவிகள் தாமே அட்டைகள்! இரத்த ருசி விட்டுப் போகாததால் மீண்டும் மீண்டும் பிறந்து குருதி மாந்துகின்றன"

"வெண்மேகப் பொதிகளாலும் பனி மூட்டத்தாலும் தமது மார்புகளை மூடிக் கொண்டு மேலாடை போர்த்திய பெண்களைப் போல மலைகள் அழகு காட்டின"

மேலே குறிப்பிட்டது போன்ற சொற்களும், சொற்றொடர்களும் வாக்கியங்களும் நூல் முழுவதும் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன. இவற்றின் காரணமாக இந்தக் காதல் கதை கனிரஸம் சொட்டுகின்றது.

மொத்தத்தில் படித்து முடித்ததும் ஒரு மன நிறைவைத் தருவதாக அமைந்திருக்கிறது, "கருகாத பசுமை"

**எஸ். டி. சிவநாயகம்**
*நூலாசிரியர், பத்திரிகையாளர்.*

கொழும்பு
23. 11. 1999

*சிறுகதை, நாவலாசிரியர், தமிழ்மணி தெளிவத்தை ஜோசப் அவர்கள் அளித்த*

# முன்னுரை

முப்பதுகளில் தோற்றம் கொண்ட மலையகத்தின் புனைகதைத்துறை மணிவிழாவாண்டைக் கடந்து தனது வைர விழாவாண்டை நோக்கி வேகமாக வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

நாற்பதுகளில் தோற்றம் கொண்டு (1943) தனது மணி விழாவாண்டை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கும் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் "கருகாத பசுமை" என்னும் இந்த மலையக நாவல் புனை கதைத் துறையின் வைரவிழா நோக்கிய வெற்றி நடைக்கான ஒரு வ்ழித்துணையாக வந்து இணைந்து நிற்கின்றது.

மலையகத்தின் இருபது வருட கால நாவலிலக்கிய வரலாற்றில் நூலுருப் பெற்றவை, தொடர் கதைகளாகப் பத்திரிகைகளில் மட்டுமே வெளிவந்தவை என்று ஒரு முப்பது நாவல்களைக் கணக்கிடலாம்.

இந்த முப்பது நாவல்களில் அதிகமாகப் பேசப்பட்ட நாவல்களும் இருக்கின்றன. ஏதோ சில காரணங்களுக்காக அதிகமாகப் பேசப்படாத நாவல்களும் இருக்கின்றன.

சுந்தரமீனாள் அல்லது காதலின் வெற்றி போன்ற இரட்டைப் பெயர் கொண்ட ஆரம்ப நாவல்கள் ஒன்றிரண்டைத் தவிர்த்து மலையக மண்ணிலிருந்து முகிழ்ந்த ஏனைய அனைத்து நாவல்களும் குறிப்பாக இரண்டு விஷயங்கைளப் பற்றியே பேசும் தன்மைகளைக் கொண்டனவாய் அமைந்துள்ளமை கண்கூடு.

ஒன்று குடியுரிமை மறுக்கப்பட்ட காரணத்தால் அரசியல் அனாதைகளாகிப் பலவிதமான அரசியல் கெடுபிடிகளுக் காளாகிப் போகும் நிலைமைகள் பற்றிப் பேசுவது. இனக்குரோத நடவடிக்கைகள் இதற்குள் அடக்கமானதே.

மற்றது தோட்டத் தொழிலாளர்கள், உழைப்பாளர்கள் என்னும் அடிப்படையில், தோட்டச் சொந்தக்காரர்களான வெள்ளைக் காரர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், கங்காணிகள் போன்றவர்களால் மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகள், பாலியற் கொடுமைகள், இவைகளால் ஏற்படும் வாழ்க்கைச் சிக்கல்கள் அவலங்கள் ஆகியவை பற்றிப் பேசுவது.

இந்த இரண்டு பெரும் பிரிவுகளையே மையமாகவும் அடிநாதமாகவும் கொண்டெழுந்துள்ள இதுகாலவரையிலான - மலையக நாவல்களிலிருந்து டொக்டர் ஜின்னாஹ்வின் இந்த நாவல் வேறுபட்டதாகத் தோற்றம் கொள்கிறது.

பொன்னுமாமி, அவளது குடும்பம்; தேவி, அவளுடைய தங்கை, தம்பி ஆகிய இன்னொரு குடும்பம்: இந்த இரு குடும்பங்களின் கதையே இந்த நாவல்.

இந்த இரு குடும்பங்களும் ஒரு தேயிலைத் தோட்டத்தில் ஒரு லயத்தில் வாழ்வதாகவே காட்டப்பட்டாலும் நாவலின் செல்முறை ஒரு மத்தியதரவர்க்கத்தின் செயல்பாடுகளையும் சமுதாய நடவடிக்கைகளையும் முன்னிலைப் படுத்துகிறது.

பொன்னுமாமியின் குடும்பத்துக்கும் தோட்டத் தொழில் முறைக்கும் தொடர்பு இருப்பதாக நாவலில் எந்த ஒரு இடத்திலும் காட்டப்படவில்லை.

தேவி பெயர் பதிந்து மலையில் கொழுந்தெடுப்பதைக் கங்காணி முனியன் அவளைப் பலாத்காரம் பண்ணிக் கெடுத்துவிடும் வரை இரண்டொரு இடங்கள் காட்டிச் செல்கின்றன.

மலையக நகரமொன்றில் உத்தியோகம் பார்ப்பவனாகவும் பிறகு கம்பெனி ஒன்றின் பங்குதாரனாகவும் உயர்வடையும் வீரபுத்திரன், பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டதாரிகளாக வெளிவரும் வாஸந்தி, காவேரி என்னும் இரண்டு லயத்துப் பெண்கள், பல்கலைக்கழக மாணவனான வீரபுத்திரனின் தம்பி, செல்வா, வாஸந்தி – செல்வா இருவரிடையே அரும்பி வளரும் காதல், பெரியவர்களின் குறுக்கீடு, பிறகு சமாதானம், திருமணம் என்று குடும்ப உறவுகளைச் சுற்றியே நாவல் வளர்கிறது. ஆகவே தான் காதல், உறவு, பாசம், தியாகம் போன்றவைகளைப் பேசும் ஒரு மத்தியதரவர்க்க மக்கள் பற்றிய நாவலாக, மற்ற மலையக நாவல்களின் போக்குகளிலி ருந்து விலகி நிற்கும் ஒரு நாவலாக என்னால் இதைக் காண முடிகிறது.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக, இந்த நாட்டில் ஒரு அடிமைப்பட்ட மக்களாகவே இருந்து விட்ட இம்மலையக மக்கள் மத்தியில் மந்த கதியிலேயே ஏற்பட்டு வந்த மாற்றங்கள் இப்போது அண்மைக் காலங்களில் தீவிரமடைந்து வருவது யாவராலும் உணரக் கூடியதே. தங்களின் அடையாளம் பற்றிய உணர்வு மேலோங்கி வருகின்றது.

கல்வி கற்றவர்களின் தொகை அதிகரிப்பு, கொழும்பு போன்ற பெரும் நகர்ப்புறம் நோக்கிய நகர்வு, வாக்குரிமை அரசியல் பிரதிநிதித்துவம், தொடர்புசாதன ஊடகங்களின் இம்மக்கள் பற்றிய அக்கறை போன்ற அனைத்தும் இம்மாற்றத் தின் வேகங்களுக்கான விசைகளாக விளங்குகின்றன.

மலையகத்தில் ஒரு புதிய மத்திய தரப்பிரிவின் உருவாக்கத்தை இவை உணர்த்துகின்றன. இந்த மத்திய தரப்பிரிவின் வளர்ச்சிப் போக்கினை ஊர்ஜிதப்படுத்துவதாகவே இந்த நாவல் அமைகிறது.

இலகுவான சின்னச் சின்ன வசனங்கள், சிக்கலேதும் இல்லாத ஒரு தெளிவான தமிழ்நடை ஆகியவை இனிமையான கவித்துவத்துடன் நாவல் முழுக்கப் பரவி நிற்கின்றன.

'நத்தையாய் ஊர்ந்த நாட்கள் வெள்ளியை அடைந்தன. இரவுக்கு முன்னரே தோட்டத்தை அடைந்தான். வாஸந்தியின் வீட்டுக்கதவு திறந்தே இருந்தது; தேவி வெளிப்பட்டாள்..........' **(பக்கம் 30)**

'துளையுண்ட குழலில் காற்றுப் புகுந்தெழ, விட்டு விட்டுக் கேட்கும் இனிய நாதம் போல்......' (பக்கம் 58)

'காலைப் பொழுதின் மெல்லிய உஷ்ணத்தில் துயில் கலைந்த மலைகள் பசுமை கொஞ்ச உடல் சிலிர்த்தன....' (பக்கம் 70)

......கல்லின் மேல் இருவரும் முகம் காட்டி உட்கார்ந்து கொண்டனர்.......... (பக்கம் 96)

சின்னச் சின்ன வசனங்கள்; இனிமை கொஞ்சும் கவித்துவ நடைபோன்றவைகட்கு இவை ஒரு சில உதாரணங்கள்.

பெற்றோரை இழந்து பொன்னுமாமியின் அரவணைப்பில் தம்பி தங்கையுடன் அடைக்கலம் கொண்ட தேவி தனது உடன் பிறப்புக்களின் கல்விக்காக, அவர்களின் எதிர்கால மேன்மைக்காகத் தோட்டத்தில் பெயர் பதிந்து மலையேறி உழைக்கின்றாள். உத்தியோகம் பார்க்கும் வீரபுத்திரனுக்கு அவளை மனைவியாக்கப் பொன்னுமாமி விழைந்த போது தனக்கென்று ஒரு குடும்பப்பாரம் வந்து விட்டால் தம்பி தங்கையின் கல்வி பாதிக்கப்படும் என்பதை மனதில் கொண்டு வலிய வந்த அந்த அதிர்ஷ்டத்தை நிராகரிக்கின்றாள்.

அதே வீரபுத்திரனின் தம்பி செல்வா தன்னுடைய தங்கை வாஸந்தியைக் காதலிக்கின்றான் என்பது தெரிந்ததும் "வாஸந்தியின் படிப்புக்கு ஒங்க ஆசைகள் எடை(ஞ்சல) உண்டு

பண்ணக்கூடாது. தேயிலைச் செடிக்கு ரத்தம் பாய்ச்சும் வெறும் தோட்டத்துக் கூலிகளாக இனியும் நாம வாழக் கூடாது". (பக்கம் 43) என்று அந்த இளவயதுக் காதலின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றாள்.

இந்த மக்களின் அண்மைக்காலம் வரையிலான பின்னடைவுக்கு முக்கிய காரணமே கல்வியில் இவர்களுக்கு அக்கறை இல்லாமல் போனதுதான்.

கல்விக்காகத் தன்னுடைய திருமணத்தையும் தங்கையின் காதலையும் மறுதலிக்கும் ஒரு தோட்டத்துப் பெண்ணான தேவியின் பாத்திரப் படைப்பு இந்தப் பழைய நிலைமைகள் மாறிவருவதைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கல்வி வெறுமனே வெள்ளை உடுப்பு உத்தியோகத்துக் காக மட்டுமன்றி ஒரு குடும்பக்கலாசாரமாக, ஒரு சமூகப்பண் பாக உருவாக வேண்டும் என்னும் தொனி முளைவிடுகின்றது.

உத்தியோகம் பார்க்கும் பொன்னுமாமியின் மகன் வீரபுத்திரன் திருமணமாகி மூன்று பிள்ளைகளுக்கும் தகப்பன். தன்னுடைய உத்தியோகத்தில் ஒரு மாற்றம் செய்து கொள்ள விழைகின்றான். வேகமான இன்றைய இயந்திர உலகில் இவை மிகச் சாதாரணமானவை. நம்மில் எத்தனைப்பேர் இது பற்றிக் குடும்ப உறவுகளுடன் பேசுகின்றோம். ஆலோசனை செய்கின்றோம். குடும்ப அங்கத்தினர் ஒன்றாக அமர்ந்து சம்பாஷனை செய்வது; ஒன்றாக அமர்ந்து பிரார்த்திப்பது;

ஒன்றாக அமர்ந்து உணவருந்துவது போன்ற குடும்ப ஆரோக்கியப் பண்புகள் அருகிவிட்ட நாட்கள் இவை. குறைந்த பட்சம் தான் உத்தியோகம் பார்க்கும் இடம், அல்லது புதிதாக உத்தியோக மாற்றம் செய்து கொண்ட இடம் போன்றவை களை தமது பெற்றோருக்கே கூறாத இளைஞர்களையே பெருவாரியாகக் காண்கின்றோம்.

முளைத்து மூன்றிலை விடாத சிறிசுகளே இப்படி நடந்து கொள்ளும் ஒரு கால கட்டத்தில் மூன்று பிள்ளைகளின் தகப்பனான வீரபுத்திரன் தனது உத்தியோக மாற்றம் பற்றி தோட்டத்து லயத்தில் வசிக்கும் தாய் பொன்னுமாமியுடன் கலந்து பேசுவதும், இளையவனான தம்பியிடம் ஆலோசனை கேட்பதும், ஒரு நாள் தான் மணக்கவிரும்பிய தேவியின் அபிப்பிராயம் அறிய விழைவதும் இந்த நாவலை நடத்திச் செல்லும் வழிமுறையின் சத்தான பக்கங்கள்.

குடும்ப ஆரோக்கியமும் கட்டுக்கோப்பும் ஒரு சமூக விழிப்பிற்கு இன்றியமையாத அம்சங்கள். ஒரு சமுதாய மேன்மைக்கும் முன்னேற்றத்துக்குமான அத்திவாரங்கள்.

பாத்திரப் படைப்புக்கள் மூலம் கருகாத பசுமையாக இவையே இந்த நாவலில் முனைப்புக் கொள்கின்றன.

நாவலின் மையக்கரு காதல்தான்! ஆனால் புதுமைப்பித்தன் கூறியது போல் “காதலும் கத்தரிக்காயும்” என்று புறம் ஒதுக்கிவிடும் காதல் அல்ல. “காதலினால் மானுடர்க்கு சக்தி உண்டு” என்று பாரதி கூறிய காதல்.

இருபது தசாப்தங்களாக இந்த நாட்டின் செழுமைக்காக உழைத்துழைத்தே ஒடுங்கிப்போன ஒரு மக்கள் கூட்டத்தினரின் மத்தியிலிருந்து "இங்கேயும் காதல் வரும்" என்று மெலெழுகின்ற காதல்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் எழுத்தாளுகை, கவித்துவ நடை, மனிதநேய மனம் இந்தக் காதலை ஒரு நாவலாகக் கட்டி எழுப்பி இருக்கிறது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு கவிஞராகவே அதிலும் ஒரு மரபுக் கவிஞராகவே சுவடுகள் பதித்துள்ள ஒரு கவிஞரின் முதல் நாவல் இது.

மலையக நாவல் இலக்கியத்தினைச் செழுமைப்படுத்தும் வல்லமை இந்த நாவலுக்குக் குறைவாக இருக்கலாம் என்றாலும் ஒரு கவிஞராகவே அறியப்பட்ட டொக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் எதிர்கால உரைநடைப் படைப்புக்களைச் செழுமைப்படுத்தும் வல்லமை இதற்கு நிறையவே இருக்கிறது. வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்
**தெளிவத்தை ஜோசப்**

35, N. H. S. HEKITTA,
WATTALA, SRI - LANKA.

20.11.1999

# நான் ஏன் இதை எழுதினேன்

1942ஆம் ஆண்டு மலையகத்தின் உடத்தலவின்னை கிராமப் புறப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக எனது தந்தையார் புலவர்மணி, ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் மாற்றலாகிச் சென்றார்கள். தந்தையாரோடு தாயாரும் எனது மூத்த சகோதரியும் சகோதரரும் அங்குதான் வாழ்ந்தார்கள்.

1943ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நான் பிறந்தேன். என் மலர்வும் மழலைக் காலமும் அந்த மலையக மண்ணில்தான் கழிந்தன.

மீண்டும் என் சகோதரிக்குத் துணையாக என் மைத்துனர் கற்பித்த தெல்தோட்டைக் கிராமத்தில் வாழும் பாக்கியம் பெற்றேன்.

சுற்றியும் தேயிலைச் செடிகளின் பசுமை கொஞ்சு, இயற்கை எழில் மிகுந்த மலைப்பிரதேசத்தில் என் இளமைக்காலத்தின் சில வருடங்கள் மகிழ்வாகக் கழிந்தன.

அக்காலை அண்டியுள்ள மலையகக் கிராமங்களுக்குச் சென்று வரும், வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. தோட்ட லயங் களைத் தாண்டித் தாண்டித் தேயிலைச் செடிகளுக்கிடையிலே நெளியும் சிறுசிறு பாதைகளில் அடிக்கடி நான் போய்வருவேன்.

தோட்டத்து மக்களின் வாழ்வும் , அவர்தம் துயரங்களும், என் பிஞ்சு மனத்தில் அன்றே பதிவாகிப்போயின. அவர்களின் வாழ்வை எண்ணி நான் வருந்தியதுண்டு.

கோணிச் சாக்கினைத் தலைக்கவசமாகவும் போர்வை களாகவும் அணிந்து கொண்டு, பனிக்குளிரில், கூடை சுமந்து கொழுந்து பறிக்க அவர்கள் சேர்ந்து வருவது கண்டு நான் சோர்ந்து போனநிலைமைகளை இன்றும் நான் என் நினைவில் இட்டுப் பார்க்கின்றேன்.

வீட்டைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டத்தில் மும்மூன்றாய்த் தளிர் பறித்து அவர்கள் தோள் தொங்கும் கூடைகளில் நானும் போட்டு மகிழ்ந்த பசுமையான நினைவுகள் இன்னும் என் நெஞ்சத்துள் பதிந்து கிடக்கின்றன.

மலையின் உச்சியில் இருந்து கீழ்நோக்கிச் செடிகளிடையே, சுற்றி சுற்றி ஓடி வந்த இளமைக்கால அனுபவங்கள் எனக்குக் கவிதைகள் பாடத் துணைநின்றன.

"மாருதம்" என்ற பெயரில் நூற்றுக் கணக்கான கவிதைக்ளைக் "காங்கிரஸ்" பத்திரிகையில் எனது குருவாக நான் வரித்துக் கொண்ட தமிழறிஞர் S.T. சிவநாயகம் ஐயா அவர்களின் பணிப்பின் பேரில் எழுதி வந்தேன்....

இவ்வாறு எனது "பனிமலையின் பூபாளம்" கவிதைத் தொகுதியில் குறிப்பிட்டுள்ளேன். இதுவே இந்நாவலுக்குப் பொருந்தும் வரிகள் என்பதனால் இங்கும் "நான் ஏன் இதனை எழுதினேன்" என்னும் முன்னுரையிலும் சேர்த்துள்ளேன்.

கவிதைத் துறையில், அச்சில் வந்த எனது "மஹ்ஜபீன் காவியம்", "புனித பூமியிலே காவியம்" என்பவற்றோடு வெளிவராத இன்னுமிரு குறுங்காவியங்களும், "பண்டாரவன்னியன் காவியமும்" பல்வேறு கவிதைகளுடன் வெளிவந்த மூன்று கவிதைத் தொகுதிகளுடனும், என் இலக்கியப் பயணம் தொடர்ந்தாலும் சிறுகதை எழுதுவதிலும் என் நாட்டம் பிறந்தது.

அதன் பலனாய் எனது சில சிறுகதைகள் பத்திரிகைகளில் பிரசுரம் கண்டன. அதனால் ஏற்பட்ட உந்துதலால் எனக்கு நாவல் எழுதும் விருப்பு அதிகமாயிற்று. அதன் விளைவே, எனது 'கருகாத பசுமை' என்னும் இச் சிறு நாவலாகும்.

கதைக்கருவாக மலையகத்து மக்களின் வாழ்வே எனக்கு முதல் முதலில் நினைவுக்கு வந்ததால், ஒரு இலட்சியப் பெண்ணை என் மனத்துள் சிருஷ்டித்து, அவளைச் சுற்றியே கதையை நகர்த்தியிருக்கின்றேன்.

வாசகர்கள் என் புதுத் தமிழ்ப்பணிக்கு ஊக்கந்தர வேண்டுகின்றேன்.

அன்போடு
**ஜின்னாஹ்**

# கருகாத பசுமை

அன்று சம்பள நாள் கையில் கிடைத்த அந்த மாதத்தின் தேறலை எண்ணிப் பார்க்காமலேயே கையுள் இறுகப் பொத்திக்கொண்டு திரும்பி நடந்தாள் தேவி. தினமும் பழகிப்போன கால்கள் தெரிந்த பாதையில் தொடர்ந்து நகர்ந்தன.

தோட்டத்துக்குச் சொந்தமான சிறு சிறு வாகனங்கள் செல்லும் குறுகிய கல்லுப்பாதையைக் கடந்து, செடிகளிடையே ஊரும் சிற்றடிப்பாதையுட் புகுந்து லயத்தை அடைந்தாள்.

காம்பறா வாசலில் காத்து நின்றாள் வாஸந்தி. காலைப்பனியில் குளித்துப் பசுமை கொஞ்சத் தளிர்பரப்பி நிற்குந்தேயிலைச் செடிபோல.

குளித்தபின் காயாதத் கூந்தலைக் கலைத்துவிட, முகம் மேகத்துள் ஒளிந்த முழுமதி போல் தோன்றிற்று. வாளிப்பான உடல் வாஸந்திக்கு, செம்மை கலந்த பொன்னிற மேனிக்குத் தளிர்வண்ணப் பட்டாடை செம்மையாய்ப் பொருந்தியது.

அவள் அக்காளைக்கண்ட மகிழ்வினால் புன்னகைத்தாள். வெண்பிஞ்சுச் சோள விதையடுக்கி வைத்தது போல் பற்கள் முத்தென ஒளிர்ந்தன, பதிலுக்கு முறுவலித்த தேவி தங்கையைக் கண்களுள் வாங்கிக் கொண்டாள். பூரித்துப் போன அவள் நெஞ்சம் ஒரு கனத்துள் கனத்துப் போனது.

அம்மாவை எண்ணினாள். விழியோரம் கசிந்த கண்ணீரைக் குனிந்து விரல்நுனியால் தட்டிவிட்டாள். நெருங்கிவந்தாள் வாஸந்தி. நெஞ்சோடு அனைத்துக் கொண்டாள் தேவி.

விழிகள் பெருக்கிய சுடுநீர், தங்கையின் விரிந்த கூந்தலில் வீழ்ந்து வடிந்தது. அவள் விம்மவில்லை. பழக்க தோஷத்தால் அதுவாகவே அடங்கிக் கொண்டது. புத்தம் புது மலர் சிறிய அதிர்வுகளையும் தாங்கிக் கொள்ளாது என்பதை அவள் அறிவாள்.

தன்னைக் கருக்கித் தன் உடன் பிறப்புகளுக்கு மணந்தரும் அகிலல்லவா அவள்!

"அம்மாடி, குளிச்சியா?" என்றாள் தேவி.

"ஆமாக்கா! பொன்னுமாமியும் காவேரியோட வந்தா. பக்கத்துப் பீலியில குளிச்சிட்டு வந்தேங்கா", என்றாள் பதிலுக்கு வாஸந்தி.

"ராஜா எங்கம்மா?"

பள்ளித்திடலில் விளையாடிவிட்டு அழுக்கேறிப்போய் அப்போதுதான் அங்கு வந்த ராஜா, தானே பதில் சொன்னான்.

"இந்தாக்கா நான் வாறேங்கா" அவன் இருந்த தோற்றத்தைக் கண்ட தேவி, தன்மனக் கவலை மறந்து வாய்விட்டுச் சிரிக்கலானாள். அடுப்பினுள் படுத்துறங்கும் பூனைபோல நின்ற அவனைக் கண்ட வாஸந்தியும், அக்காளோடு கூட்டுச் சேர்ந்தாள்.

வெட்கிப் போன ராஜாவின் கண்கள் கோபத்தால் விரிந்தன. அதனை வெளிப்படுத்த அவனுக்கு வாஸந்தியே கிடைத்தாள். கையில் கிடைத்த கல்லோடு அவன் அவளைத் துரத்த அவள் வீட்டுக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள். சிரிப்பு உள்ளே இன்னும் ஓயவில்லை.

ராஜாவின் கோபத்தை அடக்க அவனை தேவி ஆதரவாகத்தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

பகலெல்லாங் காய்ந்து களைத்துப்போன துயரம் தாங்காது, தன் ஒளிக்கதிர்களைச் சுருட்டிக் கொண்ட கதிரவன், குன்றுகளிடையே காணாது போனான். லயத்தின் எல்லாக் காம்பறாக்களிலும் குப்பி விளக்குகள் தங்கள் ஓய்வினை முடித்துக் கொண்டு மெல்லச் சிரித்தன. பத்தாம் இலக்கக் காம்பறாவிலும் அதிலொன்று தன் பணியைத் தொடங்கியது.

ராஜா வாசலில் இருந்த பானைத் தண்ணீரால் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு புத்தகமொன்றோடு சங்கமமானான். அக்காவின் அணைப்பு அவன் கோபத்தை நன்றாகவே தணித்திருந்தது. வாஸந்தியின் முகத்தை அவன் பார்க்கவே இல்லை.

அடுப்பில் வெந்து காய்ந்த நீர், சூடான பானமாக நிறம்மாறி தேவியின் கைக்கு மாறியது. வாஸந்தி பரிமாறினாள். சூடான தேனீரில் மெல்லென எழுந்த ஆவியினூடே வாஸந்தியின் அழகிய முகத்தை தேவி

உற்று நோக்கினாள்.

தாயையே உரித்து வைத்த முகம். ஆவியுலகில் அன்னையைக் காணும் உணர்வொன்று அவள் மனத்திரையில் நிழலாடி மறைந்தது. தன்னையே வெறித்து நோக்கும் அக்காவின் பார்வை வாஸந்திக்கு அதிர்ச்சியைத் தந்தது. பக்கத்தில் குந்தியவாறே.

"என்னாக்கா?" என்றாள்

வாஸந்தியின் கேள்விக்கு தேவி பதில் கூறவில்லை. மௌனமாக அருகணைத்துத் தன்னோடு தானாய்ச் சேர்த்துக் கொண்டாள். அந்தப் பாசமிகு அணைப்பு, பனியில் நனைந்த தேயிலைத் தளிர்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டது போன்ற உணர்வினை வாஸந்திக்குத் தந்தது.

சூடான தேனீர் தேவியின் சிந்தனைக்குச் சூடேற்ற அவள் எண்ணங்கள் பின்நோக்கி நகர்ந்தன.

## 2

"ஏண்டீ! அறிவு கெட்டவளே, தண்ணிபோட துட்டில்லண்ணா, நீ ஓம் பணத்தில தரவேண்டியது தானே? புள்ளைக்கிப் பாலில்லண்ணா நாளைக்கி வாங்கிக்க; செத்தா போவுது கயுத?... எட்றி அஞ்சு றூவா! குட்றி நாயிமவளே!!"

மாரப்பன் சினவெறி கொண்டு கத்தினான். அவன் அவளை நெருங்குமுன் ராசாத்தியின் கைகள் அவளை அறியாமலேயே சேலைத் தலைப்பை அவிழ்க்கத் தொடங்கின. அவளுக்குத் தெரியும், இன்னும் ஒரு நொடிப் பொழுது தாமதித்தாலும் அவன் கூந்தலைப் பிடித்திழுத்து நிலத்தில் வீழ்த்தி அடிப்பான்.

தினமும் நடக்கும் சேதிதான். எனினும் தேவிக்கு அவை அன்றன்றைக்கு ஒவ்வோர் புதுப்புது அனுபவத்தையே தந்தன. தந்தையின் மிருக வெறிக்குத் தனது தாய்படும் துன்பத்தை எண்ணி அன்றைய அந்தப்பிஞ்சு உள்ளம் பதறி நடுங்கும்.

தோட்டத்தின் பெரும்பாலான வீடுகளில் இந்தக் கோரக்காட்சிகள் பழகிப்போன நிகழ்வுகள் தான். என்ன செய்வது!... சுயநலமிகளான ஆண்கள்

தங்கள் உடற் சோர்வை மறக்கப் பருகும் நச்சுத்திராவகம், மாதர்களின் வாழ்வோடு போராடி தினமும் அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தும்.

மாரப்பன் கட்டிய மஞ்சட் கயிற்றைத் தனது பதினாறாம் வயதில் சுமக்கத் தொடங்கிவள் ராசாத்தி. ஒருவருடம் தாண்டி, தேவி பிறந்தாள். குடிகாரன் என அறிந்தும் தான் ராசாத்தி வாழ்க்கைப் பட்டாள்.

குடியின் கொடுமையை அந்தச்சின்ன வயதில் அவள் தெரிந்திருந்தாலும், காலத்தில் கைப்பிடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பெற்றோரின் கட்டாயத்தால், திருமணத்திற்கு உடன்பட வேண்டி இருந்தது ராசாத்திக்கு.

தேவிக்குப்பின் நீண்டன வருடங்கள். குடிகாரக் கணவனுக்கு அடுக்கடுக்காகப் பெற்றுப் போடக் கைகொடுக்கக் கடவுளுக்கே இஷ்டமில்லை போலும்.!

பத்தே ஆண்டுகள் தான். பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு, குடும்பச் சுமைக்குத் தோள் கொடுத்தாள் தேவி. தோட்டத்து டாக்டர் ஐயாவின் வீட்டுச் சேவகம் செய்யச் சென்றதால், மாதாந்தம் குடும்பச் செலவுக்குச் சிறு தொகை சேர்ந்தது.

தாயின் வருமானம் ஒன்றே போதாதபோது, அவள் பெற்ற சின்னச் சம்பளம் தந்தையின் குடிப்பழக்கத்திற்குச் செங்கம்பளம் விரித்தது! ராசாசத்தி மீண்டும் கருவுற்றாள். வேண்டாத காலத்தில், விரும்பாத வரவை எண்ணி அவள் வருந்தினாலும், தான் பெற்ற ஒற்றைப் பிள்ளைக்கு உற்றதோர் துணையென எண்ணி உடல் தாங்கினாள்.

வாஸந்தி பிறந்தாள். தொடர்ந்தது இரண்டே ஆண்டுகள் தான், ராஜாவும் பின் தொடர்ந்தான். குழந்தைகளை வளர்ப்பதோடு தோட்டத்து வேலையும் ராசாத்தியை உருக்குலையச் செய்தது. ஒரு காலத்தில் தோட்டத்தின் அழகுச் சிலையே ராசாத்திதான். பெயருக்கேற்றவாறு அவள் தன்னை அலங்கரித்துப் கொள்வாள்.

சின்ன வயதுதான் தேவிக்கு, எனினும், இராப் பொழுதில் வீட்டுக்கு வருவாள்; தாய்க்குத் தன்னாலானதைவிடக் கூடவே செய்வாள். திடீரென ஒருநாள் இரத்த வாந்தியெடுத்தான் மாரப்பன். அடிக்கடி நோய்வாய்ப்

பட்டாலும், அவனால் குடிப்பதை நிறுத்த முடியவில்லை.

பிணம் போல நடமாடிய அவன், அன்று பரிகாரம் பெற முன்னமே பிணமாய்ப் போனான். அந்தக் குடும்பத்தின் பெரியதோர் 'சுமை' நீங்கிவிட்டதாகவே தோட்டத்து மக்கள் எண்ணினர்.

ஆனால் ராசாத்தி! தன் விதவைக் கோலத்தை எண்ணி மனம் நொந்தாள். பேருக்கேனும் இருந்த தந்தையைப் பறிகொடுத்த தேவிக்கு, அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தரித்து ஓரிடத்தில் வினாடியும் தாமதிக்காத கால தேவன், தன்பணி தொடர்ந்தான். இருவர் உழைத்தும், ஒருவரின் உழைப்பே தேறியதால், வறுமை அவர்களைத் தொடர்ந்தே வந்தது.

ஒருவேளை உணவையும் உண்டு மகிழாத அந்தத் தோட்டத்து மக்களின் வாழ்வு முறைக்கு, அவர்களும் வழக்கப் பட்டிருந்தனர். நாட்டுக்கே உணவூட்டும் பொருளாதாரத்தின் முதுகெலும்புகள், நாளொரு வேளைக்கும் நாதியற்று வாழ்ந்தனர்.

வாரமொரு வேளையும் வயிறார உண்ணாத ராசாத்தி, போஷாக்கின்மையால் நோயுற்றாள். வறியவர் வாழ்வின் வரமெனும் நோயான 'ஷய' ரோகமும் அவளைத் தொற்றிக் கொண்டது.

நோய் உக்கிரம் அடையும் வரை அதனை யாரும் பொருட்படுத்தவில்லை. மருத்துவ வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த அந்தத் தோட்டத்து வாழ்வின் சகசமான இழப்பில் ராசாத்தியும் ஒருநாள் சங்கமமானாள்.

பதினைந்தே வயதுதான் தேவிக்கு. ஐந்தும், மூன்றுமாய்ச் சுமையிரண்டை எப்படிச் சுமப்பாள்? பிறந்ததில் இருந்து தொடர்ந்து வரும் வறுமை, இருந்தும் இல்லாது வாழ்ந்த தந்தையின் பிரிவு, அனைத்துமே தானாகி, அன்புக்குப் பொருளாகி, அகாலத்தில் அணைந்து போன அன்னையின் இழப்பு, இந்தப் பிஞ்சு வயதில் தன்னால் சுமக்க இயலாத சுமைகளை, எப்படி அவளால் ஏற்றுக்கொள்ள முடியும்.

தோளில் சுமக்கும் வெற்றுக் கூடைகளையே, தங்கள் வாழ்வின் நிதர்சனமாகக் கொண்ட அந்த மலைப்புற மக்களில்; அவள் யாரைத்தான்

துணைக்குத் தேடுவாள்?

தனிமரமாய்த் தவித்து நின்ற அந்தச் சூன்யத்துள், ஒரு நிரந்தரமான ஒளிக் கீற்றாய் தோன்றினாள் பொன்னுமாமி. பொன்னுமாமி ராசாத்திக்கு மாமன் மகள். மாரப்பனின் கெடுபிடியால் குடும்பங்கள் இரண்டும் சற்று விலகியே இருந்தன.

இரத்த பந்தம் தேவியைத் தனித்துநிற்க விடவில்லை. வசதியாக இல்லாவிட்டாலும், அவர்கள் வாழ்வு, வறுமையற்றுக் கழிந்ததால், பொன்னுமாமிக்கு ராசாத்தியின் குழந்தைகள் பாரமாகத் தோன்றவில்லை.

தன்கடைசிப்பெண் காவேரிக்குத் துணையாக வாஸந்தியையும், ராஜாவையும் அவள் சேர்த்துக் கொண்டாள். தேவிக்குத் தோட்டத்தில் வேலை பெற்றுத் தந்தது மட்டுமல்லாது, அவள் வேலைக்குப் போய்த் திரும்பி வரும்வரை குழந்தைகளையும் அன்போடு பராமரித்தாள்.

கணவனும், மூத்த மகனும் உழைப்பதால், பொன்னுமாமி வேலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டாள். உடன் பிறந்தாளாயினும், தேவி தாய்ப்பாசத்தை அந்தப் பிஞ்சு மனங்களில் மிக அதிகமாகவே விதைக்கலானாள். விபரம் அறியாத அவர்களும், அதனை அவ்வாறே ஏற்றுக் கொண்டனர்.

இரத்த உறவால் உண்டான பொன்னுமாமியின் பாசத்திற்கும் குறைவிருக்கவில்லை. காவேரியோடு வாஸந்தியும் கூடவே பள்ளி சென்று வந்தாள். ராஜாவும் காலத்தில் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

வாஸந்தி படிப்பிலேயே பெரும் பொழுதைக்கழிப்பாள். காவேரியின் துணை அவளுக்குக் கற்பதிலும் உதவியது. வகுப்பில் எப்போதுமே வாஸந்தி முதன்மை பெற்றாள். தேவிமனம் பூரித்து மகிழ்ந்தது.

வேகக் காற்றில் விசை கொண்ட சருகாய் வருடங்கள் ஓடி மறைந்தன. பதினைந்தே வயதில் வாஸந்தி கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் உயர் சித்தி பெற்று, உயர்தரப் பரீட்சைக்கு ஆயத்தமானாள்.

தனக்குத் தன் பெற்றோர்களால் தரமுடியாத ஒன்றைத், தான் தன் உடன் பிறப்புகளுக்குத் தரவேண்டுமென்ற தேவியின் வைராக்கியத்தின் வெற்றிப் பாதை திறந்து கொள்ள, வாஸந்தியின் ஆற்றல் வழி கோலியது.

கால நெருப்பில் கருகிவிடாது, தன்னோடு பிறந்த மலர்களுக்கு ஊட்டமும், பாதுகாப்பும் தந்தாள் தேவி. அது அறிவு மணமாக வாஸந்தி மூலம் பிரவாகிக்கத் தொடங்கியது.

## 3

தன் சிந்தனையிலிருந்து ஒரு கணம் விடுபட்ட தேவி, மடியை நோக்கிளாள். வாஸந்தி கண்ணயர்ந்து கிடந்தாள். பச்சைக் குழந்தையின் பவ்யம் அவள் முகத்தில் அப்பிக் கிடந்தது.

அவள் தலையை ஆதரவாய் மெல்லத் தடவியவாறே, மீண்டும் தன் நினைவுகளைப் பின் நோக்கி ஓடவிட்டாள். காம்பறாவின் முன்பக்கச் சுவர் அவள் கண்ணில் பட்டது. இருண்டு தோன்றும் தன் எதிர்காலத்தைச் சுட்டி அது பரிகசிப்பதுபோல்; அதில் புகைமண்டிக் கிடந்தது.

அவள் அறிவாள். கூலிகளாக வந்து, தங்கள் உதிரத்தையே வியர்வையாக்கி, தசையை உரமாக்கி, மலைமண்ணைப் பண்படுத்தி; இலங்கை என்னும் எழிற்சுனைக்கு ஜீவன்தரும் தோட்டத்து மக்களின் வாழ்வும், பெரும்பாலும் புதுப்பிக்கப்படாத அந்தப் புகைபடிந்து சுவரையே பிரதிபலிப்பதை.

திருமண வாழ்வைத் தாண்டி வரும், தன் வாழ்வை எண்ணித் தேவி ஒரு கணம் யோசித்தாள். தன் இளமையைச் சொந்தங் கொள்ள எத்தனை போட்டிகள். வறுமையைச் சாதகமாக்கி, வாலிபங் கொண்ட தனிக்கட்டைக் கிழடுகள் வாய்விட்டே கேட்ட விந்தை.

தேவி மெல்லச் சிரித்தாள். அதில் முற்றும் சோகமே படர்ந்திருந்தது. சட்டென தேவியின் சிந்தனையுள் ஒரு நிகழ்வு நினைவுக்கு வந்தது. அது அவள் கண்களையும் பனிக்கச் செய்தது. ஒரு நாள்.....

"தேவி"! என்ற குரல் கேட்டு, குரல் வந்த திக்கை நோக்கினாள் தேவி. வாசலில் வீரபுத்திரன் நின்று கொண்டிருந்தான்.

"மச்சான்! வாங்க உள்ளே" என அவனை வரவேற்றாள் அவள்.

ராஜாவின் தலையில் மண்டிக்கிடந்த பேன்களை ஒவ்வொன்றாக உருவிக் கொண்டிருந்த அவள், அவனைப் போக விட்டு எழுந்திருந்தாள்.

வீரபுத்திரனின் வருகை அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

மடியில் கிடந்த ராஜா தன் பரட்டைத் தலையை கைகளால் கோதியவாறு அங்கிருந்து நகர; வீரனுக்கு உட்கார வழி செய்தாள் தேவி.

வீரபுத்திரன் அவள் தந்த மரப்பெட்டியில் தன்னை இருத்திக் கொண்டு ராஜாவைப் பக்கத்தில் அழைத்தான். அக்காவின் பிடியிலிருந்து தப்பியதே போதுமென்று, அவன் அழைப்பைக் காதில் வாங்கிக் கொள்ளாதவனாக ஒரு நன்றிப் புன்னகையை உதிர்த்தியவாறு அங்கிருந்து அகன்றான் ராஜா. அவன் நிலையைக் கண்டு தேவியும், வீர புத்திரனும் வாய்விட்டுச் சிரித்தனர்.

"கொஞ்சம் இருங்க மச்சான் தேத்தண்ணி கொண்டு வாறேன்" என்றபடி உள்ளே சென்றாள் தேவி. தனித்துவிடப்பட்ட வீரன் திண்ணையில் இருந்தவாறு வெறித்துக் கிடந்த வானத்தை நோக்கினான்.

நீலவானில் வெண் மேகங்கள் உருமாறிமாறி நகர்ந்து கொண்டிருந்தன. வீர புத்திரனின் மனத்திரையிலும் எத்தனையோ எண்ணக் கலவைகள் புதுப்புது வண்ணக் கோலங்களைத் தீட்டிக் கொண்டிருந்தன.

தீர்க்கமான ஒரு முடிவோடு தான் அன்று அவன் தேவியை நாடிவந்தான். தடையேதுமில்லாது பேசும் வாய்ப்புக் கிடைத்தாலும் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை.....

தேவி தேனீர் தந்தாள். அவன் அதனை வாங்கிக் கொண்டான். ஏனோ அவன் கரங்கள் மெல்ல நடுங்கின. அதனை தேவி அறியாதவாறு கோப்பையை உறுதியாக அவன் பற்றிக்கொண்டான். மெல்லத் தேனீரை உறிஞ்சிக் குடித்துவிட்டு, மீண்டும் கோப்பையை அவளிடம் தந்த வீரபுத்திரன், வாசற்படியில் உட்கார்ந்து கொண்டிருந்த தேவியைப் பார்க்காமலேயே பேசத் தொடங்கினான்.

"தேவி! அம்மா என்னைக் கல்யாணம் பண்ணச் சொல்றாங்க..." என்றான். ஒரு புதிரை அவிழ்க்கத் தொடங்குபவன் போல. தேவியின் நெஞ்சுக்குள் அவன் வார்த்தைகள் `சுள்' என்று ஒரு வலியை ஏனோ ஏற்படுத்தியது. சற்றுத் தயங்கி அவள் கேட்டாள்.

"நல்லது தானே, சந்தோஷம்! யாரு மச்சான் பொண்ணு"

உடன்பதில் சொல்லவில்லை வீரபுத்திரன். சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு.

"இன்னும் பொண்ணு பாக்கல, இனிமே தான் பார்க்கணும்" என வார்த்தைகளை மிக ஒறுத்துப் பதில் சொன்னான் வீரபுத்திரன், அவளிடமிருந்து மீண்டும் ஒரு வினாவை எதிர்பார்த்தவனாக.

"மச்சான் ஒங்க தகுதிக்கு இப்ப இங்க பொண்ணு இல்ல மச்சான் டவுண் புறத்திலதான் யாரையாவது பார்க்கணும்" என்ற அவள் பதிலில் ஒரு ஏக்கம் தொனித்தது.

நீண்ட நேர மௌனம். இருவருமே பேசிக் கொள்ளவில்லை. இப்போதும் அவன் பார்வை நிலத்திலேயே படிந்து கிடந்தது. தேவியின் கண்கள் அவனை அளந்து கொண்டிருந்தன.

அமைதியைக் கலைத்து மீண்டும் வீரபுத்திரன் பேசினான். தொடர்ந்து அவன் வாயில் வெளிப்பட்ட வார்த்தைகள், தேவியை நிலைகுலையச் செய்தன. அவள் அதிர்ந்து போனாள்.

"ஒன்னையே பண்ணிக்கலாமெண்ணு எம்மனசுக்குப் படுது தேவி" என்ற அவன், அவள் வாய்திறக்குமுன் தொடர்ந்து வார்த்தைகளை அடுக்கினான்.

"அம்மா கல்யாணம் பண்ணிக்கச் சொன்னப்ப, எனக்கு எதுவுஞ் சொல்லத் தோணல. எம்மனசில நீ எப்பவோ பதிஞ்சிட்ட தேவி. அம்மா மனசு புரிஞ்சிக்காம, நான் அத யாருக்கும் வெளிப்படுத்தல. ஒருவாரம் கழிச்சு இன்னைக்குக் காலையில அம்மாகிட்ட என் விருப்பத்த சொன்னேன். அம்மா சம்மதிச்சிட்டா. அதனாலதான் இப்ப ஒன்னப்பாக்க வந்தேன்" என்றான்.

தேவி அதிர்ச்சியடைந்தாள். சற்றும் அவள் எதிர்பார்க்காத அந்த வார்த்தைகள், ஏனோ அவளைச் சங்கடத்துள்ளாக்கின. வார்த்தைகள் பதிலாக உருப்பெறாமல். சிக்குண்டு தவித்தன. அவள் மௌனமானாள். பலவாறு அவள் தன்னுள் தோன்றி மறைந்த எண்ணமின்னல்களைக் கட்டுப்படுத்த

இயலாது தவித்தாள்.

முன்னர் பருவத்தின் எழிற்சியால், சில சமயங்களில் அவள் மனத்தில் உண்டான உணர்வுகளின் முன்; வீரபுத்திரனே மனத்திரையில் தோன்றினாலும்; அதனை அவ்வப்போதே மாற்றிக்கொண்டிருந்தாள் தேவி.

தனது கடமையென, தான் வரித்துக்கொண்ட ஒரு உறுதிப் பாட்டினை, அந்த மனஉணர்வுகளுக்குப் பலியாக்க விரும்பவில்லை அவள். தன் உடன் பிறப்புகளுக்கு ஒரு உயர்வான வாழ்வினை ஏற்படுத்தித் தருவதே, தன் இலட்சியமாக முடிவாக்கிக் கொண்டிருந்தாள்.

பிறந்தது முதல் தான் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு, அவர்களும் ஆளாகி விடக்கூடாதே என்னும் ஏக்கம், அவளுக்கு எப்போதும் இருந்து கொண்டே வந்தது.

அவளுடைய இலட்சிய வெறிக்கு முன்னால், அவள் இளமனத்தின் நியாயமான ஆசைகளும் பொசுங்கிப் போயின. தனது விருப்பத்திற்கு நிச்சயம் தேவி சம்மதிப்பாள் என்ற திடமான நம்பிக்கையோடு தான், வீரபுத்திரன் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான். ஆனால் முடிவு வேறாக அமைந்தது. சில நிமிடங்கள் ஓடி மறைந்தன. அந்த இடைவெளிக்குள், தேவியின் மனப்போராட்டம் தொடங்கி முடிந்து, ஒரு தீர்க்கமான முடிவையும் பெற்றிருந்தது. இருப்பினும் அவள் உள்ளத்தின் உணர்வுகள் அவளாலேயே மறுக்கப்பட்டு, அடங்கி ஒரு முடிவுக்குள் வரும்போது கண்கள் மட்டும் அவற்றின் பிறவிக் குணத்தைக் காட்ட மறக்கவில்லை.

தான் வந்த காரணத்தைச் சொன்னதும், அவள் சந்தோஷமடைவாள் என எதிர்பார்த்த வீரபுத்திரன், அவள் கண்கள் பொழியும் கண்ணீரைக் கண்டதும் செயலற்றுப் போனான். அவள் கண்ணீருக்குக் காரணத்தை அறிய அவன் விழிகளே பேசின. அதனைப் புரிந்துக்கொண்ட தேவி, தன் முடிவை வார்த்தைகளாக வெளிப்படுத்தினாள்.

"என்ன மன்னிச்சுடுங்க மச்சான்! அந்தப் பாக்கியம் எனக்கு எப்பவுமே கெடைக்காது. கல்யாணம் பண்ணி, எனக்குன்னு ஒரு வாழ்வ நான் ஆக்கிக்கிட்டா; என்ன நம்பி வாழுற தம்பிக்கும், வாஸந்திக்கும் என்ன ஆகுமோண்ணு நான் பயப்படுறேன். என்ட ஒடன் பொறப்புகளுக்கு துரோகம்

பண்ண நான் விரும்பல. அந்தத்துணிவும் எனக்கில்ல மச்சான். அவுங்க வாழ்வுதான் என் வாழ்வு. நான் எப்பவோ என் ஆசைகள் மேலே மண் போட்டு மறச்சிட்டேன்".

"உடன் பெறப்புகளுக்காக தன் வாழ்வை அர்ப்பணிச்ச ஒரு பொண்ணு எப்படி ஒங்களோட சந்தோஷமா வாழ முடியும். அது ரெண்டுவகையில துரோகம் பண்ணுற மாதிரி. நீங்க என்ன மறந்திடுங்க".

அவள் சொற்கள் மிக உறுதியோடு வெளிப்பட்டன. மீண்டுமொரு வார்த்தை அவன் பேச இடமளிக்காதவாறு மிகத்திடமாக அவள் தன் மறுப்பைத் தெரிவித்தாள்.

ஒரே கேள்விக்கு ஒரே பதிலாக அவர்கள் உரையாடல் முற்றுப் பெற்றதும், நொந்து போன இதயத்தோடும், பெரும் ஏமாற்றத்தோடும் சொல்லிக் கொள்ளாமலேயே வீரபுத்திரன் அங்கிருந்து அகன்றான்.

தேவியின் கண்ணீர் தடைப்பட்டிருந்தது. இரத்த பாசத்தால் ஏற்பட்ட தன்பொறுப்புக்களை எண்ணி, தான் கொண்ட முடிவு மிகச் சரியானதே, என அவள் உள்மனம் சொன்னது.

தன் உடன் பிறப்புக்களை உயர் நிலைக்கக் கொண்டுவர எண்ணும் தன் வைராக்கியத்தை எண்ணி; அந்தத் தோட்டத்துக் கூலி பெருமையுற்றாள்.

தன் வாழ்வையே அவர்களுக்கு அர்ப்பணிக்கச் சித்தமாகி, அதில் ஒரு படியையுந் தாண்டிய மகிழ்வு அவளுக்கு. வாஸந்தியின் பரீட்சைமுடிவு, அந்த மகிழ்வை அவளுக்குத் தந்திருந்தது. நம்பிக்கை ஊட்டியது.

அறிவு என்னும் ஒளி, தன் குடும்ப விளக்குகளில் ஓங்கிப் பிரகாசிக்க அவள் தன்னை நெய்யாக உருமாற்றிக் கொண்டாள்.

திறந்து கிடந்த யன்னலுடாக இருளைக் கிழித்தது அவள் பார்வை. வீரபுத்திரனின் நினைவு இப்பொது அவள் நினைவுகளிலிருந்து தப்பிச் சென்று நிமிடங்கள் பலவாயின.

கருங்கம்பளத்தில் வீசியெறிந்த வெண்முத்துகள் போல், இருண்டவானில் விண்மீன்கள் சிதறிக்கிடந்தன. அவள் சிந்தனைக் கடலின் எண்ண அலைகளைப் பிரதிபலிப்பதாயும் அது இருந்தது.

பொன்னுமாமி எத்தனை நல்லவள். தாயில்லாக் குறையை நீக்கும் தியாக நெஞ்சம் கொண்ட தாயவள். அவள் அரவணைப்பு அன்றில்லாது போயிருந்தால்.....! எண்ணிப்பார்க்கவே இயலவில்லை தேவிக்கு.

உடன் பிறப்புகளுக்காகத் தான் செய்யும் தியாகத்தைவிட, அவள் தரும் ஆதரவே நெஞ்சில் மேலோங்கி, நினைவெல்லாம் வியாபித்து நின்றது. தவறு கண்டு தாய்கூடத் தண்டிதிருக்கின்றாள். ஆனால் பிழைகண்டும், பொன்னுமாமி பொறுத்துக் கொண்டாள்; ஆதரித்தாள்.

நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்த அவள். தன் நினைவு கொண்டபோது ராஜா புத்தகத்தைத் தலையணையாக்கித் தூங்கிக் கொண்டிருந்தான்.

பொன்னு மாமிக்கு இரண்டு மகன்கள், ஒரே மகள். மூத்தவன் தான் வீரபுத்திரன், தேவியைவிட இரண்டு வயது மூத்தவன். தேவியை விரும்பியும் அவள் மறுத்ததால் சங்கரியைக் கைப்பிடித்தான். இரண்டு குழந்தைகளும் பிறந்தன. தேவியை மருமகளாகப் பெறமுடியாமற் போனது, பொன்னுமாமிக்குப் பெரிதும் ஏமாற்றமே. என்றாலும் அவள் பொறுப்பறிந்து தாங்கிக் கொண்டாள்.

வீரபுத்திரன் நகர்ப்புறத்தில், அவன் தொழிலுக்குத் தோதாக வாடகை வீட்டில் குடியேறினான். இளையவன் செல்வா. படித்துக்கொண்டிருந்தான். தேவிக்கு இளையவள் பெண் காவேரி. வாஸந்தியின் வயதொத்தவள்.

பண்புள்ள தந்தைக்கும், பொறுப்புள்ள தாய்க்கும் பிறந்து வளர்ந்த நல்ல மக்கள் அவர்கள்.

## 4

"அடியேய்! என்னா செஞ்சுகிட்டு நிக்கிற நீ? இன்னைக்கி லேட்டா வேற வந்தே! இப்போன்னா வேல செய்யாம கல்லுல குந்திக்கிட்டு இருக்கிற!"

கங்காணி முனியனின் கடுஞ்சொற்கள் காதில் விழுந்தபோது தான் தேவி உயிர் பெற்றாள். காலையில் இருந்தே அவளுக்குச் சற்றுச் சுரங்கண்டிருந்தது.

"வேலைக்குப் போகாதேக்கா. நான் ஸ்கூலுக்குப் போகாமே நிக்கிறேன். ராஜா மட்டும் போவட்டும்!" என்று தடுத்த வாஸந்தியின் வார்த்தைகள் அவளுக்கு தோட்டத்து டாக்டர் ஐயாவின் ஊசிபோல சுள்ளென்று நெஞ்சில் குத்தியது.

"இல்லகண்ணு எனக்கு ஒண்ணுமில்லடி? கொஞ்சங் கொத்தமல்லி அவிச்சுக் குடிச்சா எல்லாஞ் சரியாயிரும்.! நீ பொறப்புடு. ராஜா! அக்காவோட போடா!!".

என அவர்களைத் துரிதப் படுத்திவிட்டு, கூடவே எங்கே தான் வீட்டில் தங்கிவிட்டால், தனக்கு உடம்புக்குக் கஷ்டம் என்பதைத் தெரிந்து கொண்டு வீட்டில் அவளும் தங்கி விடுவாளோ என எண்ணி, அவர்கள் புறப்படும் போதே அவளும் கூடையைத் தலையில் போட்டுக் கொண்டாள்.

வரவரக் கூடும் சூரியனின் உஷ்ணம் போல, நேரம் செல்லச் செல்ல அவளின் சுரமும் அதிகரித்துக் கொண்டே சென்றது. இனிமேல் தனக்கு வேலைசெய்ய இயலாது என்ற நிலையில் மலைக்கல்லொன்றில் குந்தினாள் தேவி.

பக்கத்து நிரைகளில் நின்ற சின்னம்மாவும், கறுப்பாயியும் அவளின் நிரையையும் கவனித்துக் கொள்வதாகச் சொன்னதால் அங்கு சிறிது களைப்பாற எண்ணினாள்.

கங்காணி முனியனுக்கு ஏற்கனவே தேவிமேல் வைராக்கியம் இருந்தது. தன் உடற்பசிக்கு அவளின் ஏழ்மையை இரையாக்கப் பலமுறை இரந்து ஏமாந்து போனவன். அப்போதிருந்தே தேவியின் ஒவ்வோரு அசைவிலும் அவன் கண்கள் பதிந்திருந்தன.

இப்போது அவள் தனித்திருந்ததைக் கண்டதும் வார்த்தைகளால் சீண்டினான். "இல்ல கங்காணி வெள்ளனயில் இருந்து காய்ச்சல். வரவரக் கூடிக்கிட்டே போவுது. மேலுக்குத் தாங்கல...."

என்றபடி எழுந்திருக்க முயன்றாள். அவன் சுடுசொற்கள் அவளுக்குப் புதுத்தெம்பைத் தந்தன.

தலைத்துண்டைத் தட்டிப்போட்டுக் கொண்டு பாதி நிறைந்த கூடையை தலையில் மாட்டினாள். தன்னோடு கொழுந்து பறித்தவர்கள்

தன்னைத் தாண்டிச் சென்றிருந்தபோது, தான் பின்நோக்கி இருப்பதுவும் தேவிக்குத் தெரிந்தது.

இனிமேலும் கொழுந்தெடுக்க அவள் உடல் இடந்தரவில்லை. கங்காணி முனியனிடம் தன் நிலையைச் சொல்லி தன் இடத்துக்கு ஆள்போடக் கூறிவிட்டு, லயத்தை நோக்கி நடக்கத்தொடங்கினாள்.

உடலுக்கு இயலாத போதும், அம்மா எத்தனை நாட்கள் கூடைசுமந்து மலையேறி இருக்கின்றாள்!....

தோட்டத்து ஜனங்களின் அன்றாட வயிற்று நெருப்பை அணைக்க, அவர்கள் படும் துன்பத்திற்கு; அம்மாவின் வாழ்வே சான்றாக இருந்ததை தேவி அறிவாள்.

பாதையில் இறங்கி அடர்ந்த தேயிலைச் செடிகளுக்குள் புகுந்துபோகும் சிறிய சந்தின் ஊடாக, தேவி தன்கால்களைத் தடுமாற்றமாக ஊன்றினாள்.

கங்காணியின் தீச்சொற்கள் அவள் நடைக்கு உயிர்தந்தன. இரண்டு மூன்று திருப்பங்களைத்தாண்டி தேவி ஒரு குறுக்கு வழியுட்புகுந்தாள். அப்போது அங்கே எண்ணாத வேளையில் திடீரென அவள் முன் முனியன் தோன்றினான்.

தேயிலைச் செடிகளின் இடையிடையே புகுந்து அவளை அறியாமல் அவன் அங்கு வந்திருக்க வேண்டும்.

அவன் அவளை நெருங்கினான். இப்போது தேவி நிதானமடைந்தாள். தன்னை அறியாமலேயே தன் உடல் வலுப்பெறுவதை அவளால் உணர முடிந்தது. மனவலு விஞ்சியதால் ஏற்பட்ட உடல் வலுப்போலும்.

இனிமேல் நடக்கப்போவது என்ன என்பதை ஒரு நொடிக்குள் அவள் மனம் எடை போட்டது. அடுத்த கணம்.... அவள் சுமந்திருந்த கொழுந்துக் கூடை அவனை முந்திக் கொண்டது. முனியன் தன்னை நிதானப்படுத்தி எழுந்திருக்குமுன், நீரிப்பைத் தடுக்கத் தோட்டத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பருமனான கல்லொன்று, அவன் தலையைப் பதம் பார்த்தது.

அவன் தன்னுணர்வு பெற்று எழுந்திருக்கையில், தேவி அங்கிருக்கவில்லை. சிதறிக்கிடந்த கொழுந்தும் அவற்றைச் சுமந்து வந்த கூடையுமே முனியனைப் பார்த்து நகைத்தன.

வீட்டுக்கு வந்த தேவி, பொன்னுமாமியிடம் சென்றாள். நடந்தவற்றை அவளிடம் விபரமாகச் சொன்னாள்.

இப்போது அவளுக்குக் களைப்பாக இருந்தது. காய்ச்சலும் நெருப்பாய்க் கனத்தது. இருந்தும் தன்மனம் ஒரே நிலையில் தடுமாற்றமில்லாமல் இருப்பது அவளுக்கு வியப்பையும் தந்தது.

அவனைக் குறுக்கு வழியில் சந்தித்த கணமே, அவள் ஒவ்வொரு நொடியையும் குழப்பமின்றி நிதானமாகவே கடத்தி இருந்தாள். இத்தனைத் துணிவும் மனப்பக்குவமும், தனிமரமாய் நின்று இதுநாள் வரை வாழ்ந்து விட்டதால், அவளுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

பொன்னுமாமி தேவிக்கு ஆறுதல் கூறினாள். தனக்குப் பழக்கப்பட்ட கை வைத்தியங்களையும் செய்தாள். நடந்தது எதுவும் தோட்டத்தில் பொன்னுமாமியைத் தவிர வேறு எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவளே எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாமென தேவிக்கு அறிவுரை சொன்னாள். ஊருக்கு வாய்வந்துவிடும்; என்ற பயம் அவளுக்கு.

காய்ச்சல் தணியும் வரை, தேவி மலைக்குச் செல்லவில்லை. டாக்டர் ஐயாவிடம் மருந்தும் வாங்கினாள். ஐந்து நாட்கள் கடந்தபின் மீண்டும் கொழுந்து பறிக்க மலையேறியபோது முனியனைக் கண்டாள். தலைக்கட்டோடு நின்ற அவன் அதிகமாகக் குடித்ததால் வழியில் விழுந்து விட்டதாகக் கதையொன்றையும் கட்டி விட்டிருப்பது, விசாரித்தபோது தெரிய வந்தது தேவிக்கு.

வாழ்வில் நடந்த ஒரு கரிய நிகழ்வாகவே இதனை எண்ணி மறக்க முயன்றாள் அவள். இருந்தும் அவள் நெஞ்சிலிருந்து அதனை எடுத்தெறிய .அவளால் இயலவில்லை.

பொன்னுமாமியின் ஆறுதல் வார்த்தைகள் அவள் மனச்சுமைக்கு மருந்தாக அமைந்தன.

# 5

காலைப் பணிகளில் அக்காளுக்கு உதவியபின், தம்பியோடு பள்ளிக்கும் புறப்பட்டாள் வாஸந்தி. வாசலில் பொன்னுமாமியின் மக்களிருவரும் காத்து நின்றனர்.

அக்காவிடம் விடைபெற்று, நீண்டு வளைந்த அந்த மலையுச்சிப் பாட சாலைக்குச் செல்லும் வழியில் ஒருவர்பின் ஒருவராக நடக்கத் தொடங்கினர். நல்வரும் சிறிது தொலை செல்லும்வரை அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த தேவி பூரித்த மனத்துடன் கூடையைத் தலையில் தொங்கவிட்டாள்.

பசிய மரத்தின் உச்சாரக் கொப்பிலிருக்கும் தேன்வதைபோல தென்னை ஓலையால் வேயப்பட்டுத் தூரத்தில் தெரிந்தது அந்தப் பள்ளிக்கூடம்.

பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பாதையிலும் லயங்களில் வாழும் பிள்ளைகள் வதையை நோக்கிச் செல்லும் வண்டுகளாகச் சென்று கொண்டிருந்தனர். மரத்தாலும், ஓலையாலும், மூன்று கொட்டில்கள் ஒன்றை அடுத்து ஒன்றாக அமைக்கப்பட்டிருந்தன.

தலைமை ஆசிரியருக்குத் தனியறை இல்லை. பள்ளியின் முகப்பில் ஒரு நீண்ட இரும்புத்துண்டம் கட்டப்பட்டிருந்தது. இரும்புக்கழியால் ஓங்கிச் சிலமுறை அடிப்பது தான் பாடங்களைப் பிரிக்கும் ஒரே அறிகுறி.

தேவைக்கு ஏற்ப தொகை கூடியும் குறைந்தும் ஒலிப்பதை, எது எதற்கு என்று மாணவர்கள் தெரிந்து வைத்திருந்தனர்.

பள்ளிக்கூடத்தின் கீழுள்ள சமதரை, பண்படுத்தப்பட்டு "இளைஞர் விவசாயக் கழகத்தினர்" செய்திருந்த சிறுச்சிறு மேடைகளில் கோவா, நோக்கோல், கரட், வற்றாளை போன்ற மரக்கறி வகைகள் செழித்து வளர்ந்து காணப்பட்டன.

உற்பத்திப் பெருக்கத்துக்கு எவ்வாறு உதவலாம் எனப் பள்ளிப் பருவத்திலேயே பாடஞ்சொல்லித் தந்தார் யாழ்ப்பாணத்துப் பெரியய்யா. 'மலையக மக்களின் அன்றாட வாழ்வில் இன்றியமையாத ஒரு நிலை, நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தங்கள் உதிரத்தையே கொட்டித்தீர்ப்பது

தானே' என்ற எண்ணம் அவருக்கும் இருந்ததோ என்னவோ!. தினமும் காலையில் மேல்வகுப்பு மாணவர்கள், மரக்கறித் தோட்டத்திற்கு ஜீவநீர் இறைப்பார்கள்.

கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு பாத்தியையும் மாணவர்கள் பொறுப்பேற்றிருந்தனர். வருட முடிவுப் பரிசளிப்பு விழாவில், தமக்கே பரிசில் சேர வேண்டுமென்ற எல்லை மீறிய ஆசை; அந்த மாணவர்களிடம் மேலோங்கி நிற்பதை; அவரவர் பாத்தியின் பயிர்கள் பறை சாற்றின. ஒன்றையொன்று அவை செழிப்பால் விஞ்சி நிற்கும்.

செல்வாவும், வாஸந்தியும் ஒரே பாத்தியின் பொறுப்பாளிகள். தினமும் ஒருமித்து நீர்விட்டுக் களைபிடுங்கி, உரமிட்டுத் தங்கள் பாத்தியை மற்றவர்களுக்குப் போட்டியாகக் கருத்தாய்க் கவனித்தனர். அது அவர்களின் இளைய மனங்கள்போல் செழித்து வளர்ந்தன. ஒன்றை ஒன்று இணைந்தவாறே!.

❀❀❀❀

நாட்கள் ஒவ்வொன்றாய் உதிர்ந்து மாதங்களாய் அழிந்து கொண்டிருந்தன. செல்வா பரீட்சையில் சிறப்பான சித்தி பெற்றுப் பல்கலைக்கழகம் சென்றான்.

பொன்னுமாமி வீட்டில் மகிழ்ச்சிக்குக் குறைவே இல்லை. தேவியும் மிக்க மகிழ்வடைந்தாள். செல்வாவின் பல்கலைக்கழகத் தேர்வு, வாஸந்திக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் தந்தது. தானும் பல்கலைக் கழகம் போகவேண்டும், தன் அக்காளின் சங்கற்பத்தை நிறை வேற்ற வேண்டும் என்ற விருப்பினால் படிப்பில் கருத்தானாள்.

தேவியும் தன் இலட்சியத்தை வென்றெடுக்கத் தங்கைக்கு உதவினாள். வீட்டுப் பொறுப்புக்கள் எதையுமே அவள் கையில் தந்துவிடாமல், தானே அனைத்தையும் செய்யலானாள்.

வார விடுமுறைக்குச் செல்வா வீட்டுக்கு வருவான். தோட்டத்தில் தங்கும் நாட்களில், வாஸந்திக்கும் காவேரிக்கும் பாடம் சொல்லித்தருவான்.

❀❀❀❀

கதிரவனைக் கண்ட காலைப் பனித்துளிபோல் காலமும் கரைந்து மறைந்தது. வாஸந்தி பரீட்சை எழுதினாள். அவள் கடுமையான உழைப்பு வீண் போகவில்லை. பரீட்சை முடிவு மிக நன்றாகவே அமைந்திருந்தது.

வர்த்தகப் பிரிவுக்கு அவளும் மிகப் பொருந்தினாள். பரீட்சை முடிவு சிறப்புச் சித்திகளாகவே அமைந்திருந்தன. தங்கையின் பரீட்சை முடிவு அறிந்த தேவியின் நெஞ்சம் பனியாய்க் குளிர்ந்தது. மகிழ்ச்சிப் பெருமிதத்தில் அவள் திளைத்துப்போனாள்.

தன்னுள் இதுகாலவரை நிறைந்து கிடந்த பெரும் சுமைகளும், சோக மேகங்களும் ஒரே நொடிக்குள் மறைந்தும், கரைந்தும் போனதை அவள் ஒரு கணத்தினுள் உணர்ந்தாள்.

தேர்வுச் செய்தியைச் சுமந்து வந்த வாஸந்தியை அவள் வாரி நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். ஆறாகப் பெருகும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளம், அவள் உவகையின் கொந்தளிப்பை உணர்த்துவதாயிற்று.

அவள் வாய்விட்டே அழுதாள். அது அவளின் சோகவாழ்வின் வெளிப்பாடாகவன்றி, மகிழ்ச்சிப் பெருக்கின் நிதர்சனமாயிற்று. தங்கையைக் கையில் பிடித்தபடி, பொன்னுமாமியின் வீட்டை நோக்கி ஓடினாள் தேவி. ஏற்கனவே காவேரியின் பரீட்சை முடிவில் மகிழ்ந்திருந்த பொன்னுமாமி வாசல்வரை வந்து அவர்களை வரவேற்றாள்.

"வாஸந்தி! மாமி கால்ல விழும்மா" என்றாள் தேவி. நாத் தழுதழுக்க. அதில் எல்லையில்லா நன்றியுணர்வுகள் பொங்கிவழிந்தன. காலில் விழுந்த வாஸந்தியைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் பொன்னுமாமி அவளை உச்சி முகர்ந்தாள். அதில் பெற்ற தாயின் களங்கமில்லாத பாசத்தை வாஸந்தி உணர்ந்தாள்.

தேவிக்குப் பேசமுடியவில்லை. தாயில்லாக் குறையை நீக்கி, தாயாயும், தந்தையாயும் பாசத்தைக் காட்டிய அந்தப் பாசப்பிறப்பைக் கையெடுத்து வணங்கினாள். அதில் எத்தனையோ அர்த்தங்கள் பொதிந்து கிடந்தன.

# 6

சர்வ கலாசாலை அனுமதி வரும்வரை, வாஸந்தி காவேரியோடு தான் இருந்தாள். அக்கா தோட்டத்துக்குச் சென்றதும் இருவரும் ஒன்றாகி விடுவார்கள்.

செல்வா விடுமுறை நாட்களில் கொண்டுவரும் இந்தியச் சஞ்சிகைகளும், கவிதைப்பிரியனான அவன் எழுதிவரும் சிறுசிறு கவிதைகளும், அவர்கள் பொழுதைப் போக்க உதவின.

தேவி தொடர்ந்து வேலைக்குச் செல்வாள். வேலைகிடைக்காத ஓரிரு நாட்களில், ஒன்றாகத் திரியும் வீட்டின் பெட்டைப் பட்சிகளுக்குப் பொங்கிப்போடுவாள். காவேரியும், வாஸந்தியும் ஒன்றாய் உண்டு மகிழ்வார்கள்.

இருண்டு கிடந்தவானத்தில் தோன்றிய பிறைக் கீற்றுப் போல அந்தக் குடும்பத்தில் மகிழ்வும் தலைகாட்டியது.

அன்று சனிக்கிழமை. செல்வா தோட்டத்துக்கு வந்திருந்தான். வாஸந்தியைத் தேடி அவர்கள் லயத்துக்குச் சென்றான். அவள் அங்கிருக்கவில்லை.

பக்கத்துத் தோட்டத்தில் கவ்வாத்து வெட்டி இருந்தார்கள். "மிலாறு" பொறுக்கச் சென்றதாக ராஜா சொன்னான். செல்வாவும் அவளிருந்த தோட்டத்தின் பக்கமாய் கால்களை நடக்கவிட்டான்.

அவனைக் கண்டுகொண்ட வாஸந்தி பொறுக்கிய மிலாறுகளை ஒன்றாகக் கட்டத் தொடங்கினாள். "நில்லு வாஸந்தி, நானும் பொறுக்கித் தாறேன்" என்ற படி குனிந்து சில மிலாறுகளைப் பொருக்கியவாறு அவளருகில் சென்றான் செல்வா.

"எப்ப வந்திங்க செல்வா"? என்றபடி அவனைப் பார்த்துப் புன்சிரிப்போடு முகம்பூத்தாள் வாஸந்தி. அவனைக் கண்டதும் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, அவனையும் மகிழ்வித்தது.

"இப்பதான் வாஸந்தி! லயத்துக்குப்போனேன்; நீ இங்கே வந்ததா ராஜாத்தம்பி சொன்னான். அக்காவும் ஊட்டில இல்ல; அதுதான் தேடி வந்தேன்", என்றான் பதிலுக்குச் செல்வா.

"போகலாமே", என்றாள் அவள்

"கொஞ்சம் பொறு வாஸந்தி; பேசிப்பேசி இன்னும் கொஞ்சம் மிலாறு சேர்த்திடலாம்; நானே தூக்கிக்கிறேன்".

"லயத்துக்குப் போயே பேசிக்கலாம்! இன்னைக்கு இதுபோதும்".

"இல்ல வாஸந்தி, ஒன்னயத் தனியா சந்திக்கத் தான் நான் இங்கேயே வந்தேன்"!

"தனியாவா?.... எதுக்கு?!!"

அவள் விழிகளில் ஆச்சரியம் பீறிப்பாய்ந்தது. கருவிழிகள் ஏனோ மிரண்டு நோக்கின. "பயப்படாத வாஸந்தி! இது நாள்வரை என் மனசில ஜனிச்சி வளர்ந்த ஒண்ண ஒனக்குச் சொல்லணும். எத்தனையோ முறை அத சொல்ல நெனச்சும் சொல்லலல்ல. ஒண்ட படிப்புக்கு அது எடஞ்சலாகுமேன்னுதான்...."

வாஸந்திக்கு எதுவுமே புரியவில்லை. செல்வம் என்னதான் சொல்லுகின்றான். என அவளால் ஊகிக்கத்தானும் முடியவில்லை! அவள் அவனை வெறித்து நோக்கியபடி நின்று கொண்டிருந்தாள். பூமியைப் பார்த்தபடி சிறிது நேரம் பேசாது நின்ற செல்வா மீண்டும் பேசலானான்.

"வாஸந்தி! நான் ஒன்ன விரும்புறேன்".

திடீரெனத் தோன்றிய மின்லலொடு கூடிய இடியேறு கேட்டு நடுங்கும் ஒருசிறு பிள்ளையானாள் வாஸந்தி. அவள் கரங்கள் நடுங்கத் தொடங்கின. வார்த்தைகள் வராது நாவரண்டு போனது வியர்வையால் தேகம் நனைந்தது.

என்றுமே நேர்ந்திராத ஒரு புதியதோர் உணர்வினுள், தனித்து யாருமற்ற ஒரு சூன்யத்துள், தான் விடப்பட்டுவிட்டது போன்று அவள் மனம் தவித்தது. அவள் பனிமூடிய சிலையானாள்.

நீண்டநேர மௌனம் வாய்மொழியற்று இருவரும் நிலத்தை நோக்கியபடி நின்று கொண்டிருந்தனர். எதுவுமே பேசாது தன்முன் கல்லாய்ச் சமைந்து நின்ற வாஸந்தியை செல்வா தலைநிமிர்ந்து நோக்கினான். அச்சத்தால் அதிர்ந்து போய் நிற்கும் அவள் நிலைமை கண்ட செல்வா, அவளுக்கு ஏதேனும் நடந்துவிடுமோ, என அஞ்சினான்.

வாய்பேச உந்தியும், நா எழவில்லை அவனுக்கு அச்சம் மேலிட அவன் நெஞ்சும் நடுங்கியது. தன்னை வாஸந்தி எவ்வாறு அர்த்தம் கொள்ளுவாளோ? என மனம் பதற்றமுறுவது முகத்தில் தெளிவாய்த் தெரிந்தது.

"அக்கா! அக்கா!!"

அடிப்பாதை வழியாக ராஜா ஓடிவந்தான். அவன் குரலுக்கு இருவருமே தன்னுணர்வு பெற்றனர். கால்கள் லயங்களை நோக்கி நகரலாயின. செல்வம். வேகமாக முன்னேறினான். ராஜா மிலாறுக் கட்டைக் கட்டித் தூக்கிக்கொள்ள வாஸந்தி அவன் பின்னால் மெல்ல நடந்தாள்.

இன்னுமவள் பூரண சுயநினைவை அடையவில்லை. இடை வழியில் தேவி இவர்கள் இருவருக்குமாகக் காத்து நின்றாள்.

"செல்வம் எங்கடா ராஜா"? என்றாள் தேவி. முன்னர் வந்து கொண்டிருந்த ராஜாவிடம்.

"முன்னடியே போயிட்டாரே!" என்றான் அவன் பதிலுக்கு.

அவன் தலைசுமந்த மிலாறுக்கட்டை தன்தலைக்கு மாற்றிக் கொண்டாள் தேவி. அவர்களின் வாழ்வின் சுமைகளை தலைதாங்க நினைந்த அவளுக்கு, மிலாறுச்சுமை ஒரு சுமையாகத் தோன்றவில்லை. அவள் முன்நடக்க இளையவர்கள் பின் தொடர்ந்தனர்.

வீட்டுக்குள் சென்ற வாஸந்தி, வேகமாய் அடுக்களைக்குட்சென்றாள். குளிர்ந்தநீர் பானையில் இருந்தது. மொண்டு பருகினாள். சிறிது நீரை முகத்திலும் தடவித் துடைத்துக் கொண்டாள்.

உள்ளத்தின் பதறல் இன்னும் இருந்ததால், முகம் காட்டிக்கொடுத்து விடாதவாறு அக்காளை நேர்கொள்ளப் பயந்து ஒதுங்கினாள். குற்றமுள்ள நெஞ்சாக அவள் மனம் பதறியது.

தேவி இவற்றையொன்றும் அவதானித்து விடவில்லை. அவள் வழமையான தன் வேலைகளில் ஈடுபடலானாள்.

நடுச்சாமத்தை அறிவிக்கச் சேவல்கள் கூவின. விடியும் சாமத்திலும் சேவல்கள் தன் பேடைகளை எழுப்பக் கூவி ஓய்ந்தன.

இன்னும் வாஸந்தியின் கண்கள் மூடிக் கொள்ளாது மேல் முகட்டை உற்று நோக்கிக் கொண்டிருந்தன. விழித்துச் சிவந்த கண்களில் வடிந்த நீர், காதுவரை வடிந்து கறைகட்டிக் கிடந்தது. உடல் நெருப்பாய்க் கொதித்தது. இரவு முழுவதும் தலையைப் பாறாங்கல் கொண்டு யாரோ பிளப்பது போல் வாஸந்தி உணர்ந்தாள்.

கண்களை மூடவிடாதவாறு நெஞ்சில் புயலைக் கிளப்பிவிட்டிருந்தது நேற்றைய நிகழ்வு. இரவு எதையுமே அவள் உணவாகக் கொள்ளவில்லை. பசியை உணரமுடியாதவாறு மனத்தை ஏதோவொன்று தடுத்தது. அக்காளுக்குப் பொய்க் காரணமொன்றைக் கூறி விட்டு பாயில் நெளிந்தாள்.

பொழுது புலர்ந்தது. தேவி எழுந்த ஆரவாரம் கேட்டதும் வாஸந்தி தன்னைக் கம்பளிக்குள் முற்றாகப் புதைத்துக் கொண்டாள்.

சாயத்தை வடித்து ஒருகையிற் சர்க்கரைப் போத்தலுடன் அருகில் வந்த தேவி, போர்வையை விலக்கி வாஸந்தியை எழுப்பத் தலையைத் தடவினாள். தடவியதை கண்ட சூட்டினால் தேவியின் நெஞ்சம் பதறிப் போனது.

"வாஸந்தி! என்னம்மா ஒடம்புக்கு, நெருப்பாகக் கொதிக்குதே!"

வாஸந்தி இறுக்கி மூடிய கண்களை மெல்லத்திறந்தாள். தூக்க மின்மையால் கண்கள் செவ்வந்தி மலர்போல் சிவந்துகிடந்தன. விரிந்த மலரிடையே வடிந்தொழுகும் பனித்துளிபோல் கண்ணீர் வடிந்து கன்னத்தை வருடியது. செம்மலருட் படிந்த இரு வண்டுகள் போல் கருவிழிகள் மெல்லத் துடித்தன.

"ஒண்ணுக்கும் பயப்படாதேம்மா, கொஞ்சம் இரு, 'டிஸ்பிறின்' கரைச்சிக்கிட்டு வாறன். குடிச்சிட்டுப் படுத்துக்க நல்லா விடிஞ்சப்புறம் டாக்டர் ஐயாக்கிட்டப் போவம்", என்றவாறு தேவி தன் செய்கைகளில் துரிதமடைந்தாள்.

இரண்டு மூன்று நாட்களில் பயத்தால் ஏற்பட்ட திடீர் உடல் மாற்றம் தேறினாலும், அவளின் உளச்சுமையோ ஒழிந்த பாடில்லாதிருந்தது.

செல்வம் அன்று இரவோடிரவாகக் `கெம்பஸ்' சென்று விட்டானென்று காவேரி சொன்னாள் காரணம் என்னவென்று அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இது நடந்து வாரமொன்று கழிந்து, மற்றுமொன்றும் சொல்லாமல் விடை பெற்றுக் கொண்டது. செல்வம் வராமையால் தன் மனச்சுமை புதியதோர் வடிவம் பெறுவதை வாஸந்தி உணர்ந்தாள்.

விபரிக்க முடியாத ஒரு அச்சம் அவள் மனத்தை வருத்தியது. எங்கே அவன் வராமல் விட்டு விடுவானோ? என்றதோர் ஏக்கமும் தோன்றி அவளைச் சுட்டது! ஒருவித பயத்தால் அவள் பீடிக்கப்பட்டாள்.

## 7

பல நாட்கள் கழித்து அன்று வீரபுத்திரன் சங்கரியோடும் பிள்ளைகளோடும் பொன்னுமாமி வீட்டுக்கு வந்திருந்தான். தம்பி செல்வம் வழமைக்கு மாற்றமாய் தொடர்ந்து இரண்டு வாரங்கள் தோட்டத்துக்கு வரவில்லை என அம்மா அங்கலாய்த்தாள்.

பகல் உணவின்பின் தம்பியைப் பற்றி விசாரிக்கச் சென்ற வீரபுத்திரன் நல்ல சேதியோடு வீடு திரும்பினான்.

பாடச்சுமை அதிகரித்ததால் வர முடியாமல் போயிற்றென்றும், இவ்வார விடுமுறைக்கு வருவதாகவும்; அவன் கட்டிய கதையும் வரும் செய்தியையும் வாஸந்தி காவேரி மூலம் தெரிந்து கொண்டாள். அவள் மனம் அமைதி கொண்டது தவறாது அது நாட்களையும் எண்ணிக் கொண்டது.

வெள்ளியும் வந்தது. மாலையில் கையில் ஒரு குமுதத்தோடு ராஜா வீட்டினுள் நுழைந்தான்.

"புதுசா, யாருட்டு?" ராஜாவிடம் கேட்டாள் வாஸந்தி.

தெரிந்துவிட்டது அவளுக்கு செல்வம் வந்துவிட்டான் என்று. ராஜாவும் பதிலுக்கு அதைத்தான் சொன்னான்.

மனத்தில் ஏதோவொரு இனம் தெரியா இன்ப உணர்வு மெல்ல வருடுவதை வாஸந்தி உணர்ந்தாள். தோள்தடவிச் செல்லும்

தென்றலைப்போல. உடல் பூரித்துச்சிலிர்த்தது. கண்களை மெல்ல இமை மூட அதனுள் செல்வாவின் இளமை உருவம் பதிந்து நெஞ்சிலும் உறைந்தது.

அன்றிரவும் அவள் கண்கள் மூட மறுத்தன. சுவரெல்லாம், வீட்டின் முகடெல்லாம், தன்னைச் சுற்றியுள்ள பொருளெல்லாம், அதே உருவம் தன்னைப் பதித்துக் கொண்டிருப்பதை அவள் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. மனச்சிறகின் துடிதுடிப்பால் காலைவரை விழித்திருந்த கண்கள் சிவந்து போனாலும், கண்ணீர் சிந்தவில்லை. உடல் கொதித்தாலும் மருந்துக்காய்ச் சுடவில்லை. உள்ளம் மகிழ்ந்தது. அன்றும் அவளுக்குப் பசிக்கவில்லை. மனம் நிறைந்ததால் வயிறும் மரத்தது.

ராஜா படித்துமுடித்த குமுதம் அவன் தலைமாட்டில் கிடந்தது. அதனைக் கையிலெடுத்தாள் பக்கங்கள் புரண்டன. சட்டென ஏதோ ஒன்று மனதில் தோன்ற, மெல்லிய புன்னகையொன்றும் அவள் அதரங்களில் முத்திரை பதிக்க, அவள் கண்கள் இறுக மூடிக்கொண்டன.

❀❀❀❀

வார விடுமுறை நாட்களில் நன்றாகத் தூங்கும் ராஜா அன்றும் அவ்வாறே தூங்கிக்கிடந்தான். தேவி வழக்கம் போல் எழுந்தபோது, வாஸந்தி அடுக்களையில் தேனீருக்குத் தண்ணீர் தயாரிப்பதில் மூழ்கி இருந்தாள்.

வழக்கமாய்ப் பரீட்சைக் காலங்களில்தான் அவள் அப்படி எழுந்திருப்பாள். தேவிக்கு அன்று அது புதுமையாகத் தோன்றியது. அவள் அறிவாளா இன்றும் அவள் ஒரு பரீட்சைக்காக, ஆயத்த மாகின்றாளென்று.

மூவருக்குமாய் தயாரித்த தேனீரில் ஒன்றை அக்காளுக்குக் கொடுத்துவிட்டு, ஒன்றை மூடிவைத்தாள் ராஜாவுக்காக. மற்றொன்றைத் தானும் அருந்தினாள்.

பகலைத்தேடி அங்கலாய்த்தது அவள் மனம். அவள் மனமறிந்தோ என்னவோ அன்று பகலவன் துயிலெழும்பச் சோம்பிநின்றான். அவன் மீது வாஸந்தி குழந்தை போல மனத்துள் கோபித்தாள்.

நன்றாக விடிந்தது. சனிக்கிழமையானாலும், தேவி மலைக்குச் சென்றாள். ராஜா காலை உணவோடு நண்பர்களைத் தேடிச் சென்றான். வாஸந்திமட்டும் தனித்திருந்தாள்.

இரவில் தான் போட்ட திட்டம் நிறைவேற இப்போது அவளுக்குச் சந்தர்ப்பம் சரியாய் வந்தது. பத்திரப்படுத்தி வைத்திருந்த குமுதத்தைக் கையில் எடுத்தாள்.

முற்பக்கத்தைப் புரட்டி அதில் ஐந்தாம் பக்கம் பார்க்க என எழுதினாள். மீண்டும் ஐந்தாம் பக்கத்தைப் புரட்டி பத்தாம் பக்கத்தைப் பார்க்கவும் என எழுதினாள். மீண்டும் பத்தாம் பக்கத்தில் வேறோர் பக்கமும், தொடர்ந்து மீண்டும், மீண்டும் இது போல் பல பக்கங்களும் புரட்டி எழுதியபின், ஈற்றில் கடைசிப் பக்கத்தில். "ஏமாந்தீர்களா?" என்றோர் கேள்வியைத் தொடுத்தவாறு குமுதத்தை மூடினாள். கைகள் நடுங்கத் தொடங்கின. நெஞ்சும் தன் வேகத்தைக் கூட்டி அடிக்கத்தொடங்கியது.

இதனை எப்படிச் சேர்ப்பது? அக்காளும் தம்பியும் வருமுன் சேர்த்துவிடவேண்டும். காவேரி வந்தால் கதையே மாறிவிடும். என்ன செய்வது? என்ற துடிப்போடு வெளியில் வந்தாள்.

லயத்தின் கோடியில் இருக்கும் "ஜேம்" மரத்தை நோக்கினாள், வழக்கம் போல அதனடியில் கிடக்கும் பாறாங்கல்லில் செல்வம் ஒரு புத்தகத்தில் மூழ்கிக்கிடந்தான்.

வாஸந்தியின் கரங்கள் மேலும் நடுங்கின. நெஞ்சில் மீண்டும் பதைபதைப்பு. இதை எப்படிச் சேர்ப்பது?.... சற்று யோசித்தாள். நாமாகவே சென்று கொடுத்தால்?.... வேண்டாம்! காவேரிகண்டால் விபரீதமாகிவிடும்!.....

திடீரெனத் தன்னில் பட்டுத் தெறித்த பந்தினைக் கண்டதும் வாஸந்திக்கு புலன் சிதறியது. அது வந்த திக்கைப் பார்த்தாள் பக்கத்து வீட்டு நான்கு வயதுக் கண்ணன் பயந்தபடி நின்று கொண்டிருந்தான்.

அவனுக்கு ஓங்கி அறையவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அவள் பார்வையே, அவனுக்குக் கண்ணீரை வெளிக் கொணர்ந்தது.

நடுங்கிப் போய் நின்றான்.

வாஸந்திக்கு மனம் மாறி அவன் மேல் அனுதாபம் பிறந்ததோடு ஒரு யோசனையும் பளிச்சிட்டது. அவனையே ஆயுதமாகப் பாவித்தால்?....

"கண்ணா! இங்க வா! பயப்படாதே கண்ணா! நான் ஒன்னய அடிக்க மாட்டேன் வா" என்றாள்.

அவளின் முகத்தில் இருந்த கோபம் மாறி அவள் சிரிப்பதைக் கண்டதும் அவன் பயம் அடங்கி அவளண்டை வந்தான். இருந்தும் கண்கள் சற்று மிரண்டன.

அருகில் வந்தவனை தலைதடவி அவன் பயத்தை தெளிவித்தபின்....

"கண்ணா, நான் ஒன்னய அடிக்க மாட்டேன்.! நான் ஒன்ட பந்தத்தேடி எடுக்கறதுக்குள்ள, நீ போய் இந்த பொஸ்த்தகத்த அதோ... அந்த மரத்தடியில இருக்கிற மாமா கையில கொதுத்துட்டு வரணும்!" என்றாள்.

சின்னவனுக்கு என்ன புரியும். மீண்டும் தன் பந்து தன்கைக்கு வந்துவிடும், என்ற நம்பிக்கையில் அவள் தந்த புத்தகத்தை கையில் பிடித்தபடி சிட்டாய்ப்பறந்தான். காரியம் கச்சிதமாய் நிறைவேறியது.

❀❀❀❀

கையில் கிடைத்த குமுதத்தை தான் படியாமலேயே ராஜாவுக்குக் கொடுத்துவிட்டதால், அது தன்னிடம் வந்த விபரத்தை அறியுமுன் சிறுவனும் ஓடிவிட்டதால், செல்வம் தான் வைத்திருந்த புத்தகத்தைக் கல்லில் வைத்துவிட்டு குமுதத்தைப் புரட்டினான்.

அட்டையைப் புரட்டியதும் முத்தான எழுத்துக்களில் ஐந்தாம் பக்கத்தைப் பார்க்கவும் என்றிருந்தது. அது வாஸந்தியின் எழுத்து. அவனுக்கு மிவும் பரிச்சயமானது.

சட்டென மனத்தில் தோன்றிய அதிர்ச்சியோடு, அவாவும் உந்த, பக்கங்களைப் புரட்டினான். ஐந்து, பத்து, பதினைந்து இருபது.... இவ்வாறே தொடர்ந்து கடைசிப்பக்கத்துக்கு வந்தான் செல்வம், அறிந்துவிடும் ஆர்வம்

மேலிட்டவனாய்.

"ஏமாந்தீர்களா?" என்று அந்த முத்தான எழுத்துக்கள் முத்தாய்ப்புப் பெற்றன.

செல்வம் வாய்விட்டே சிரித்தான் அதனை அடக்க அவனால் முடியவில்லை. ஒரு முறை சுற்று முற்றும் பார்த்தான் தன்னை எவருமே கவனிக்கவில்லை என்பதை அறிந்ததும் அவன் சிந்தனை ஒருமுகமாகியது.

அது ஓய்ந்த கடல்போல, ஒரு கணத்துள் தன்மனம் நிர்மலமாகிவிட்டதை அவன் அனுபவித்தான். அவன் தலை அவனை அறியாமலேயே வாஸந்தியின் காம்பறாக் கதவின் பக்கம் தானாகத்திரும்பக் கண்கள் எதையோ ஆழமாய்த் தேடின.

அங்கே அவன் அறியாதவாறு இதுவரை நடந்த அனைத்து நிகழ்வுகளையும், காம்பறாக் கதவிடுக்கு வழியாக ஒரு சோடிக்கண்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தன.

புத்தகத்தைச் செல்வா கண்ணனிடம் வாங்கிக் கொண்டதையும், அதனை புரட்டிப்புரட்டி ஆர்வமாய்த் தேடியதையும்; வாய்விட்டுச் சிரித்தபடி தங்கள் காம்பற கதவினைத் திரும்பிப் பார்த்ததையம் வாஸந்தியின் கூரியவிழிகள் உள்வாங்கிக் கொண்டன.

பரீட்சையில் சித்தி பெற்ற மாணவியின் மனம் போல அவள் மனம் துள்ளிக் குதித்தது. தன் முயற்சியின் முடிவு என்னவாகுமோ எனப் பயந்திருந்த அவளுக்குச் செல்வாவின் சிரிப்பே பதிலாக அமைந்ததால் அமைதியடைந்தது.

## 8

வாஸந்தியிடம் தன் எண்ணத்தைச் சொன்னதும், அவளிடமிருந்து எந்தவித பதிலும் இன்மையால்; அவள் தன்னை நிராகரித்து விட்டாளோ; என்ற ஐயப்பாட்டில் அன்றிரவே `கெம்பஸ்' புறப்பட்டு விட்ட செல்வம், அந்த அச்சத்தினாலேயே அவள் முகம்காண வெட்கப்பட்டவனாய் இரண்டு வார விடுமுறைகளுக்கும் வராதிருந்தான்.

அம்மாவின் ஏக்கமும், அண்ணனின் வருகையும்; அவனை மீண்டும் தோட்டத்திற்கு மீட்டு வந்தன. இருந்தும் அவன் மனச் சந்தேகம்

மறையாது நிலைத்திருந்தது.

தோட்டத்தின் ஒரு பகுதியில் இருந்த மலைக்கல்லில் இருந்தவாறு செல்வம் யோசிக்கலானான். என்ன இதன் பொருள். வாஸந்தி என்னை விரும்புகின்றாளா? அன்றி என் மனத்தில் ஏற்பட்ட மனப்புண்ணிற்கு மருந்திடுகின்றாளா? அவன் புரியாது மீண்டும் குழம்பினான்.

குமுதத்தோடு வீடு சென்றவன் அது பிறரின் கண்களில் பட்டுவிடாதவாறு தன் தோள்பையுள் பத்திரப்படுத்தினான். அது தன் கேள்விக்குக் கிடைத்த பதிலாகவும் எண்ணினான். ஞாயிறும் தோட்டத்தில் தங்கி திங்கள் விடியற் காலையில்தான் அவன் மீண்டும் பல்கலைக் கழகம் புறப்பட்டான். இதனிடையில் அவன் வாஸந்தியைக் காணவே இல்லை.

❀❀❀❀

குமுதத்தைப் படித்ததும், சிரித்ததும்; தங்கள் காம்பறாப் பக்கம் திரும்பியதும் வாஸந்தி நன்றாகக் கவனித்தவைகளே.

தான் தோன்றிய, தான்வைத்த, பரீட்சையில்; தனக்கு ஓரளவு வெற்றி கிடைத்ததாகவே அவள் எண்ணினாள். இருந்தும் செல்வாவை முகம் கொள்ள வாஸந்தியின் மனம் துணிவற்றுப் போனது.

இரண்டு நாட்கள் பொன்னுமாமி வீட்டுப்பக்கமே அவள் போகவில்லை. மறுநாட்காலை காவேரியே தேடிவந்தாள். பீலிக்குக் குளிக்க அழைத்தாள். இருவரும் துணிக்கட்டோடு புறப்பட்டனர்.

நீண்டதூரம் கற்களிடையே புகுந்து, உருண்டு, பலவாறாய்ப்பிரிந்து மீண்டும் ஒன்றி, மலை மண்ணை நனைத்து வரும் சிறிய சிறிய நீரோடைகளை மறித்துத் தேக்கிப் பின்னர் ஒரு குழாய் மூலம் உயரத்திலிருந்து கீழ்நோக்கி, வெளியேற்றும் ஒரு குட்டி நீர்வீழ்ச்சிதான் பீலி. இரவுப் பனியில் தன்னைக் குளிராக்கிக் கொண்டு, வருவோரைக் குளிர் நீராட்டும் அது.

"குமுதம் படிச்சியா காவேரி?" என்றாள் அழுக்குத் துணிக்குச் சவர்க்காரம் தேய்த்தபடி வாஸந்தி.

அவள் மனத்தில் படிந்த சந்தேக அழுக்கை அவள் பதிலென்னும் சவர்க்காரம் போட்டுக் கழுவும் எண்ணத்தினளாய்.

"இல்லியே! செல்வாண்ணா கொண்டு வரலியே!" என்றாள் வாஸந்தியை ஏறிட்டவளாகக் காவேரி.

வாஸந்தி பார்வையைக் கல்லிலிருந்த துணி மேல் பதித்துக் கொண்டாள். தன் முகம் அவள் கண்களில் படாதவாறு.

அதையடுத்து அவள் வேறென்றும் கேட்கவில்லை. தனது குட்டு வெளியாகவில்லை என்ற திருப்தியோடு பேச்சை முடித்துக் கொண்டாள்.

இரவு படுக்கையில் சாய்ந்த செல்வாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கண்களை இறுக மூடிக் கொண்டாலும் வாஸந்தியின் நினைவுகளே அவனுள் நிறைந்து கிடந்ததால் அவளே அவன் மனக்கண்முன் மீண்டும் மீண்டும் தோன்றினாள்.

சிந்தனையில் தோன்றும் பலவித வினாக்களுக்கு பதில் தோன்றாது அவன் தவித்தான்.

நத்தையாய் ஊர்ந்தன நாட்கள். வெள்ளியை அடைந்தன. இரவுக்கு முன்னரே தோட்டத்தை அடைந்தான் வாஸந்தியின் வீட்டுக்கதவு திறந்தே கிடந்தது. தேவி வெளிப்பட்டாள்.

"என்ன செல்வா, இன்னைக்கே வந்துட்டே?" என்றாள் அவனைக் கண்டதும்.

சுள்ளென்று அந்த வார்த்தைகள் அவன் நெஞ்சுள் இறங்கின. எப்போதும் சனிக்கிழமைகளில் தான் அவன் தோட்டத்துக்கு வருவான். என்றுமில்லாதவாறு அன்று வெள்ளிக்கிழமையே அவன் வந்தது புதுமையாக இருந்தது அவளுக்கு.

எப்படி உண்மையைச் சொல்லுவது? தன் மன உளைச்சலை வெளிகாட்டிக்கொள்ளாது. பொருத்த ஒரு பொய்யைச் சொன்னான்.

"ஆமாக்கா! இன்னைக்குப் பகல் பாடம் ஒண்ணுமில்ல! அதுனால இன்னிக்கே வந்துட்டேன்!" என்று பதிலுக்காகச் சொல்லிவிட்டு மேலும்,

அடிகளை முன் வைத்தான்.

"வாயேன், ஏதாச்சும் குடிச்சுட்டுப்போகலாம்" என்றாள் முறைமைக்காகத் தேவி.

"இல்லக்கா, காலையிலே வாறேன்"

என்றபடி தேவியின் வாயிற்பக்கம் கண்களைத் துருவவிட்டான் செல்வம். அங்கு யாருமே இருப்பதாக தெரியவில்லை அவன் ஏமாற்றமனம் காலை உறுத்தியது. வேகமாய் நடவென்று.

ஆனால் அவன் கண்ணில் படாதவாறு இரண்டு விழிகள் கதவு இடுக்கு வழியாக அவனையே தொடர்ந்து சென்றன.

❀❀❀❀

அம்மா சாதம்பரிமாறினாள் வழக்கமான இரவு உணவில் அன்று மாற்றமிருந்தது. அது செல்வாவின் வருகையால்.

மறுநாட்காலை காலைத் தேனீரின்பின் கரித்துண்டை வாயில் போட்டு நறும்பியவாறு பீலிக்குப் புறப்பட்டான் செல்வம். தோட்டத்துக்கு வந்தால் தன் நகர்ப்புற வாழ்வை மறந்து தன் கடந்தகால நாட்களை இப்படித்தான் புதுப்பித்துக் கொள்வான் அவன். அந்த வாழ்வே அவனுக்கு இன்னும் பிடித்திருந்தது.

நகர்ப்புறத்துச் சந்தடிகளும் அமைதியற்ற, பொய்யான வாழ்வு முறையும். படாடோபங்களும், இன்னும் அவனை ஈர்த்துவிடாது தோற்றுப் போயின.

கால்விரலிடுக்கை ஏதோவொன்று உறுத்த, புரிந்து கொண்ட அவன் சுட்டுவிரலையும் பெருவிரலையும் கால் விரலிடுக்கிற் சொருகி, மெல்லப் பிடுங்கி உருட்டி வீசினான்.

சந்தர்ப்பம் நேரும்போது மற்றவர்களின் தோளில் ஏறி அவர்களை உறிஞ்சும் ஈனப் பிறவிகளை நினைவு காட்ட இறைவன் படைத்த படைப்புத்தான் அது.

நூறாண்டுகளாய் தோட்டத்து ஜனங்களின் இரத்தத்தை உறிஞ்சி

உடல் வளர்த்த முதலாளி வர்க்கத்தின் மறுபிறவிகள் தாமோ அட்டைகள். இரத்தருசி விட்டுக் போகாததால் மீண்டும் மீண்டும் பிறந்து குருதி மாந்துகின்றன.

வாயிலிட்ட கரித்துண்டு பற்களால் அரைக்கப்பட்டதும், சுட்டு விரலால் பற்களைத் துலக்கியபடி பீலியை அடைந்தான் அவன். அங்கு ராஜா தன் நண்பர்களோடு கும்மாளக் குளியலடித்துக் கொண்டிருந்தான்.

"செல்வாண்ணே, வாயில ரெத்தம்"?

என்று கத்தினான் ராஜா குளிப்பின் இடை நடுவில். வாயில் கை வைத்துப் பார்த்தான் செல்வம் உமிழ் நீரில் கலந்த கரியொடு கசிந்த இரத்தம் கையில் தெரிந்தது.

அவன் பயந்து விடவில்லை. காரணம் அவனுக்குத் தெரியும். பொல்லாத அட்டைக் குஞ்சு தன் சுட்டுவிரலைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு பல்துலக்கும் போது உதட்டில் தொற்றிக் கொண்டிருக்க வேண்டும். அதனைப் பிடுங்கி வீசிவிட்டு சிறிது நேரம் விரலழுத்தம் தந்தான். இரத்தம் கட்டிக்கொண்டது.

சூரியனின் உச்சிப் பிரவேசம் உடலைச் சுடும்வரை அவர்கள் அங்கு குளித்தனர்.

பகலுணவை முடித்துக் கொண்ட செல்வம், இம்முறை தான் கொண்டுவந்திருந்த குமுதம், ஆனந்த விகடனோடு வெளியில் வந்தான் அவன் பாதங்கள் வாஸந்தியின் வீட்டை நோக்கிச் சொல்லாமலே நடந்தன. அவன் மனத்தில் ஒரு திட்டமும் தெளிவும் இருந்தன.

வாசலில் கோப்பி விதைகளைக் காயவைத்துக்கொண்டிருந்த தேவி அவனைக் கண்டதும்..

"வா செல்வா.... வா!" என அன்போடு அழைத்தாள். தன் கைளைத்தட்டிச் சேலைத்தலைப்பால், துடைத்துக் கொண்டவளாக.

படியெறி, அவள் முன்னே நடந்தாள். அவன் பின் தொடர்ந்தான். உள்ளே இருந்த கதிரையில் வாசலைப் பார்த்தபடி தன்னை இருத்திக் கொண்டான். வாசற்படியில் தேவியும் உட்கார்ந்தாள். வாஸந்தியை எங்கும்

காணவில்லை.

நீண்ட நாட்களின் பின் பேசக்கிடைத்ததால், அவன் பல்கலைக்கழக வாழ்வு பற்றி அவனிடம் விசாரித்தாள் தேவி. உள்ளூர அது பற்றி அறிந்து கொள்ளும் ஆசையும் அவளுக்கு இருந்தது.

அடுத்த சில மாதங்களுக்குள் வாஸந்தியும், காவேரியும் பல்கலைக்கழகம் செல்ல விருப்பதால் பேச்சு சற்று ஆழமாகவே இருந்தது, சிறிது நேரத்தில்.

"கொஞ்சம் இரு செல்வா குடிக்க ஏதாச்சும் எடுத்துக்கிட்டு வாரேன்" என்றபடி தேவி அடுப்பங்கரைப் பக்கம் சென்றாள்.

எல்லாம் ஒன்றுக்குள் ஒன்றாகிவிட்ட ஒரு சின்னக் காம்பறா. அதுதானே தோட்டத்து மக்களின் மாளிகை! முன் வாசல், படுக்கை அறை, சமையல் கட்டு, இவைகளெல்லாம் கிடைத்த ஏதோ ஒரு மறைப்பினால் மட்டுமே தம்மைத் தனிமைப் படுத்திக் கொள்ளும். நாட்டை உறிஞ்சவந்த வெள்ளைக் காரனின் மனம் போல, அவைகள் அன்று அமைக்கப்பட்டன. இன்று உள்ளவனுக்கும் மனமில்லாததால் பெரும்பாலும் அவை அப்படியே தொடர்கின்றன.

தேவி உள்ளே சென்ற வேளை, சட்டென வாசலில் வாஸந்தி தோன்றினாள். இருவருக்கும் எதிர்பாராத சந்திப்பு.

முதல் நோக்கிலேயே வாஸந்தி வாசற்படியில் அதிர்ந்து நின்றாள். அவன் அங்கிருப்பதை அவள் அறிந்திருக்கவில்லை. நான்கு கண்களும் மோதிக்கொண்டன. வியப்பைத்தவிர, வேறு உணர்வுகளை அவள் முகம் பிரதிபலிக்கவில்லை.

நோக்கிய விழி மாறாது செல்வா அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவன் பார்வையைத் தாங்காது நாணம் மேலிட தலைதாழ்த்திக் கொண்டாள். தப்புச் செய்த குழந்தை தண்டனைக்கு அஞ்சி நிற்பது போல இருந்தது அவள் தோற்றம்.

உள்ளே நுழைய முயன்ற கால்கள் பலமற்றுப்போனது போல, கீழே கிடந்த சிறிய பாயில் தடுக்கியது. அவள் விழுமுன் செல்வா அவள் கரம்பற்றித் தாங்கினான்.

ஓரிரு வினாடிகள். தேவியும் காணாத சிறிய பொழுது. அவள் தன் காலை நிலைப்படுத்திக் கொண்டதும், அவன் தன் கைகளை மீட்டுக் கொண்டான்.

இளைய பருவங்கள் இரண்டிற்கிடையில் ஏற்பட்ட ஒரு சீர சந்திப்பு அது. வெறும் நான்கு கைகளுக்கிடையில் தானெனினும் உடலெல்லாம் உணர்வுகள் ஓடிப் பிரவாகிக்கச் செய்தது. மனத்தில் ஏதோவொரு திடீர் மின்னல் தாக்கம்.

அவள் உள்ளே சென்றாள்.

"வாஸந்தி வந்திட்டியா?" காவேரி எங்கம்மா"?

என்றாள் தங்கையைக் கண்ட தேவி.

"வரலேக்கா"

என்று மட்டும் அவளிடமிருந்து பதில் வந்தது. இப்போதைய மன நிலையில் ஏதும் பேசிவிட்டால், வார்த்தைகள் குழம்பிவிடுமோ என்ற அச்சம் அவளுக்கு.

தேவி தேனீர் தந்தாள். செல்வா பருகினான்.

"என்னவாஸந்தி, பேசாம இருக்கே? செல்வாவோட ஒனக்கு என்னா?"

என்றாள் தேவி அவள் பக்கமும் ஒரு கோப்பையை நீட்டியவாறே.

சந்தித்துக் கொண்டால் எப்போதும் கலகலப்பாகப் பேசும் அவர்கள், அன்று ஒருவரோடொருவர் பேசாமலிருப்பது கண்டே, அவள் அவ்வாறு வினவினாள். அதன் காரணம் என்னவென அவளுக்குப் புரியவில்லை.

தேவி எதையோ சந்தேகிக்கின்றாள் என எண்ணிய செல்வா, நிலைமையைச் சமாளிக்கப் பேச்சில் முந்தினான். தன்னோடு கொண்டுவந்திருந்த சஞ்சிகைகளைக் கையிலெடுத்தவனாகப் பேச்சை மாற்ற முயன்றான்.

"தேவியக்கா, குமுதம்," என்றவாறு அவளிடம் நீட்டினான். "குமுதம்" என்ற வார்த்தையில் அழுத்தம் பதிந்திருந்தது. கடைக்கண்ணில்

வாஸந்தி தெரிந்தாள் அவள் கையில் இருந்த தேனீர் நடுங்கியதை அவனும் அவதானித்தான்.

மனக்கடலின் உணர்வலைகள் முகக்கண்ணாடியில் பிரதி பலிக்காதவாறு, அவள் மறைக்க முயல்வதும், செல்வாவின் கண்களுக்குப் புரிந்தது. முகம் வியர்த்ததும் அவள் வேறு புறம் தன் பார்வையைச் செலுத்த முயன்றாள். புத்தகத்தில் கண் பதித்த தேவி, இதனைக் கண்டு கொள்ளத் தவறினாள்.

அவன் வார்த்தைகளில் குத்தல் இருப்பது வாஸந்திக்குப் புரிந்தது. குற்றமுள்ள நெஞ்சல்லவா! வேண்டுமென்றே என்னைத் தீண்டத்தான் "குமுதம்" என்றான், என்பதை அவள் உணர்ந்தாள். அதுவே உண்மையாகவும் இருந்தது. அது அவள் மனத்துக்குச் சற்று வேதனையாகவும் இருந்தது. மகிழ்வாகவும் இருந்தது.

அவன் முகத்தை அவளால் எதிர்கொள்ள முடியவில்லை. அவள் மனச்சங்கடத்தை ஒருவாறு ஊகித்துக்கொண்ட செல்வா பேசலானான்.

"வாஸந்தி இப்ப என்ன பண்ணிக்கிட்டு இருக்கிற? காவேரியும் நீயும் வேலவெட்டி இல்லாம சும்மா இருக்கிறத விட்டுட்டு ஏதேனும் பண்ணலாமில்ல?" என்றான். அப்போதும் அவள் பேசவில்லை. ஊமையாக அவனைப் பார்த்தாள். "பள்ளிக்கூடம் போனா மேல் வகுப்புப் பிள்ளைகளுக்கு ஏதாச்சும் ஒதவலாம்லே?" என்றான் மீண்டும் அவனே. அவளைப் பேசவைக்க வேண்டும் என்றே அவன் கேள்விகளைத் தொடர்ந்தான்.

"பார்க்கலாம்" என்றாள் அவள் ஒற்றை வார்த்தையில். நறுக்குத் தெறித்தாற்போல் துணிந்து ஒருவார்த்தையைப் புறப்படுத்திவிட்டதால் அவளுக்குச் சற்றுத் தைரியம் பிறந்தது. மீண்டும் அவன் கேள்விகளுக்கு மட்டுமே அவளால் ஓரிரு சொற்களால் பதில் சொல்ல முடிந்தது. சிறுநேரம் கடந்து செல்வா விடை பெற்றான். தேவி வாசல்வரை சென்றாள். தன்னிலிருந்து ஏதொவொன்று கழன்று செல்வதுபோல இருந்தது வாஸந்திக்கு.

மறுநாட்காலை `கெம்பஸ்' செல்லப் புறப்பட்டுவந்த செல்வம் வழக்கத்துக்கு மாறாய் அன்று சொல்லிவிட்டுச் செல்ல தேவியின் வீட்டுக்கு

வந்தான்.

தேவி மலைக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள்.

"போயிட்டு வாறேன்கா" என்றான்.

அவளும் வாழ்த்தி விடையளித்தாள். படிக்கக் கொடுத்த சஞ்சிகைகளைத் திருப்பிக் கொடுத்த வாஸந்தி.

"இதில் குமுதமும் இருக்கிறது" என்றபடி.

வார்த்தைகள், மிகச் சன்னமாய் வெளிவந்தன. தேவிக்குக் கேட்காதவாறே.

அவற்றை வாங்கி தன் கைப்பைக்குள் போட்டுக் கொண்டு விடைபெற்றான். விழிகள் நன்கும் எப்போதும் இல்லாதவாறு பார்வைகளைப் பரிமாறிக்கொண்டன. வேறு கண்களுக்கு புலப்படாதவாறே. முன்போலல்லாது அதில் பொதிந்திருந்த ஏக்கமும், பிரிவுத்துயரும், இரண்டு முகங்களிலும் தெளிவாய்த் தெரிந்தன.

குறுக்கும் மறுக்குமாய் ஒற்றையடிப் பாதைகள் தாண்டி, சிறிய குன்றினைக் கடந்து நெடுஞ்சாலைக்கு வந்தான் செல்வம்.

தனியார் பஸ் காத்து நின்றது, ஏறிக்கொண்டான். தோட்டத்தை நினைந்தான் வாஸந்தியே கண்முன் நிழலாடினாள். சட்டென நினைவு வந்ததும் அவசர அவசரமாய்க் கைப்பையைத் துளாவினான். குமுதம் கிடைத்தது. அதன் பக்கங்களைப் பிரித்தான்.

அதனுள் "இதில் குமுதம் இருக்கின்றது" என அவள் அவற்றைத் தரும்போது நினைவு காட்டியதற்குப் பதிலும் இருந்தது.

"அன்பான செல்வம்...!" என்று ஆரம்பமாகி தொடர்ந்தது ஒரு நீண்ட கடிதம்.

கடிதத்தைப் படித்து முடித்த செல்வத்தின் மனத்தில் ஒரு கேள்விக்கான விடை தெளிவாய்த் துலங்கியது. அதில் ஒரு சிக்கல் இருப்பினும், மன நிறைவோடு அவன் விடுதியை அடைந்தான்.

# 9

காலைக் கதிரவன் தன் பொன்வண்ணக் கிரணங்களை மலையெங்கும் வீசி எறிந்தான். பனியில் நனைந்து, குளிர்ந்த தளிர்கள், அவன் உஷ்ணக் கதிர்களில் குளிர் காய்ந்து மகிழ்ந்தன.

இன்னும் சில மணித்துளிகளுக்குள் தாம் பறிக்கப்படுவதை அவை அறிந்திருக்கவில்லை. அணையுமுன் ஒளிவிடும் விளக்கின் சுடர் போல் அவை துலங்கித் தோன்றின.

மனித வாழ்வின் நிலையில்லாமைக்கு இந்தத் தேயிலைத் தளிர்கள் எத்தனை – பொருத்தமான உதாரணம்!

சிறுசிறு ஓடைகளில் சலசலக்கும் நீர், ஒரே சீராய் ஒலிக்கும் இசைக் கருவியின் மெல்லிய நாதம்போல, செவிகளுக்குத் தேனூட்டும். தூரத்தே மலையுச்சியில் இருந்து வீழும் நீர் வீழ்ச்சிகள் கண்களுக்கு இதமான சுகமளிக்கும்.

பஞ்சுப் பொதிகளை இடையிடையே அள்ளி எறிந்தாற்போல் மலைகளின் மீது வெண்மேகத் துண்டங்கள் மெல்ல நகரும் மலைமேல் நெளியும் சிறுசிறு பாதைகளின் மேலே கூடை சுமந்த பெண்கள் அணியணியாய்ச் செல்வர்.

நாளும் நடைபெறும் ஒரேவிதமான நிகழ்வுகள்தாம். எனினும் வாழ்நாளெல்லாம் கண்டுகண்டு அனுபவிக்கும் அற்புதச் சௌந்தரியம். இதுமலையகத்து மக்களுக்கு மட்டுமே இறைவன் தந்த இணையிலாக் கொடைகள் இத்தனைக்கும் அந்தப் பொன்கொழிக்கும் பூமியில் வாழும் மக்களுக்கோ, வாழ்வு பாலையில் தோன்றும் கானலுக்கு ஒப்பாக இருந்தது.

தினமும் வயிறார உண்ண உணவோ, ஒதுங்கித் துயில ஒழுங்கான உறைவிடமோ, அமைத்துக் கொடுக்கப்படாத ஒரு துர்ப்பாக்கிய வாழ்வுக்கு, அவர்கள் தங்களைத் தாங்களே பழக்கிக் கொண்டார்கள். அன்றும் வழக்கம் போல் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்ட தேவி தோட்டத்துக்குப் புறப்படலானாள். தம்பி பள்ளிக்கூடம் சென்றான் தனித்திருக்க விரும்பாத வாஸந்தி காவேரியைத் தேடி பொன்னுமாமி வீட்டுக்குச் சென்றாள்.

மாலையானதும் அக்காவின் வருகைக்காகக் காத்திருந்தாள் வாஸந்தி. எப்போதும் போல் அன்றும் அவள் தேவிக்காகக் காத்திருக்கவில்லை. என்றுமில்லாத ஒரு ஆவல் உள்ளூரக் கொண்ட அச்சத்தோடு கலந்திருந்தது.

தூரத்தில லயத்தின் மற்றப் பெண்களோடு தேவிவருவதை அவள் கண்டு கொண்டாள். மனதில் மறைந்து கிடந்த அச்சம், உடலெல்லாம் பரவியது போல் இருந்தது அவளுக்கு. முடிந்தவரை அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

தலையில் தொங்கிய கூடையை வெளிச்சுவற்றில் தொங்கவிட்டு, இடுப்பைச் சுற்றியிருந்த படங்கை அவிழ்த்துக் கொடியில் உலரவிட்டாள். கொங்காணிச் சீலையை உதறியவாறு காமறாவினுள் நுழைந்தாள் தேவி.

அவள் உடல் கழுவி ஆயாசம் தீரும் வரை பொறுத்திருந்த வாஸந்தி தேனீர் தந்தாள். வெல்லக்கட்டியுடன் சூடான தேனீரைப் பருகியவாறு.

"ராஜா எங்கம்மா?" என்றாள் தேவி.

"அவனுக்கு இப்ப கால் நீளமக்கா, பகல் சாப்பாட்டுக்கு வந்தவன் போய் இன்னும் வரலேக்கா" என்றாள் வாஸந்தி.

"ஏண்டி பொய்சொல்லுறே, இப்பத்தானே போனேன்!"

என்ற ராஜாவின் குரல் கேட்டு இருவரும் வாசலைப் பார்த்தனர்.

அக்கா வரும் வேளைபார்த்து வீட்டுக்கு வந்த ராஜா, வாஸந்தியை சப்பித் துப்பி விடுவது போல் பார்த்தபடி வாசலண்டை நின்று கொண்டிருந்தான்.

தன் தாமதத்தை எண்ணி அக்காவுக்கு அஞ்சுவது அவன் தோற்றத்தில் தெரிந்தது. தேவி ஒன்றும் பேசவில்லை. இளசுகளின் கோபத்தைக் கண்டு மெல்லப் புன்னகைத்தாள். ராஜா வாஸந்தியைக் கறுவிகொண்டு உள்நுழைந்தாள்.

"பொட்டிக் கடையிலே பாண்வாங்கி வாறியா தம்பி? ராஜாவுக்குக்

கொஞ்சம் தேத்தண்ணி குடும்மா", என்றாள் தேவி.

"வாணாக்கா, அவளும் அவதேத்தண்ணியும்!" என்றவாறு அக்கா நீட்டிய காசை வாங்கிக் கொண்டு மீண்டும் வாசலைக் கடந்தான்.

ராஜா சென்றதும் வீடு அமைதியடைந்தது தேவி களைப்பு நீங்கிச் சுவற்றில் சாய்ந்தாள். தருணம் பார்த்திருந்த வாஸந்தி....

"அக்கா!" என்றாள் குழைவாக, அவளது உதடுகளில் உள்ளத்தின் அச்சம் தெளிவாய்த் தொனித்தது.

"என்னம்மா?" என்றாள் தேவி. அவள் பக்கம் திரும்பியவளாக. ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளும், ஒழுங்கு முறைக்குள்ளும் வளர்க்கப்பட்டதால் மூத்தவள் அறியாது எதையும் செய்யும் மனத்திராணி இல்லாத வாஸந்தி தொடர்ந்து பேசினாள்.

"அக்கா... செல்வம்..." எனத்தொடங்கினாள். மேற்கொண்டு வார்த்தைகள் வெளிவராமல் நாக்குத் தடுமாறியது. அவள் முகபாவங்களைக் கண்டு, தன் முகபாவம் மாறச்சற்று அதிர்ந்தவளாய் வாஸந்தியை நோக்கினாள் தேவி.

மேலும் தொடர்ந்தும் பேச வார்த்தைகள் வராத வாஸந்தியின் கண்கள் பயத்தால் பனித்தன. தேவி மேலும் அதிர்ச்சியடைந்தாள்.

"என்னாம்மா? செல்வாவுக்கு என்ன?"

அவள் பதில் சொல்லவில்லை. சிறிது நேர அமைதியின் பின்னும் தேவியின் கனிவான வார்த்தை அபிஷேகத்தின் பின் அமைதி கொண்ட வாஸந்தி, சொல்ல நினைந்த அனைத்தையும் வார்த்தைகளாய் உருமாற்றி தேவியின் செவிகளில் புகுத்திவிட்டாள்.

வாஸந்தி கூறிய அனைத்துச் சேதிகளையும் கேட்ட தேவி முதலில் அதிர்ச்சியடைந்தாள். அவள் பற்றித் தான் கொண்டிருந்த எண்ணங்கள் மண்ணாகிப்போகுமோ என எண்ணி அவள் நெஞ்சம் பதறியது.

இது போன்ற வயதில் வீரபுத்திரன் தன்னிடம் தன்விருப்பத்தைத் தெரிவித்ததைச் சட்டென அவள் நினைவுகள் மீட்டுப்பார்த்தன.

சிந்தித்துத் தெளியும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொள்ளாது, தன் உடன் பிறப்புகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு, தான் கொண்ட தீர்க்கமான முடிவு, அவனை அவன் எண்ணத்தில் மாற்றமடைய வைத்ததையும் நினைவு கூர்ந்தாள்.

அப்படியொரு மனத்துணிவும், பக்குவமும் வாஸந்திக்கு ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்பது, அவளுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. குடும்பச் சுமையைத் தானே தாங்கி காலத்தை நகர்த்தியதால் வாஸந்திக்கு அவள் போன்றதோர் பதிலைச் சொல்லத் தோன்றாதிருந்ததில் நியாயம் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

அனைத்தையும் கேட்டுவிட்டு அமைதியாய் இருக்கும் தேவியின் மௌனம் வாஸந்திக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. நீண்ட நேரம் இருவருமே பேசாதிருந்தனர்.

பலமான சிந்தனையால் உளத்தில் ஏற்படும் முகமாற்றங்களைக் கூட வாஸந்தியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மெல்ல இருள் படரத் தொடங்கியது. தேவியின் மனத்தில் இன்னுமோர் தெளிவான முடிவு தோன்றாமலே இருந்தது. வானத்தில் கருமை வரவரக்கூடி, மேற்கு வானில் தனக்கு விலாசம் தேடியது. ஒரு ஒளிக்கீற்று. அவ்வேளை சொல்லி வைத்தாற்போல் தேவியின் தெளிவற்ற மனத்திலும் ஒரு முடிவும் தோன்றி நிலைத்தது.

## 10

செல்வாவின் மனத்தில் இப்போது வாஸந்தி பற்றியோர் தெளிவான பதில் பதிந்திருந்தது. அவன் சந்தேகத்திற்கிடமற்றுத் தெளிவுற்றிருந்தாலும், தேவி பற்றி வாஸந்தி எழுதி இருந்த வரிகள் அவனைச் சிந்திக்கச் செய்தன.

தன் இளையவர்கள் பற்றி அவள் கொண்டிருக்கும் அபிலாஷைகள் கனவாகிப்போகாது, கனியாகவேண்டும்.

அவனது விருப்பத்துக்கு ஒப்புவதால் வாஸந்தியின் கல்விக்கு எந்தவித குந்தகமும் விளையக் கூடாது. அவ்வாறு ஏற்படின் தங்கள் வாழ்வுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் தன் அக்காவின்

பக்கமே, தன்னைத் தான் தயார்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்படும் என அவள் எழுதி இருந்தாள்.

தன் காதலைவிட அவள் தன் சகோதரியின் தியாகத்திற்கும், அவள் அபிலாஷைகளின் வெற்றிக்குமே முதலிடம் தந்திருந்தாள். நீண்ட நெடுநேர சிந்தனையின் பின்னர் செல்வம் ஒரு முடிவுக்கு வந்தான். அதனைச் செயல் படுத்தினால், தோன்றிய சிக்கலுக்கும் அதுவே விடையாக அமையும். என்பதும் அவன் மனத்தில் உறுதியாகியது.

அன்று சனிக்கிழமை. செல்வா தோட்டத்துக்கு வந்திருந்தான். அவன் வருகையைத் தேவியும் எதிர்ப்பார்த்திருந்தாள். தீர்க்கமான முடிவொன்று அவள் மனத்தில் இருந்தது. செல்வத்தின் மன நிலையும் அதற்கு ஒத்ததாகவே இருந்தது.

தேவி இம்முறை தன்னைச் சந்திக்க விரும்புவாள் என்பதும், தன்னிடம் வாஸந்தி பற்றிப் பேசுவாள் என்பதும், அவன் எதிர்பார்த்து வந்தவைகளே. வாஸந்தியின் கடிதம், முற்கூட்டியே அதனை அவனுக்குச் சொல்லி இருந்தது.

வரும் வழியில் தேவியின் வீட்டைத் தாண்டியே அவன் வந்தான். தேவியும் அவனைக் கண்டாள். இருவரும் பேசிக்கொள்ளவில்லை. வழக்கமான புன்சிரிப்பைக் கூட அவள் முகத்தில் அவன் காணவில்லை. அது அவனுக்குச் சற்றுச் சந்தேகத்தையும் தோன்றச் செய்தது. ஆனால் தேவியோ ஒரு புன்சிரிப்புக் கூடத் தன் முழுச்சம்மதத்தை வெளிப்படுத்திவிடுமோ என எண்ணினாள்.

வீட்டை அடைந்த செல்வம் வந்த களைமாறி, பகல் உணவையும் முடித்துக் கொண்டு ஒரு பத்திரிகையில் தன் கவனத்தை ஓடவிட்டான். இருந்தும் அவன் முயற்சி தோற்றுப் போனது.

தேவியின் பார்வையில் தோன்றிய வெறுமை அவனைக் கலக்கமுறச் செய்திருந்தது.

பகலவன் மேற்கை நோக்கிச் சரிந்து கொண்டிருந்தான். மணிக்கூடும் நாலடித்து ஓய்ந்தது. செல்வா வெளியில் புறப்பட்டான். மன நிலைக்கேற்ப நெஞ்சு சற்று வேகமாக இயங்கியது. இருந்தும் செல்வம் தன்னை

நிதானப் படுத்திக் கொண்டான். அவன் போட்டிருந்த திட்டங்கள் அதற்கு உதவின.

"எங்க போறேப்பா" அம்மா கேட்டாள்.

"தேவியக்கா வீட்டுக்கம்மா" என்றபடி படியிறங்கி நடக்கலானான் செல்வம். அவன் பாதங்கள் தேவியின் காம்பறாவை நோக்கி அவனை அழைத்துச் சென்றன.

வாசலில் தேவி நின்று கொண்டிருந்தாள். அவனுக்காகவே அவளங்கு காத்திருப்பது போலிருந்தது அவர்கள் சந்திப்பு.

அவள் முகத்தில் வழக்கமான புன்னகை இருக்கவில்லை. வெறும் சம்பிரதாயத்திற்குப் போல் முறுவலித்து உள்ளே செல்ல வழிவிட்டு விலகினாள். அவள் செய்கை அவனுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஆரம்பம் அப்படித்தான் இருக்கும், என்பதை அவன் முன் கூட்டியே நிதானித்திருந்தான்.

உள்ளிருந்த நாற்காலியில் அவன் உட்கார்ந்து கொண்டு கையில் இருந்த புத்தங்களை மரப்பெட்டிமீது போட்டான். வீட்டினுள் மற்ற இருவரும் இருப்பதற்கான அறிகுறிகள் தோன்றவில்லை. எல்லாமே ஏதோ திட்டமிட்டு நடப்பது போன்ற உணர்வினை அவனுக்கு ஏற்படுத்தின.

தேவி வழக்கம் போல் வாயில்படியில் தன்னை இருத்திக் கொண்டாள். இதுவரை அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவோ, பேசவோ முயலவில்லை. அங்கு அமைதியே நிலை கொண்டிருந்தது.

சிறிது நேரத்தின் பின் தேவியே மௌனத்தைக் கலைத்தாள். "செல்வா!".... என்றாள் தேவி.

பதிலுக்கு "ம்"... என்ற ஒலியோடு நிறுத்திக் கொண்டான் அவன்.

மீண்டும் அவளே பேசினாள். படித்தவள் என்பதால் வார்த்தைகள் தெளிவாயும், சுத்தமாயும் வெளிப்பட்டன. அதில் நிதானமும், பொறுப்புணர்வும் செறிந்து உதிர்ந்தன.

"வாஸந்தி எல்லாமே சொன்னா. நான் இத எதிர்பார்க்கல! வாஸந்தியின் படிப்பு முடிஞ்சதும் நானாவே அவளுக்கு ஒரு நல்ல புருஷனைத்

தேடிக் குடுத்து சந்தோஷமா வாழுறதப் பாக்கலாம் என்றிருந்தேன். அதுக்கு முன்னாடி நீ முந்திக்கிட்ட!"...

"எங்க என் ஆசையில மண் விழுந்திருமோன்னு நான் பயப்படுறேன்" என்றவாறு அவள் பேச்சைச் சிறிது இடை நிறுத்தினாள். அப்போதும் செல்வம் பேசா மௌனியாகவே இருந்தான்.

"பொறக்கும் போதே வறும, அம்மா செத்தத்துக்கப்புறம் யாருமில்லாம நின்னோம். ஒங்கம்மாவின் கைத்தாங்கல் இல்லண்ணா, எங்க மூணு பேரையும் பொதச்ச எடமே இப்ப புல்லு மொளச்சிருக்கும்!

"செல்வா! ஒன்னளவில பொன்னுமாமிக்கு எவ்வளவு ஆசைங்க உண்டுங்கிறது ஒனக்குத் தெரியுமா? வீரபுத்திரன்ட வாழ்வக் கண்டு அவ அடஞ்சிருக்கிற பூரிப்பும், மனச்சந்தோஷமும் இப்படியொரு அனாதக் குடும்பத்தில் சேர்ந்திட்டா அழிஞ்சி போகாதா?"

"செல்வா! நல்லா யோசிச்சிப்பாரு. எம்மட்டில, என் தங்கச்சி வாழ்கையவிட பொன்னுமாமியின் சந்தோஷந்தான் பெரிசாத்தெரியுது".

"நான் என் ஒடன் பொறப்புகளுக்குக்காக என் கடமையைமட்டுந்தான் செய்யுறேன். ஆனா ஒங்கம்மா, எங்களுக்காகச் செய்யுற தியாகம் எவ்வளவு! நான் ஒரு நாளும் என்ட பொன்னுமாமிக்குத் துரோகம் பண்ணமாட்டேன் இது சத்தியம் செல்வா!..."

"வாஸந்தியின் படிப்புக்கு, ஒங்க ஆசைகள் எடஞ்சல உண்டு பண்ணக்கூடாது. இதை நான் என் சொய நலத்துக்காகச் செய்யிறதா நீ நெனைக்கிலாம். அதுக்காக நான் கவலப்படல. அதில கொஞ்சம் நெசமும் உண்டு. வாஸந்திய எதிர் காலத்தில ஒரு திறமையான மலைப் பொண்ணாக மாத்தத்தான் நான் ஆசைப்படுறேன் ".

"தேயிலச் செடிக்கு ரத்தம் பாய்ச்சும் வெறும் தோட்டத்துக் கூலிகளா, இனியும் நாம வாழக்கூடாது. நான் பள்ளியில படிக்கிறப்பவே இத ஒணந்திட்டேன்".

"என்னால ஆகாத ஒண்ணு, வாஸந்தி, காவேரி மாதிரி இளைய லைமொறப் பொண்ணுங்களால ஆகணுங்கிற பிடிவாதம் அப்போதே எனக்குத் தோணிச்சு".

"செல்வா! இதுமட்டும் ஏம்பக்க நியாயங்கள நான் சொல்லிட்டேன். வாஸந்தியின் வாழ்வு ஒன்னால ஒளி பெறும்னா அதில சந்தோஷப்படுற மொதல் ஜீவன் நான்தான். நல்லா யோசிச்சுப் பாரு. அவசரப்படாத. வாஸந்தி என்ன மீறி எந்த முடிவுக்கும் வரமாட்டா".

தேவியின் நீண்ட நேரப் பிரசங்கத்தை, ஒன்று விடாமல் செவி கொண்ட செல்வம், வெளியேறத் தயாரானான். எத்தனையோ கேள்விகளையும், பதில்களையும் அவன் தானே தனக்குள் கேட்டும், பதில்களைத் தயாரித்தும் வந்திருந்தான். ஆனால் ஒன்றுமே பேசாதவனாய் அவள் பேச்சுக்குள் கட்டுண்டு வெறுமனே வீடு திரும்பினான்.

தேவி சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவன் செவிப்பறைகளை தட்டிக் கொண்டே இருந்தன. "வாஸந்தியின் வாழ்வு ஒன்னால ஒளிபெறும்னா அதில சந்தோஷப்படுற முதல் ஜீவன் நான்தான்" சட்டென்று அவள் சொன்ன இந்த வார்த்தைகள். அவன் நினைவில் தோன்றி நிலைத்தது. அப்படின்னா தேவி என் விருப்பத்துக்கு மறுப்பில்லை. அந்த நினைவு இப்போது அவன் மனச்சுமையைச் சற்றுக் குறைத்தது.

என் தாயின் என்னைப்பற்றிய கனவுகளும், வாஸந்தியின் படிப்புமே இப்போது பிரச்சனைகளாக எஞ்சி நிற்கின்றன.

நான் வாஸந்தியின் கல்விக்கு இடையூறாக இல்லாது, உறுதுணையாகவிருந்தால் அந்தச் சிக்கலுக்குப் பரிகாரந் தோன்றும். ஆம்... தேவி கூறியது போல அம்மாவின் ஆசைகள் எப்படி இருக்குமோ!.

தன் குழந்தை போல வளர்த்த பொண்ணை, தன் மகனுக்குத் தேர்ந்து கொள்வதை, அம்மா விரும்பாமலும் இருக்கக் கூடுமே. அன்றி விரும்பவுங்கூடும். மாறாக அண்ணன் போல் நகர்ப்புறத்தில் சீருஞ்சிறப்புமாய் துணையைத் தேடிக்கொண்டு வாழ்வதை விரும்பவுங்கூடும்.

அம்மா அண்ணனைப் பற்றிப் பேசிப் பெருமைப் படுவாள். அவன் சௌகரியமான வாழ்வை மற்றவர்களுக்கும் சொல்லி மனம் பூரிப்பாள். இந்நிலையில் என்னைப் பற்றி எப்படியெல்லாம் மனக்கோட்டைகள் கட்டி இருப்பாளோ? செல்வம் சிந்திக்கலானான்.

செல்வம் அங்கிருந்து சென்றதும் தேவி தனித்திருந்து சிந்தித்தாள்.

அவள் மனக்கண்முன் வீரபுத்திரன் தோன்றினான். பத்துவரை படித்திருந்தாலும், தொழிலில் தோட்டத்துக் கூலியான என்னை அவர் விரும்பினார். குடும்ப பந்தம் ஒரு காரணமாக இருப்பினும், என் மீது அவர் கொண்டிருந்த அன்பும், அனுதாபமும் அவரை வாய்விட்டே கேட்கவைத்தன.

தன் பொறுப்புகளை உணர்ந்து, தன் இளமையைத் தனிமையில் கழிக்க வேண்டி இருந்ததால், பொன்னுமாமியின் விருப்பத்தைக் கூட அவளால் ஏற்க முடியாது போனது.

இன்றும் அது போன்றதோர் நிலை. செல்வம் வாஸந்தியை விரும்புகின்றான். வாஸந்தியும் அதற்கு ஒப்புதல் போலவே தோன்றுகின்றாள். இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்கள். பொருளாதார வசதி தவிர்ந்த பிற எல்லாவற்றிலுமே!.

ஆனால் பொன்னுமாமியின் மனநிலை தெரியாமல், இதற்கு எவ்விதத்திலும் ஒப்புதல் தரக்கூடாது. அந்தத் தாயுள்ளத்தைப் புரிந்து கொள்ளாதவரை, வாஸந்தியின் படிப்பைக் காரணங்காட்டியே இவர்களைச் சேரவிடாது தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு அவள் எண்ணிக்கொண்டிருக்கையில், வாஸந்தி உள்ளே நுழைந்தாள். தேவி எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வழக்கம் போல் தன்னை உருமாற்றிக் கொண்டாள்.

வாரங்கள் சில நாட்களாக உதிர்ந்து மறைந்தன. யாரும் இதுபற்றி எதுவும் பேசிக் கொள்ளவில்லை. செல்வமும் தன் பாடப் பொறுப்புகளைக் காரணங்காட்டி ஞாயிறு நாட்களில் வந்து, அன்றே திரும்பியும் விடுவான்.

அக்காவின் மௌனம், செல்வாவின் நடைமுறைகள், வாஸந்திக்கு மனச்சுமையைத் தந்தன. அதனால் ஏற்பட்ட அவள் நடைமுறை மாற்றங்களை தேவி அவதானித்தாள். இருந்தும் அவள் வாஸந்தியிடம் எதுவுமே கேட்கவில்லை.

வழக்கம் போல் காவேரி வருவாள். முன்போலல்லாது. வாஸந்தி பொன்னுமாமி வீட்டுக்குச் செல்வதைக் குறைத்துக்கொண்டாள். இந்த மாற்றத்தை காவேரியும் அவதானித்தாள். பொறுமை இழந்த அவள் வாஸந்தியடம் அதுபற்றி ஒரு நாள் கேட்டாள்.

"என்னா வாஸந்தி, நீ இப்ப முந்தி மாதிரி இல்லியே?..." என்று. வாஸந்தி அந்தக் கேள்விக் கணையால் அதிர்ந்து போனாள். அதனை மறைக்க முயன்ற அவள் கலகலத்துச் சிரிக்க முயன்றாள். அதில் ஒரு பொய்மை மறைந்து கிடப்பதை காவேரி கண்டாள்.

அது ஏன் என்பதை வலிந்து தெரிந்து கொள்ளும் முயற்சியில் அவள் இறங்க மனது ஒப்பவில்லை. அதனால் மீண்டுமொரு வினாப்பிறக்காது ஒளிந்து கொண்டது.

வாஸந்தி அடுத்த நாள் காலையிலேயே பொன்னுமாமி வீட்டுக்கு வந்தாள், காவேரியின் எண்ணத்தைப் பொய்யாக்கும் நோக்கில்.

வாஸந்தியைக் கனநாட்களின் பின்கண்ட பொன்னுமாமி அவளை மகிழ்ச்சி பொங்க வரவேற்றாள்.

"என்னம்மா வாஸந்தி, இப்ப எங்க ஊட்டுப்பக்கமே வரமாட்டிங்கிறியே? ஏ...ன்? காவேரி ஏதாச்சும் சொல்லிட்டாளா?" என்றாள் பொன்னுமாமி.

"இல்ல... மாமி!".. என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள் வாஸந்தி. காவேரி இடை புகுந்தாள்.

"அம்மா! அவளுக்கு மாப்புள்ள பாக்கிறாங்க, அதான்!" என்றாள் கிண்டலாக. ஏற்கனவே இவள் நடைமுறையில் கண்ட வெறுப்பும், அவள் வார்தைகளில் கலந்து வெளிவந்தது.

பொன்னுமாமி வாய்விட்டுச் சிரித்தாள். ஆனால் வாஸந்தி மறுத்து அவளுக்கு எதையும் சொல்லவில்லை. பேசாது நின்றாள். ஏதோ ஒன்று அவள் மனத்தைக் குடைவது போலிருந்தது. சற்று முகம் வெளிறி முகமும் வியர்த்தது.

## 11

மலைகளிடையே ஒளிந்து காய்ந்த கதிரவன் மெல்லத் தலையுயர்த்தினான். முதலில் பனித்துளிகள் மின்னிப் பின் காய்ந்து மறைந்தன.

இரவின் குளிருக்கு ஈடுகொடுத்த தேயிலைச் செடிகள் அவன் உஷ்ணக் கிரணங்களால் தம்மைச் சூடாக்கிக் கொண்டன.

வழக்கம் போல் கண் விழித்த தேவி காலைக் கடன்களின் பின் மலைக்குப் புறப்பட்டாள். நிரையில் சேர்ந்து கொண்ட அவள் விரல்கள் வேகமாய் இயங்கின. மற்றப் பெண்களும் கூடையை நிரப்புவதில் கண்ணாயினர்.

காலை நிறுவைக்கு நிறையைக் கூட்டிக்கொள்ள, அனைவரும் முயன்றனர். இடையில்லாமல் செழித்துக் கிடந்த செடிகளுக்கிடையில் லாவகமாக தங்களைச் சொருகிக் கொண்டு விரல்களை இயந்திரமாக்கி கொண்டனர்.

அன்று அந்த மலைக்கு கங்காணி முனியனே கடமைக்கு வந்திருந்தான். தேவி கொழுந்தெடுக்கும் புறத்தில் அவன் பார்வை படர்ந்தது. செடிகளை ஒருமுறை நோட்டமிட்ட அவன், வேண்டு மென்றே தன்முகச் சாயலை மற்றிக்கொண்டு பெருங்குரலில் கத்தினான்.

"அடியேய்! என்னா பண்ணுற நீ? பணிஞ்ச கொழுந்த ஏன் எடுக்கிற? ஒசந்த வாது ஒடிக்கல! மட்டஞ் சரியில்ல! வேல சரியில்லாட்டி வெரட்டிப்புடுவேன்.!"

அவள் அருகில் நெருங்கி வந்தான். அவள் ஆயும் செடியைச் சுற்றி நோட்டமிட்டான்.

"ஏண்டி காது முடிச்சு எடுக்கறே? மூதேவி தொரவந்து கேட்டா, ஒங்கப்பனுக்கு யார்டி வதிலு சொல்லுவா? நான் புள்ளகுட்டிக்காறன்! எங்கடி போவேன் தெண்டங்கட்ட..?" என்றான் மீண்டும் வெறி கொண்டவனாக.

தேவிக்குப் புரிந்தது இவன் வேண்டுமென்றே குற்றம் ஏதுமில்லாமல் குற்றம் சுமத்துகின்றான் என்பது.

கொழுந்து பறிக்கத் தொடங்கிய காலத்தில் இருந்தே, அவள் தன் தொழிலில் கருத்தாய் இருந்தாள். படிப்பு வாசனையற்ற மற்றப் பெண்களைப் போலல்லாது, செய்யும் தொழிலை மதித்து வருபவள் அவள். அதில் நேர்மையும், தூய்மையும் இருந்தது.

தாயின் அனுபவமே அவள் கொண்ட பாடமாக இருந்தது.

கண் கண்டால் கை செய்யும்'! தேவி படித்தவள் அதனால் பிறரின் அனுபவ முதிர்ச்சியைக் கண்ணால் கண்டு தன்னையும் அதுபோல் பழக்கிக் கொண்டாள்.

முனியனின் கூப்பாட்டிற்கு அவள் செவிசாய்கவில்லை. சுற்றி நின்ற மற்ற நிரைப் பெண்களுக்கும் இவன் கத்தல் கேட்டது. அவன் சாட்டும் குற்றச் சாட்டுக்கள் தேவிக்குப் பொருந்தாதவை, நியாய மற்றவை என்பதை அவர்கள் அறிவார்கள். இருந்தும் என்ன செய்ய முடியும் அவர்களால். மறுத்துப் பேசினால் மறுநாள் வேலை கிடைக்காதே.

தேவியின் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தன அவன் தொடர்ந்து பேசிய சுடு சொற்கள். தேவி நிதானமடைந்தாள். இவன் வேண்டுமென்றே தன்னைச் சீண்டுகின்றான். இனிமேலும் இங்கு தங்கி இருத்தல் கூடாது. என எண்ணிய அவள் வரப்போகும் எதிர்விளைவுகளையும் பொருட்படுத்தாது. வேலையை நிறுத்திவிட்டு மலையிறங்கி லயத்தை நோக்கி வேகமாக நடக்கலானாள்.

தான் எதிர்பார்த்ததே நடப்பதைக் கண்ட முனியன் உள்ளூர மகிழ்ந்தான். இருந்தும் தன் திட்டப்படி அனைத்தும் நடக்குமா என்பதில் அவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தோடு அவன் பார்வையை அவள் பின்னால் செல்லவிட்டான்.

செடிகளுக்குள் நெளிந்து செல்லும் குறுக்குப்பாதை ஊடாக தேவி நடையைத் துரிதப்படுத்தினாள். கோபத்தால் நெஞ்சு படபடக்கக் கால்கள் நிலத்தில் ஊன்றிப்பதிந்தன. மற்றப் பெண்கள் இவற்றைக் கண்டும் காணதவர்களாக தமது இயலாமையை எண்ணி வருந்தியவாறு தத்தமது பணியைத் தொடர்ந்தனர்.

தேவி செல்லும் வழியை ஊகித்து அறிந்து கொண்ட முனியன் சிறிது நேரமே அங்கு நின்றான். தனது செய்கையை எவருமே கண்காணிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின், அவள் சென்ற திக்கை நோக்கி அவன் கால்கள் நகர்ந்தன.

மலையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் அவன் அறிவான். கொழுந்து பறிக்கும் பெண்களை விட, அவனுக்கு எல்லா மலைகளுமே அத்துப்படி.

தொலைதூரம் வேகமாய் நடந்ததால் பருக்கைக் கற்களில் ஊன்றிப் பதிந்த பாதங்கள் வலித்தன தேவிக்கு. விரைவாக லயத்தை அடைந்து விடவேண்டும் என்ற வேகம் மனத்துக்குத் திடமளித்தாலும், பெண்மையின் மென்மைக்குள் அவளும் அடங்கினாள்.

முன்னர் கிடைத்த அனுபவம் முனியனைப் பின் தொடர விடாது என்பது தேவியின் திடமான முடிவு. இருந்தும் அவன் வார்த்தைகளில் இருந்த சூடு அவளைச் சற்றுக் கலங்கவே செய்தது.

அடிக்கடி பின்னால் பார்த்தபடி நடந்தாள். அவனை அவள் கண்கள் கண்டு கொள்ளவில்லை. அவன் தன்னைத் தொடரவில்லை என்பது மனத்தில் உறுதியாகியதும், நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். அவள் பாதங்கள் வலித்தன.

ஒரு சிறிய திருப்பத்தில் அவள் திரும்பியபோது, திடீரென ஒரு இரும்புக்கரம், குரல் வெளியில் வராதவாறு வாயை இறுகப் பொத்தியது. அடுத்த வினாடியே மற்றொரு கரம் அவளை முற்றாகச் சுற்றி உடலோடு இறுக அணைத்தபோது, தன் பலங்கொண்ட மட்டும் திமிறி தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றாள் தேவி.

மிக முன்னெச்சரிக்கையாகப் பிடித்தவன் இதனை எதிர்பார்த்தது போல் பிடிதவறாமல் அவளை நிலத்தில் சாய்த்தான். அவள் தன் முகத்தைத் திருப்பு முன்னரே, அவள் நெற்றியை அவன் முன் நெற்றி பலமாகத் தாக்கியது. தாக்குண்ட வேதனை தாங்காது அவள் மூர்ச்சையானாள்.

## 12

நீண்ட பொழுதாகியும் அக்காள் பகல் உணவுக்கு வராதது கண்ட வாஸந்தி, முற்றத்துக்கு வந்து அவள் சென்ற மலைப்பக்க வழியை தன் பார்வையால் துழாவினாள்.

தோட்டத்துப் பெண்கள் தங்கள் பகலுணவை முடித்துக்கொண்டு அம்மலை வழிப்பாதையில் மீண்டு செல்வதே அவள் கண்களுக்குப் பட்டது.

வாஸந்தி கலவரமடைந்தாள். வழக்கம்போல் வருவாள்

என்றிருந்ததால் யாரிடமும் தேவிபற்றி அவள் கேட்வில்லை. தம்பியும் பள்ளியிலிருந்து வந்திருந்தான். அவன் தேவியைப் பற்றி எதுவுமே கேட்டவில்லை. வழக்கம்போல் பகலுணவின்பின் மலைக்குப் போயிருப்பாள் என அவன் நினைத்தான்.

சாப்பிட அவன் உட்கார்ந்த போதுதான், அக்கா வராத செய்தியை வாஸந்தி அவனிடம் சொன்னாள். அவன் பதறிப்போனான். வெளியில் வந்து அவள் சென்ற மலையை நோக்கி ஓடினான். அவன் கால்கள் ஒரு நொடிப் பொழுதும் நிலத்தில் தரிக்கவில்லை.

நீண்ட வழிகளைத் தாண்டி வந்த அவன் தெரிந்த குறுக்கு வழியொன்றுட் புகுந்து ஓடினான். சிறிது தூரம் தான் அவன் கால்கள் நகர்ந்தன. திடீரென அவை பலமிழந்து நிற்கவும் திராணியற்று, அவன் முன்னே கண்ட காட்சியால் சோர்ந்து விறைத்தது.

மேற்சட்டை கிழிந்து போனதால் சேலையின் மேற்புறத்தால் தன் உடலைப் போர்த்தி நிலத்தில் கிடந்த தேவி, எழுவதற்கு கையை ஊன்றி முயன்று கொண்டிருந்தாள். ஊன்றிய கையில் பலமற்றுப் போனதால் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. வேதனை தாங்காது வாய் முனங்கிக் கொண்டிருந்தது.

நெற்றிப் பொட்டு வீங்கி இரத்தம் கட்டி இருந்தது. உடலின் பாகங்களில் உராய்வுகளால் இரத்தம் கசிந்து காய்ந்திருந்தது.

ராஜாவுக்கு எதுவுந் தோன்றவில்லை அவளண்டை ஓடினான். அவளைத் தாங்கிக் கொண்டான். அவள் கண்களிலிருந்து பொங்கி வடிந்த நீர் அணைத்திருந்த அவன் நெஞ்சைச் சுட்டது. அவள் வாய் பேசவில்லை. முயன்றாள், முடியவில்லை. நாக்குழறியது வார்த்தைகள் வெளிவரவில்லை மௌனமானாள்.

ராஜா அவள் நிலைகண்டு வெறிகொண்டான். நடந்ததை அறிய, "அக்கா! என்னக்கா! ஒனக்கு என்ன ஆச்சி, யாருக்கா ஒன்னை அடிச்சாங்க. சொல்லுக்கா".

அவன் பதறினான். அவனை அறியாமலேயே அவன் கண்கள் கண்ணீரைப் பெருக்கின. வாய்விட்டே அழுது விட்டான் இளையவன்.

அவளாள் பேசமுடியவில்லை, பேச முயலவுமில்லை. நடந்தவற்றைக் கூறினால் ஏற்படும் விளைவுகளை அந்த இயலாத நிலையிலும் அவள் உணர்ந்தாள். என்னை லயத்துக்குக் கொண்டு போ என அவள் சைகையால் அவனுக்கு உணர்த்தினாள்.

கைத்தாங்கலாக. அவளைத்தன்னோடு அணைத்தபடி ராஜா அவளைச் சுமந்தவனாக லயத்தை அடைந்தான்.

தம்பியின் கைத்தாங்கலில் அக்காவின் கோலத்தைக் கண்ட வாஸந்தி அதிர்ந்து போனாள். நொடிக்குள் தன்னிலையடைந்து மறுபுறத்தில் அவளைத்தாங்கிக் கொண்டாள். இருவருமாய் தேவியை உள்ளே கொண்டு வந்து பாயில்கிடத்தினர். தேவி மூர்ச்சையானாள். வாஸந்தி ஊரதிரக் கத்தினாள்.

❀❀❀❀

நாட்கள் இரண்டாகியும் தேவி தன் அதிர்ச்சியில் இருந்து இன்னும் முற்றாக நீங்காதிருந்தாள்.

தோட்டத்து டாக்டர் ஐயாவிடம் பொன்னுமாமி அவளுக்கு மருந்து வாங்கித்தந்தாள். அத்தோடு அவள் தேவியை விட்டுப்பிரியவே இல்லை.

சுயநினைவு காணும்போது, தேவி பொன்னுமாமியிடம் நடந்தவற்றை ஒவ்வொன்றாகச் சொன்னாள். இருந்தும் அவள் டாக்டர் ஐயாவைத் தவிர வேறு எவரிடமும் இது பற்றி மூச்சுவிடவில்லை.

மற்றவர்கள் தங்கள் ஊகங்களை வதந்திகளாக்கி, தோட்டங்கள் அனைத்துக்கும் பரவவிட்டனர். அது பஞ்சிலிட்ட தீபோல் ஒவ்வொருவர் காதிலும் சேதியாய்ப் பற்றியது.

தோட்டத்துப் பெண்கள் சிலர் முனியனைச் சந்தேகித்தாலும் வெளியில் சொல்ல அஞ்சினர். அந்த வெறியனின் மிருகக்குணத்தை அவர்கள் அறிந்துவைத்திருந்தனர்.

ஒவ்வொரு பெண்ணும் அவன் பேசும் துஷ்டவார்த்தைகளுக்கு அவ்வப்போது பலியான அனுபவம் பெற்றிருந்தனர். அதுபற்றி அவர்கள் தத்தம் குடும்பத் தலைவர்களிடமும் சொல்லியதில்லை. ஏதேனும் விபரீதங்கள் நேர்ந்து விடலாம் என எண்ணி தங்கள் மனத்துள் சீரணமாக்கிக்

கொண்டனர். அவனைப் பகைத்ததன் விளைவே, தேவிக்கு இக்கதி நேர்ந்தது என அவர்கள் பூரணமாய் நம்பினர்.

இரண்டொரு நாட்களாக முனியன் தோட்டத்துக்கு வரவில்லை. நாட்டுக்குப் போயிருப்பதாக சொல்லிக் கொண்டார்கள்.

❀❀❀❀

ஊணுறக்கமின்றி சதா அழுதபடியே நாட்களைக் கடத்திய தேவிக்கு, பொன்னு மாமியின் ஆறுதல் வார்த்தைகள் மன அமைதியைத் தந்தன.

எல்லாமே இழந்து, பட்ட மரம்போல் தேவி கிடந்தாள். வாஸந்திக்கு எதையும் கேட்டு அறிந்து கொள்ளும் மனத்துணிவு பிறக்கவில்லை. நடந்தது எதுவாக இருக்குமென அவளால் ஊகிக்க மட்டுமே முடிந்தது.

வெளியில் செல்லாமல் ஒவ்வொரு நிமிடமும் தேவியுடன் கழிந்ததால் ஊர் பேச்சுக்கூட அவள் செவிகளுக்கு எட்டவில்லை. காவேரி கூட அவள் மனம் தாங்க மாட்டாளென அறிந்த சேதியைக் கூட வாஸந்தி செவிகளில் போடவில்லை.

எப்படியோ ராஜா நடந்தவற்றை அறிந்து கொண்டான். வெறும் ஊகங்கள் தான் என்றிருந்தாலும் அதில் உண்மை மறைந்திருப்பதை அவன் மனம் நம்பியது.

அடிக்கடி வீட்டை விட்டு வெளியேறிச் சென்று, நீண்ட நேரம் கழித்தே வீடுவந்து சேர்வான். அவன் நடைமுறையில் முற்றிலும் ஒரு மாற்றம் இருந்தது.

எதையோ சாதிக்கத் திட்டமிட்டவன் போன்று, மிக நிதானமாகவும் அமைதியாகவும் இருந்தது அவன் நடவடிக்கை. கண்களில் ஒரு வெறி நிரந்தரமாகவே குடிகொண்டிருந்தது.

இந்தச்சில நாட்களில் சுற்றியுள்ள தோட்டங்கள் அனைத்திலும் அவன் சுவடுபடியாத இடமே இல்லாததிருந்தது.

தேடுவது கண்ணில் காணாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தால், அவன் மனவெறி விஞ்சி நெஞ்சம் கனத்து அலைந்தான். "சாண்பிள்ளையென்றாலும் தான் ஓர் ஆண்பிள்ளை" என்பதை, மனத்தில் திடப்படுத்திக் கொண்டிருந்தான் அவன்.

# 13

பத்து நாட்கள் பகலிரவாய்த் தொடர்ந்து கழிந்தன. குற்ற உணர்வால் தோட்டத்துள் தலைகாட்டாதிருந்த முனியன் இரவோடிரவாக அவன் குடியிருந்த தோட்டத்துக்கு ஓரிரவு நடுச்சாமத்தில் வந்தான்.

தாழிட்ட கதவைத் தட்டித் திறந்தான். நடுநிசியில் அவனைக்கண்ட, மனைவியும் மக்களும் அவனைப்பார்க்கக் கூசினர். பத்து நாட்களும் அவர்கள் அவனால் பட்ட அவமானம், கேட்ட வசை மொழிகள், அவன் மனைவியைப் பத்திரகாளியாக்கியது. அவனை வாய்க்கு வந்தபடி திட்டினாள். அவள் அவன் செய்கையைச் சொல்லிக் காறி உமிழ்ந்தாள்.

தோட்ட மக்கள் அவனைக் கொல்ல இருப்பதாகவும், அது நடந்தே தீரவேண்டுமென்றும் சாபமிட்டாள். பெய்து கொண்டிருந்த மழையின் சலசப்பால் அவள் கூக்குரல் அந்த லயத்தோடே அடங்கியொலித்தது.

மனத்தில் தோன்றிய தெய்வங்களிடமெல்லாம், தான்வாழாவெட்டியாய் போவதையும் எண்ணாது அவனைக் காவுகொள்ள கைகூப்பி வேண்டினாள். தாங்கொணாக் கோபத்தால் ஏற்பட்ட வெறி, அவனை வெளியில் தள்ளிக் கதவை மூடவைத்தது.

வரும்போதே மூக்கு முட்டக் குடித்திருந்ததால், கொட்டிய மழையும், கூதல் காற்றும் அவன் உடலை ஒன்றும் செய்யவில்லை.

ஆனால் மனைவியின் கோபமும் அவள் பாடிய வசையும், கேட்ட வரங்களும் அவனைச் சற்று அதிகமாகவே அதிரச் செய்தன.

மனைவி அவனை வெளியில் தள்ளி கதவைச் சாத்திக் கொண்ட அவமானத்தை, அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் போதையே இருந்த இடம் தெரியாது அடங்கிப்போக, வாசலில் நின்றவாறே அவளைத் தூஷிக்கத் தொடங்கினான்.

அவன் குரலுக்கு லயத்து நாய்களே பதிலைச் சொல்லின. பக்கத்துக் காம்பறாக் கதவுகள் கூட ஒரு அங்குலமேனும் திறக்கப்படவில்லை.

சேவல் கூவி மூன்றாம் சாமத்திற்கு முகமன் கூறியது. கொட்டும்

மழையில் நனைந்து, குடிபோதையில் லயத்து முற்றத்தில் புரண்டு கிடந்தவன் வெறி சற்றடங்க எழுந்திருக்க முயன்றான். விறைத்துப் போன உடல் மெல்ல எழுந்து உட்கார்ந்து கொண்டது.

தன்னைச் சுற்றியுள்ள நிலத்தை அவன் கைகள் தடவித்தடவி எதையோ வேகமாகத் தேடின. சுவர் ஓரத்தில் அவனைப்போல அனாதரவாய்க் கிடந்தது. அவன் குடித்துவிட்டு வீசிய வெற்றுப் போத்தல்.

கையில் கிடைத்த அதனை பரக்கப்பரக்க தன்வாயோடு அதன் வாயைப் பொருத்தி தலையை உயர்த்தினான். ஏற்கனவே வெறுமையாகிவிட்ட அது தன்வயிறை நிரப்பாதது கண்டு, கடுங்கோபத்தால் அதனை நிலத்தில் வீசி அடித்தான். அது நொறுங்கிச் சிதறியது.

பாதிநினைவில் ஏமாற்றத்தோடு, அவன் மனைவியின் கோரதாண்டவமும் மனக்கண்முன் தோன்ற, அவன் மீண்டும் வெறி கொண்டவனானான். அவள் சிந்திய ஒவ்வொரு வார்த்தையும் துப்பாக்கியிலிருந்து புறப்படும் வெடி உருண்டைகளாக அவன் நெஞ்சத்தைப் பிளந்தன.

அந்தப் பொல்லாக்குளிரிலும் அவன் உடல் ஆத்திரத்தால் கொதித்தது. சூடான அவன் மூச்சு மழைநீரைக் கருக்கியது.

சிறு பொழுதில் மழையும் அடங்கியது. அவன் போதையும் தணிந்தது. அவன் சிறிது நிதானமடைந்தான். கடந்த நாட்களின் நிகழ்வுகள், ஒன்றன்பின் ஒன்றாக அவன் நினைவுக்கு வந்தன.

தேவி கண்முன் தோன்றினாள், ஒரு தேவதையாக. அவளின் உயர்ந்த பண்புகளைச் சொல்லிச் சொல்லி, ஏசிய அவன்மனைவியின் சொற்சரங்கள், அவளை அந்த உருவத்தில் பிரதிபிம்பம் செய்தன.

அவன் எழுந்திருக்க முயன்றான். அவனால் முடியவில்லை. மீண்டும் தன் உடற்பலத்தை ஒன்றாக்கி எழுந்தான். சோர்ந்தும் மரத்தும் போன அவன் கால்கள், நிலை கொள்ள மறுத்துத் தள்ளாடின. தன் உடலை நேராக்கி நிமிர்த்தி நிற்க முயன்ற அவன் முயற்சி தோல்வியுற, பின் நோக்கித் தடுமாறி தடாலென விழுந்தான். தொடர்ந்து அவன் எழுப்பிய மரண ஓலம், அந்த மலையையே அதிரச் செய்தது.

அந்தப் பயங்கர ஒலி, எவரையும் எழுந்திருக்கச் செய்யவில்லை. போதையின் உச்சகட்டம் என்றே, அனைவரும் எண்ணினர். அவன் மனைவியும் பிள்ளைகளும் கண்களை இறுகவே மூடிக் கொண்டு படுக்கையில் புரண்டனர்.

❀❀❀❀

சங்கு ஊதியும், அந்த இடத்தைவிட்டு எவருமே அசைவதாயில்லை. இரத்தம் உடலிலிருந்து பீறிப் பாய்ந்து, பனியால் உறைந்து சுற்றியும் கிடந்தது. கசாப்புக் கடைக்காரனின் இறைச்சி வெட்டும் மடுவம் போல் அந்தப் பிரதேசமே குருதியால் நனைந்துபோய்க் கிடந்தது.

செயலற்ற மரக்கட்டையாய், கண்கள் விழித்தபடி கிடந்த அந்தப்பிணத்தையே பார்த்தபடி அனைவரும் நின்றனர்.

உடைந்து போன மதுப்புட்டியின் கூரிய அடிப்பாகத்தின் மேல் வீழ்ந்த உடல் ஒரு புறமாய்ப் புரண்டுருண்டு ஒருக்கணித்துக் கிடந்தது. தடை செய்யப்படாததால் குத்துண்ட காயத்திலிருந்து இரத்தம் தடையின்றி வெளிப்பட்டதால் உடல் வெளிறிப் போயிருந்தது.

மனைவியும் மக்களும், இரவு நடந்தவற்றை மறந்து, பிணத்தைச் சுற்றி நின்று அழுது புலம்பினர். உறவினர்கள் சிலரும் அவர்களோடு ஒன்று சேர்ந்தாலும், தோட்டத்தில் மற்றொருவரும் அந்த மரணத்தை எண்ணிக் கவலைகொள்ளவில்லை. பல தோட்டத்துப் பெண்கள் ஒரு பீடை ஒழிந்ததாகவே எண்ணினர்.

கூடிநின்ற கூட்டத்தில் சேர்ந்து நின்ற ராஜா, தன்னாலாகாத ஒன்று தானாக நடந்து விட்டது கண்டு. மனம் வருந்தினான். ஏமாற்றத்தின் சாயல் அவன் முகத்தில் தெரிவதை எவரும் கண்டுகொள்ளவில்லை.

வாய்க்கு வந்தபடி பலரும் பலவாறு அந்த மரணத்துக்குக் காரணம் தேடிக் கொண்டனர். ஆனால் சட்ட வைத்தியமோ விபத்தால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் உண்டான அதிர்ச்சியும், இருதய சுவாசத்தடைப்பாடும் மரணத்திற்குக் காரணம் எனத் தீர்ப்புக் கூறியது.

நாட்கள் மலை மேகங்களாய் ஓடி மறைந்தன. தோட்டத்தில் முனியனின் மரணம், மறந்து போன கதையாயிற்று. ஆயினும் தேவியின்

மனத்தில் மட்டும் அவனால் ஏற்பட்ட ஆறாத்தழும்பு, அவனை மறக்கவிடாமல் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது.

செத்தாலும் முனியன் அந்த மென்மையான உள்ளத்தில் சாகாது வாழ்ந்தான். பசுமை கொண்ட வயலினுள் புரண்டெழுந்த கடாவினைப்போல் அவள் தூய்மை கொண்ட வாழ்வில் பாவம் புரிந்த பாதகனாகவே அவன் நிலைத்தான்.

## 13

ஒரு மாலைப்பொழுது என்றுமில்லாதவாறு செல்வம் வார நாளொன்றில் தோட்டத்திற்கு வந்திருந்தான். அவன் முகத்தில் கவலை மண்டிக்கிடந்தது. வந்த காரணத்தை அம்மா வினவினாள். அவள் வார்த்தைகளில் வியப்பு மேலிட்டிருந்தது.

"அம்மா! அண்ணிக்கி சொகமில்லயாம். ஆசுபத்திரியில அட்மிட் பண்ணி இருக்கிறதா அண்ணன் "போன்" பண்ணிச்சி," என்றான் செல்வம். பொன்னுமாமிக்குக் காரணம் புரிந்தது. சங்கரி கர்ப்பமுற்றிருந்தாள். ஆனால் பேறு காலத்திற்கு இன்னும் மூன்று வாரங்கள் இருக்கின்றனவே! அவள் கலவரமடைந்தாலும், மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ளவில்லை. வெறும் ஊகங்களுக்கும் இடம் தந்து மனத்தைக் குழப்பிக் கொள்ளவும் அவள் மனம் இடந்தரவில்லை.

அவள் வேகமாக இயங்கினாள். வீட்டுக்கதவை இறுக்கமாய் மூடி காவேரியிடம் சாவியைத் தந்து. "காவேரி, நாங்க வர்ர வரைக்கும் தேவிக்கிட்ட இரு," என்றபடி செல்வாவுடன் "டவுணை நோக்கி வேகமாய் நடந்தாள் ".

வீதிக்கு வந்தும், தாமதமாகவே வாகனம் கிடைத்தது. பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரத்துக்குள் சென்றுவிடலாம் என்ற அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. எப்படியும் வைத்திய சாலைக்குச் சென்று நிலைமையை அறிந்து கொள்ளும் எண்ணத்தோடு அங்கு சென்றனர்.

வானம் கறுத்து, இருள் மெல்லக் கவிந்து கொண்டிருந்தது.

வெளிவாயில் வழியாக, வாயில் காவல்காரனின் கையை நிரப்பிபிட்டு, இருவரும் உள்ளே நுழைந்தனர். "ஆபத்திற்குப் பாவமில்லை" என்று செல்வம் அதனைச் செய்தான். வழமையும் அதுவாக விருந்ததால் வசதியாகவும் அமைந்தது. பிரவச வார்ட்டுப் பக்கம் சென்றார்கள். அது வைத்திய சாலையின் ஒரு புறம் இருந்ததால், வெளியில் நின்று கவனிக்கும் வாய்ப்பும் இருந்தது.

அடிக்கடி மனித ஓலம் கேட்கும் ஒரு பகுதி, தாய் முதலிலும், குழந்தைகள் தொடர்ந்தும் அலறுகின்ற அமைதியற்ற பிரதேசம். அதனால் தான் என்னவோ, அதனைத் தனித்து வைத்திருந்தனர்.

புதுப்புது வரவுகளைத் தந்து கொண்டிருக்கும் புனிதஸ்தலம். தாய்மைக்குச் சான்றிதழ் வழங்கும் பொன்மேடை. 'வாட்டு'க்குச் சற்றுத் தொலைவில் ஒரு பெரும் ஆலமரம் நின்றது. அதன் நிழலில் பலர் நின்று கொண்டிருந்தனர். அன்றைய வரவுகளை மிக்க ஆவலோடு காத்திருக்கும் அப்பாக்களும், பாட்டிகளும்தாம் அவர்கள்.

அந்தக் கூட்டத்துள் தன் பார்வையை ஓடவிட்டாள் பொன்னுமாமி. வீரபுத்திரன் அங்கிருக்கவில்லை. சிறிது நேரம் தாயும் மகனும் அந்த மர நிழலில் தங்களையும் சேர்த்துக் கொண்டனர். வீரபுத்திரனை அவர்கள் கண்கள் சுற்றியும் தேடின. அவனைக்காணவில்லை. அம்மா பொறுமையிழந்தாள். நெஞ்சுக்குள் தன் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொண்டாள். சங்கரிக்கு எந்தவித தங்கடங்களும் இல்லாது, சுகமாக அனைத்தும் நடக்க வேண்டுமென அவள் மனம் ஏங்கியது.

வைத்திய சாலையின் ஒரு புறம் இருந்தால், வெளியில் நின்று கவனிக்கும் வாய்ப்பும் இருந்தது.

அடிக்கடி மனித ஓலம் கேட்கும் ஒரு பகுதி, தாய் முதலிலும், குழந்தைகள் தொடர்ந்தும் அலறுகின்ற அமைதியற்ற பிரதேசம். அதனால் தான் என்னவோ, அதனைத் தனித்து வைத்திருந்தனர்.

புதுப்புது வரவுகளைத் தந்து கொண்டிருக்கும் புனிதஸ்தலம். தாய்மைக்குச் சான்றிதழ் வழங்கும் பொன்மேடை. `வாட்டு'க்குச் சற்றுத் தொலைவில் ஒரு பெரும் ஆலமரம் நின்றது. அதன் நிழலில் பலர்

நின்று கொண்டிருந்தனர். அன்றைய வரவுகளை மிக்க ஆவலோடு காத்திருக்கும் அப்பாக்களும், பாட்டிகளும்தாம் அவர்கள்.

அந்தக் கூட்டத்துள் தன் பார்வையை ஓடவிட்டாள் பொன்னுமாமி, வீரபுத்திரன் அங்கிருக்கவில்லை. சிறிது நேரம் தாயும் மகனும் அந்த மர நிழலில் தங்களையும் சேர்த்துக் கொண்டனர். வீரபுத்திரனை அவர்கள் கண்கள் சுற்றியும் தேடின. அவனைக்காணவில்லை. அம்மா பொறுமையிழந்தாள். நெஞ்சுக்குள் தன் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொண்டாள். சங்கரிக்கு எந்தவித தங்கடங்களும் இல்லாது, சுகமாக அனைத்தும் நடக்க வேண்டுமென அவள் மனம் ஏங்கியது.

குழந்தையொன்று வீறிட்டு அலறும் ஒலி, பொன்னுமாமியை அந்த ஒலிவந்த பக்கம் திரும்பச் செய்தது. அது தனது பேரப்பிள்ளையாயிருக்குமோ என்று அவள் எண்ணும் வேளை அங்கிருந்து வீரபுத்திரன் வேகமாக ஓடிவந்தான். அப்போதுதான் அவன் அவர்களைக் கண்டிருக்க வேண்டும்.

அவன் ஓடிவருவதும், அவனிருந்த நிலையும், அவர்களைத் திகில் கொள்ள வைத்தன. ஏதோவொரு விபரீதம் நடந்தது போன்று அவர்கள் கண்களுக்கு அவன் தோற்றம் தெரிந்தது. இரண்டடி முன்வைக்குமுன்னே, அவன் அவர்களை அடைந்துவிட்டான். அடுத்து அவன் சொன்ன வார்த்தைககள் பொன்னுமாமியின் தலையில் தான் நிழலுக்காய் நின்ற ஆலமரமே புரண்டு விழுந்த அதிர்ச்சியைத் தந்தன.

"அம்மா! சங்கரி என்னத் தவிக்கவிட்டுப் போயிட்டாம்மா" என்றவாறு தாயின் தோளில் முகத்தைப் புதைத்து அவன் குமுறியழத் தொடங்கினான்.

அம்மாவிற்கும் அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அருகில் இருக்கும் மனிதர்களையும் பொருட்படுத்தாமல், அவள் வாய்விட்டே அலறினாள். செல்வம் தன்னைத் கட்டுப்படுத்த முயன்றும், அன்பான அண்ணியின் பாசம், அவனைத் தோல்வி கண்டு வென்றது.

சங்கரியின் மேல் பொன்னுமாமி அளவுமீறிய அன்பு கொண்டிருந்தாள். தோட்டத்து வாழ்வை அறிந்திராத சங்கரி, திருமணத்தின் பின், தன்னை அதற்கும் தயார் படுத்திக் கொண்டிருந்தாள். குடும்பத்தின்

பூரணமான அன்புக்கும், மதிப்புக்கும் ஒரு மொத்தமான சொந்தக்காரி சங்கரி யென்றால் பொருந்தும்.

பொன்னுமாமியால் நிற்கமுடியாதவாறு கால்கள் தளர்ந்தன. மகனைச் சற்று விலக்கி, நிலத்தில் குந்திக் கொண்டாள்.

"மகளே!" என்று மட்டும் அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர, அவள் மூர்ச்சையானாள். செல்வம் தாயைத் தாங்கிக் கொண்டு அவள் விட்ட அழுகையின் குறைய அண்ணனோடு சேர்ந்து மௌனமாக்க தொடர்ந்தான்.

❀❀❀❀

துளையுண்ட குழலில் காற்றுப் புகுந்தெழ விட்டுவிட்டுக் கேட்கும் இனிய நாதம் போல், மெல்ல அழும் அந்தப் பிஞ்சுக் குரலில் அங்கிருந்த எவருக்கும் அதிக நாட்டம் எழவில்லை. தாயைப் பறித்த கன்றாகவே அதனை அனைவரும் எண்ணினார்கள் போலும்.

ஓரிரு நிமிடங்கள் தான் அந்தக் குரலைத் தொடரவிட தேவியால் முடிந்தது. தான் முந்திக் கொள்ள முடியாமையால் அந்தச் சில நிமிடங்கள் அவள் பொறுத்திருந்தாள். பின் அந்தப் பச்சைப் பூச்செண்டை கையிலள்ளி நெஞ்சோடு சேர்த்துக் கொண்டாள். அந்த அணைப்பில் ஏதோவொரு சுகத்தை அது அனுபவித்திருக்க வேண்டும். சிறிது நேரம் அது தன் அழுகையை அடக்கிக் கொண்டது.

மீண்டும் மெல்லக் குழந்தையின் குரல் ஓங்கியது. பசியால் அழுகிறது என்பதை, தங்கையையும், தம்பியையும் வளர்த்த அனுபவம் புரிந்து கொள்ள வைத்ததும், தேவி குழந்தைக்கு பால் கரைத்துப் புகட்டினாள். பசிநீக்கி அவள் நெஞ்சோடு அணைத்துக்கொள்ள அது ஆழத் தூங்கியது.

தினமும் காலைப் பொழுதில் கொய்தெடுக்கும் பனிநீர் படிந்த தேயிலைத் கொழுந்தின் மென்மையை அந்தப் பச்சை மண்ணில் தேவி உணர்ந்தாள். மரத்தைப் பிரிந்து சிலநிமிடங்களில் வாடிவிடும் அந்தத் தளிர்களின் நிலை இந்தத் தளிருக்கும் ஏற்பட்டு விடக் கூடாதே, என்ற ஆதங்கம் அவள் நெஞ்சில் மேலோங்கி நின்றது.

மடியில் கிடத்தி அதை நோக்கினாள் தேவி. தாய்மைப் பேற்றை அடைந்திருக்க வேண்டிய வயதில், அந்தப் பேறு கிட்டாத அவள் மனத்தில், ஒரு அதிர்வு தோன்றி மறைந்தது. தானே தாய்மை பெற்றுவிட்டது போன்ற, ஒரு உணர்வால் அவள் உடலும் சிலிர்த்தது. ஏக்கத்தின் கோடுகள் அவள் முகத்தில் தோன்றி மறைந்தன.

## 14

சங்கரிக்கு மூன்றாம் பிரவசத்திற்குச் சில வாரங்களே இருந்தன. சிறிது சிறிதாய் அவள் பாதங்கள் 'புடைத்துப் பருத்தன. பக்கத்தில் இருக்கும் ஒரு தனியார் மருத்துவமனையில் ஒரு முறை சிகிச்சை பெற்றும் போதுமான மாற்றங்கள் தென்படவில்லை. வரவர இரத்த அழுத்தம் அதிகரிக்கவே, சங்சரியை பொது மருத்துவமனைக்யில் உடனடியாக அனுமதிக்கும்படி டாக்டர் வற்புறுத்தினார்.

வீரபுத்திரன் அவ்வாறே செய்தான். வேண்டிய அனைத்துப் பரிசோதனைகளும் செய்யப்பட்டன. குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படும், என எண்ணிய மருத்துவர்கள் வீரபுத்திரனிடம் விளக்கி அவசர சத்திர சிகிச்சைக்கு முடிவு செய்தனர். தாயும் குழந்தையும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன. தீங்கில்லாமல் குழந்தை வேறுபட்டாலும் சங்கரியின் நிலைமை ஆபத்தான நிலையில் இருந்து மீளாதிருந்தது.

மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பும், மருத்துவத்திறனும் இறைவிதியை வெல்ல முடியாது போயிற்று. இரத்தத்தில் ஏற்பட்ட நச்சுத்தன்மையால் அவள் உயிர் உடலை மறந்து பிரிந்தது.

குழந்தைகளோடு வீரபுத்திரன் தாய்வீட்டில் தங்கினான். நகர்புறத் தனிவீட்டில் அவன் எப்படிக் குழந்தைகளோடு தங்குவான். சங்கரியின் நினைவு அவனை அங்கு தங்கவிடாது, என்பதை அறிந்த அம்மா மகனைத் தன்னோடு இருக்கும்படி கேட்டுக் கொண்டாள். அன்றைய மனநிலையில் அதுவே சரியென அவனுக்கும் பட்டது.

வேலைக்கும் போகாது எத்தனை நாள் காலத்தைக் கடத்துவது. பிள்ளைகள் தாயின் பாதுகாப்பில் இருப்பதால், மீண்டும் அவன் வேலைக்குச் செல்லலானான்.

வாரமொருமுறை மட்டுமே அவனால் தோட்டத்துக்கு வர முடிந்தது. குழந்தைகளைக் காணும் போதெல்லாம், சங்கரியின் எண்ணம்மேலோங்கும். தனித்து விடப்பட்ட ஒரு சூன்யத்துள் அகப்பட்டவன் போல அவன் நிலைகுலைந்து நின்றான்.

பொன்னுமாமிக்குக் கடைக்குட்டியைப் பராமரிப்பது, அவள் வயதைப் பொறுத்தமட்டில் பெருஞ்சிரமமாகவே இருந்தது. மூத்த குழந்தைகளைப் பொறுப்போடு காவேரி கவனித்துக் கொண்டாள்.. தேவியின் அனுசரணை அவளுக்குச் சுமையைக் குறைத்தது.

தன் தாயை இழந்து, இரண்டு குழந்தைகளோடு தான் தனித்து விடப் பட்டபோது, தோள்தந்தவள் இந்தத் தாயல்லவா? இப்போது, அவளும் அன்று என்னைப் போல் நிற்கதியாய் நிற்கையில், அவளுக்கு உதவுவது, தனக்கும் பிராயச்சித்தம் செய்யக் கிடைத்த பாக்கியமாகவே தேவி கருதினாள்.

தினமும் காலையிலும், மாலையிலும் குழந்தையைக் கழுவிச் சுத்தம் செய்து, பாலூட்டிவிட்டுச் செல்வதும் தேவிக்கு வழக்கமாறிற்று.

சங்கரியின் பிரிவு பொன்னுமாமியின் குடும்பத்திற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகவே அமைந்தது. வெவ்வேறாக வாழ்ந்திருந்தாலும், குடும்பத்தின் ஒவ்வொரு நிகழ்விலும், அவளே தலைமை ஏற்பாள். படித்தவளானாலும், படிப்புவாசனையற்ற பொன்னுமாமிக்கு; மனம் ஒப்பும் மருமகளாகவே வாழ்ந்தாள்.

வீரபுத்திரனின் வாழ்வில், சங்கரியின் இணைப்பு இணையற்ற பந்தமாய் அமைந்தது. குடும்ப வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அவள் பங்கு முதன்மை பெற்றது. தன் பிள்ளைக்குக் கிடைத்த துணையை எண்ணி பொன்னுமாமி, எப்போதும் பெருமை கொள்வாள், பிறரிடம் கூறிப் பூரிப்படைவாள்.

காலா காலத்தில் கிடைத்த குழந்தைச் செல்வங்கள், அவர்கள் வாழ்வில் மகிழ்வை இரட்டிப்பாக்கின. பொறுப்புள்ள ஒரு குடும்பப் பெண்ணின் இலக்கணமாகவே சங்கரி விளங்கினாள்.

தாயை இழந்த குழந்தைகள், குடும்பத்தவரின், அபரிமிதமான அரவணைப்புக்குள்ளாகி, தாயின் பிரிவுத்துாயரைச் சிறிது சிறிதாய் மறக்கலாயின.

பிஞ்சு மனங்களுக்குத் கிடைக்க வேண்டிய தூய்மையான பாசம், அந்த வயதில் கிடைக்கும் பொது, அவை மனநிறைவு கொள்கின்றன. சூழலுக்கு ஏற்றபடி அவை தம்மைத் தாமாகவே மாற்றிக் கொள்கின்றன.

பொன்னுமாமியிலும் காவேரியின், பரிவும், பாசமும், அவர்களுக்கு நட்புரீதியான உறவை ஏற்படுத்தியதால் அவர்கள் திருப்பதியும் மகிழ்வும் கொண்டனர்.

சிலபோது அவர்களை அறியாமலேயே, அடிமனத்தில் புதைந்து கிடந்த தாய்ப்பாசம் கிளர்த்தெழும் போது; அதனைச் சமாளிக்க எதிர் கொள்ளும் காவேரி தோற்றுப் போவாள். அவ்வேளைகளில் தேவியே துணைநிற்பாள்.

வீரபுத்திரன் வாரத்துக்கொருமுறை வருவதை வழக்கமாக்கிக் கொண்டதால், அவன் அன்புக்காய்க் குழந்தைகள் ஏங்கும், இருந்தும் தொழில் ரீதியான அவன்பிரிவு, தவிர்க்க முடியாததாகவே இருந்தது.

தாயை இழந்த நிலையில் தந்தையில் தொலைவும், குழந்தைகளைப் பாதித்துவிடக் கூடாதே என்பதை அவன் ஒவ்வொரு வேளையும் உணர்ந்தான். நிலையாக அங்கேயே தங்கி விடச் செய்யும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.

தாயோடும், குழந்தைகளோடும் வாழும் வாழ்வையே, இப்போதய சூழ்நிலையில் அவன் விரும்பினான். அதனால் தோல்விகளின் பின்னும் அவன் முயற்சியில் தளர்ச்சியடையவில்லை.

இந்த முயற்சிகளுக்கிடையில் ஒருநாள் தன்னோடு படித்த பள்ளித் தோழன் ஒருவனைச் சடுதியாய்ச் சந்தித்தான் வீரபுத்திரன். அது அவர்கள் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் இருவருமே அன்று அறிந்திருக்கவில்லை.

## 15

முத்து நகர்ப்புற வியாபார தலமொன்றின் சொந்தக்காரன். முயற்சியுள்ள இளம் வியாபாரி. வளர்ந்து வரும் தன் தொழிலை

விஸ்த்தரிக்கப் பணமிருந்தும், தனக்குப் பொருந்தும் நிருவாகத் திறனுள்ள நம்பிக்கையான ஒரு பக்கபலத்தை நெடுநாளாகத் தேடிக் கொண்டிருந்தான்.

'முத்து ராமலிங்கத்தேவர் (பிரைவேட்) லிமிட்டெட்' என்ற நீளமான பெயருள்ள, விசாலமான கட்டிடத்துள் பலதுபட்ட ஒரு வியாபார நிலையமாகத் திகழந்தது முத்துவின் ஸ்தாபனம். அந்த நகரத்தின் தேவைகள் பலவற்றை, மொத்தமாகவே நிறைவு செய்து வந்தது அது. தனித்து நின்று அத்தனை பொறுப்புக்களையும் தானே சுமந்து வியாபார உலகில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டான் முத்து.

இப்பொழுது இன்னுமொரு நம்பிக்கையான துணை தேவை என்ற நிலைவந்த போதுதான், சடுதியாச் சந்தித்துக் கொண்டனர் நண்பர்கள். சிறிது நேரம் மனம்விட்டுப் பேசிக் கொண்டபோது, பரஸ்பரம் இன்றைய நிலையை இருவரும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டனர்.

சங்கரியின் இழப்பும், அதன் பின் வீரபுத்திரனின் இன்றைய நிலையும், அறிந்துகொண்டு வருந்திய முத்துவுக்குத், தன் நண்பன் வீரபுத்திரனுக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவ வேண்டும் என்னும் விருப்பம் உண்டாகியது.

பாடசாலையில் வெவ்வேறு வகுப்புகளில் கல்விகற்றாலும், இருவரும் மிக நெருங்கியே பழகினார்கள். இளமைப் பருவத்தில் தோட்டத்தின் முன்னேற்றத்துக்காவும், இந்திய வம்சாவழி மக்களின் கல்வி முன்னேற்றத்துக்காகவும் ஒன்றிப் பாடுபட்டவர்கள்.

படிப்பைப் பல்கலைக்கழகம் செல்லாமலேயே முடித்துக் கொண்டு, தந்தையாரின் சிறிய வியாபாரத்துக்குத் துணையாகி அதனை வளப்படுத்தினான் முத்து. வியாபாரத்திலுள்ள நெளிவு சுளிவுகளை, தன் தந்தையின் அனுபவத்திலிருந்து இளம்வயதிலேயே அவன் தெரிந்து கொண்டான்.

பட்டதாரியான வீரபுத்திரனுக்கு, வாய்ப்பான தொழிலும், மணவாழ்வும் ஒருங்கே அமைந்தன. பெற்றோரின் வாழ்க்கைச் சுமையில் தானும் பங்கு கொண்டதால், தாய் வேலைக்குப் போகாது வீட்டோடு தங்கும் வாய்ப்பும் ஏற்பட்டது.

தந்தைக்கு ஏற்பட்ட திடீர் மரணத்தால் குடும்ப பொறுப்பை, முற்றாகச் சுமக்கும் நிலை ஏற்பட்டாலும்; போதிய வருவாய் இருந்ததால் அது அவனுக்குச் சுமையாகவில்லை.

அமைதியாக நடந்த அந்த வாழ்வில், விதியின் முடிவு இடையுறாய் அமைந்தது. அவன் வாழ்வை இருளாக்கியது. அந்தத் துயரில் இருந்து விடுபட முடியாதவாறு சங்கரியின் உறவு அவனோடு ஒன்றி இருந்தது.

❀❀❀❀

கையில் இருந்த சூடான பானத்தின் சுவையை, நாக்கு நரம்புகள் மூளைக்கு இட்டுச் சென்று, மனதுக்கும் உடலுக்கும் உற்சாகத்தை ஊட்ட முத்துவே பேசலானான்.

"வீரா இப்ப நீ பாக்குற தொழில விட்டுட்டு ஏங்கூட வந்து சேந்திடேன்".

சட்டென்று தங்கள் பேச்சு வேறுதிசையில் திரும்புவதையும் நண்பன் கேட்ட கேள்வியும் வீரபுத்திரனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

வீரனின் முகமாற்றத்தைக் கண்ட முத்து, தான் தன் தொழிலுக்குத் துணை தேடுகின்றேன், என அவன் எண்ணி விடக் கூடாதென்பதை உணர்ந்தவனாய், அவன் வாய்திறக்குமுன் முத்துவே பேச்சைத் தொடர்ந்தான்.

"வீரா! இப்ப என் வியாபாரம் நல்லாவே நடக்குது. ஒரே எடத்தில இருந்து சுத்தாம, கால கொஞ்சம் அகலமா நீட்டலாமேன்னு கொஞ்ச நாளா எம்மனசுக்குத் தோனுது. ஆனா செய்ய முடியல!. நம்பிக்கையான ஒரு தொண கெடைக்க மாட்டேங்குது!. ஒன்ன கண்டதுக்கப்புறம் எனக்கொரு யோசன தோணிச்சி!.

"ஒன்னோட அனுபவமும், முயற்சியும் எனக்கு ஒதவுமுன்னா, வேண்டிய அளவு மொதலப் போட்டு புதுசா ஒரு தொழில தொடங்கலாம். லாபத்த நாம ரெண்டு பேருமே சமமாப் பங்கிட்டுக்கலாம். நீ என்ன சொல்றே".

"வீரா! நீயேன் யோசிக்கிற? ஒழுங்கான, எழுத்து மூல ஒப்பந்தத் தோட தான் நான் எதையும் செய்வேன். எங்கப்பா அப்படித்தான்!. பின்னால எந்த மனஸ்தாபங்களும் வந்திடாம, ரொம்ப ஜாக்கிரதயாய் பண்ணுவாரு. அதுனாலதான் அவரால பிரச்சினை இல்லாம ஒசர முடிஞ்சுது!.

முத்து இடையில் பேச்சை முறித்து மேசையில் இருந்த பானத்தை ஒரு முறை உறிஞ்சிக் கொண்டு, வீரபுத்திரன் நோக்கினான். அவன் தன் கையில் இருந்த தேனீர்குவளைக்குள் பார்வையை விட்டுத் துளாவிக் கொண்டிருந்தான்.

"வீரா! இப்பவே நீ எனக்கு எதுவுமே சொல்ல வேணாம்! நல்லா யோசிச்சி ஒரு பதில சொன்னாப் போதும்" என்றவாறு தன் "விசிட்டிங்காட்" ஒன்றை அவன் கையில் திணித்தான்.

பின்னர் அதுபற்றி அவர்கள் இருவருமே பேசிக் கொள்வில்லை. சிறிது நேரம் தங்கள் பள்ளி வாழ்வை நினைவு படுத்திக் கொண்டு விடைபெற்றச் சென்றனர்.

❀❀❀❀

வீட்டில் அன்று அனைவரும் கூடி இருந்தனர். தேவியும் வந்திருந்தாள். வார இறுதியானதால் செல்வாவும் வீட்டில் இருந்தான். சந்தர்ப்பம் பார்த்து அம்மா பேசலானாள்.

"ஏய்யா வீரா, முத்து சொன்ன மாதிரி செஞ்சா என்ன? அடிக்கடி புள்ளைங்களப் பாத்துக்கலாம்!. பக்கத்து டவுண்" தானே! கொஞ்சம் அக்கறையா தொழில் பண்ணினா இப்ப கெடைக்கிற சப்பளத்தக் காட்டியும் கூடச் சம்பாதிக்கலாம். எல்லாத்துக்கும் நல்லதில்ல?" வீரபுத்திரன் வாய்பேசவில்லை. முழங்கால்கள் இரண்டையும் ஒன்றாகக் கூட்டி கைகோத்துக் கட்டிக் கொண்டு, வாசற்படியில் உட்காந்திந்தான். எந்தவித பதிலும் சொல்லாமல் இருக்கக் கண்ட அம்மா மீண்டும் பேசினாள்.

"இப்படி இருந்தா எப்படி? ஏதாச்சும் ஒருமுடிவ காலங்காத்தால முத்துக்குச் சொல்லணும் இல்லியா. எனக்கொன்னவோ அது நல்லதான் தோணுது!".

ஏற்கனவே முத்துவைக் சந்தித்த விபரங்கள் அனைத்தையும் வீரபுத்திரன் அம்மாவுக்குச் சொல்லியிருந்தான். அதனை அம்மா செல்வத்திடம் சொல்ல, அவனும் தன் விருப்பத்தைக் கூறி அண்ணனைத் துரிதப்படுத்தத் தூண்டினான்.

காவேரியை ஒரு நல்ல இடத்தில் சேர்ப்பிக்கக் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ளவேண்டும் என்பதும் எல்லோருடைய விருப்பமாகவும் இருந்ததால், முத்துவைச் சந்தித்துத் தனது விருப்பத்தை அவன் தெரிவிக்க வேண்டுமெனவும் அவர்கள் விரும்பினர்.

முத்துவைப் பற்றியும், அவன் குடும்பத்தைப் பற்றியும், நன்றாகவே அம்மா தெரிந்து வைத்திருந்ததால் அவர்களின் கூட்டு முயற்சி, மனத் தாங்கல்கள் ஏற்படாதவாறு நல்லபடி நடக்கவே அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக அம்மா நம்பினாள்.

சேதிகள் அனைத்தையும் பேச்சு வாக்கில் தேவியும் அறிந்து கொண்டாள். ஆனால் அவள் ஒன்றும் பேசவில்லை. ஒரு குடும்ப விவகாரத்தில் அவர்களாகக் கேட்காத வரையில் நாமாகவே எதையும் சொல்லிவிடக் கூடாதென அவள் பேசாதிருக்க பொன்னுமாமி வலிந்து அவளில் அபிப்பிராயத்தைக் கேட்டாள்.

"ஏம்மா தேவி! ஒனக்குந்தான் தெரியுமே, முத்து நல்ல பையன் அவுங்க நல்ல குடும்பத்து மனிசருங்க. சம்மதிச்சா நல்ல தில்லியா?"

வாய் பேசாதிருக்கும் வீரபுத்திரனின் மௌனத்தால், தேவிக்கு அம்மாவின் எண்ணம் பிடித்திருந்தாலும், ஒப்புதல் சொல்ல அச்சமாயிருந்தது. அவள் வீரபுத்திரனைப் பார்த்தாள். அதேவேளை அவள் விருப்பம் எதுவாக இருக்கும் என்ற பதிலை அறிந்து கொள்ள அவனும் அவளைப் பார்த்தான். அந்தப் பார்வையில் நீ என்ன சொல்கிறாய்? என்ற ஒரு கேள்வியின் உட்பொருளும் கலந்திருப்பதுபோல் தேவிக்குப் புரிந்தது. அவள் துணிவோடு வாய்திறந்தாள்.

"மச்சான்! அம்மா சொல்லுறதில ஞாயம் இருக்கில்ல. வருவாய் மட்டுமில்ல மச்சான், புள்ளைங்களையும் அடிக்கடி வந்து பாத்துக்கலாம்மில்ல?" என்றாள் சற்று வினயமாக.

சந்தர்ப்பம் பார்த்துச் செல்வாவும் பேசினான்.

"ஆமாண்ணா, அது நல்லதா எனக்கும் படுது! சம்பளகாரனா எந்த நாளும் இருக்கிறதக் காட்டியும், ஒரு தொழில்ல பங்கு தாரனா சேந்துக்கிறதில நெறைய முன்னேற வாய்பு உண்டில்ல!. அதனால ஒத்துக்கிறதான் நல்லதா எனக்கும் தோணுது" என்றான்.

காவேரி ஒன்றும் பேசவில்லை. தன்னை ஒரு சிறுபிள்ளையாக்கி அனைத்தையும் கேட்டபடி இருந்தாள்.

எல்லோருடைய அபிப்பிராயங்களும் ஒன்றாகவே இருப்பதானால் தானும் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருந்தது வீரபுத்திரனுக்கு.

கால ஓட்டத்தின் வேகத்தை விஞ்சி, விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கும் இன்றைய நாளில், மாதவருவாய் ஒன்றைமட்டும் நம்பி இருப்பதில் அவனுக்கும் நம்பிக்கை குன்றியிருந்தது. இதுநாள் வரை நியாயமான ஒரு சம்பளத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், எதிர்காலம் எப்படி அமையுமோ என அவன் சிந்தித்தான். முடிவு, முத்துவின் விருப்பத்திற்கு ஒத்துப் போவதுதான் உவந்தது என்னும் எண்ணம் தோன்ற, அந்த முடிவை அவனுக்குத் தெரிவிப்பதாக அம்மாவுக்கு வீரபுத்திரன் உடன்பட்டான்.

## 16

சங்கரி உலகை விட்டுப் பிரிந்து வருடங்கள் இரண்டு ஓடிமறைந்தன. படைத்தவன் மனிதனுக்கு, மறந்து விடும் ஒரு பலவீனத்தைத் தராது போயிருந்தால், இன்று மனித சமுதாயத்தில் இத்தனை பெருக்கம் ஏற்பட்டிருக்கவே மாட்டாது. தத்தமது உயிருக்குயிரானவர்களின் பிரிவாற்றாமையை எண்ணியெண்ணியே உலகத்தில் பாதி அழிந்து போயிருக்கும்.

சங்கரியின் பிரிவும் அவ்வாறே தான். ஒவ்வொருவர் மனத்துள்ளும் நினைவுகள் ஜீரணமாகி, அவளொரு நினைவுருப் பெற்றாள்.

அவளின் பிரிவை குடும்பம் மறந்து விடக் கூடாதென்றோ, கடைசிப் பெண்குட்டி அசைப்பில் அன்னையின் அவதாரமாய், இறைவன் படைத்திருந்தான். இரண்டு வயதில் கூடக் கண்டவர்கள் வியக்கும்வாறு தாயின் அச்சாகத் தோன்றினாள்.

"பூவிழி" என்ற பெயர் அவளுக்கு மிகப் பொருத்தமாகவே அமைந்தது. தேவி இட்ட பெயர். குறுகுறுப்பான கண்கள். பனியில் மிதக்கும் புத்தம் புது மலர்போல் அந்தப் பிஞ்சு முகத்தில் பதிக்கப்பட்டிருந்தன.

தேவியின் அரவணைப்பிலேயே அவள் எப்போதும் இருந்ததால், அவள்மேல் ஆழமான மனப் பதிவும், பாசமும் இருந்தது பூவிழிக்கு, மற்றவர்களைவிட அது தேவியையே அதிகம் விரும்பியது. பொன்னுமாமியும் தேவியின் அரவணைப்பிலேயே பூவிழி வளர வேண்டுமென உள்ளூர விரும்பினாள். அவள் நெஞ்சுள் அதற்கு வேறு ஒரு காரணமும் பொதித்து கிடந்தது.

❀❀❀❀

பல்கலைக்கழகப் பிரவேச வாய்ப்புக்கிடைத்த, வாஸந்தியும், காவேரியும் அதற்கான தவணை வந்ததும், அங்கு சென்று விட்டனர். வீட்டில் அம்மாவும் குழந்தைகளுமே எஞ்சி நின்றனர். புதிய தொழில் முயற்சியால் வீரபுத்திரன் அடிக்கடி வீட்டுக்கு வந்து போனான்.

வாரமொருமுறை அனைவரும் ஒன்று கூடிக் கலைவார்கள். அந்த நாள் வீட்டில் மிக்க கலகலப்பான நாளாக அமையும். தேவி வீட்டில் வாஸந்தியும், ராஜாவும் அங்குதான் அன்றையப் பொழுதைக் கழிப்பார்கள். மற்றைய நாட்களில் தேவி பொன்னுமாமிக்குத் தனித்துணையாவாள்.

நாட்கள் நகரப் பூவிழி தேவியின் முழுப் பொறுப்புக்குள்ளானாள். வயதான காலத்தில் மற்றிரு குழந்தைகளுமே பொன்னுமாமிக்குப் பெருஞ் சுமையாகத் தோன்றினர். இரவுப் பொழுதையும், தேவியும் ராஜாவும் பொன்னுமாமி வீட்டிலேயே கழிக்க வேண்டியாயிற்று.

குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பினால் வேலை நாட்கள் குறைய, தேவியின் வருவாயில் தொய்வு ஏற்படும். அப்போது வாஸந்தியின் படிப்புக்கான செலவீனங்களையெல்லாம் பொன்னுமாமியே ஏற்றுக் கொள்வாள். வீரபுத்திரனின் வருவாயில் ஏற்பட்ட ஏற்றம். அதனைச்சீர் செய்ய அவளுக்கு உதவியது.

அந்தக் குடும்பத்தின் ஆதரவையும், பொருளாதாரப் பங்களிப்புகளையும் ஒதுக்கித் தள்ளும் நிலையில் தேவி என்றும் இருக்கவில்லை. அதனைப் பெறுவதை அவள் இழிவாகக் கூட எண்ணவில்லை. ஏனெனில் பெற்றோரை இழந்த காலத்தில் இருந்தே, அந்தக் குடும்பத்தின் பக்கபலத்தோடுதானே அவர்கள் வாழ்கின்றனர் என்பதால் விரும்பியே ஏற்றுக் கொண்டாள்.

வார முடிவில் காவேரியும் வாஸந்தியும், செல்வாவுடன் இணைந்தே தோட்டத்துக்கு வருவார்கள். செல்வா வாஸந்தியின் நட்பும் இதனால் வளரத் தொடங்கியது. காலப்போக்கில் காவேரியும் அதனைத் தெரிந்து கொண்டாள். அவளும் அவர்கள் நெருக்கத்தைத் தெரிந்து கொள்வதையே அவர்களும் எதிர்பார்த்தனர்.

ஒவ்வொரு பொழுதும் தேவியின் நினைவு அவர்களை ஒரு எல்லைக்குள் வைத்தே நெருங்க வைத்தது. பண்பாக வளர்க்கப்பட்டதால், இருவருக்கிடையிலும் எந்தவித வரம்பு மீறல்களுக்கும் இடம் இருக்கவில்லை. மனதளவில் ஒன்றிப் போன உறவு, உடலளவில் தூரத்தில் நின்றே நோக்கியது.

அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்ததால், கடிதப் பரிமாற்றத்துக்கு இடமிருக்கவில்லை. இடையிடையே சிறு கவிதைகள் அவர்களின் ஆழமான உறவுக்கு உரமிட்டு வளர்த்தன. ஒருபோது வாஸந்தியின் பார்வைக்கு ஒரு கவிதை கிடைத்தது. அதனை செல்வாவே எழுதி இருந்தான்.

பூவுக்குள் ஒளிந்துள்ள தேனாய் – ஆழப்
பூமிக்குள் மறைந்துள்ள பழுதறு மணியாய்
பாவுக்குட் பொதிந்தநற் பொருளாய் – நெஞ்சப்
பதியுள்ளே அரசோச்சும் பேரன்புச் சுனையே
வாவென்றன் விழிமடல் பேச – நீயும்
வந்தென்னில் படர்ந்துள்ளத் தாகத்தை என்றோ
போவென்று போக்கிடு வாயோ – இன்றே
புகலென்றன் மாசில்லாப் பொன்னெழிற் சிலையே.

என்றோர் துண்டுக் கவிதையை எழுதி ஒரு புத்தகத்துட் புதைத்து வாஸந்தியின் கையுட் திணித்தான் செல்வா. உள்ளே அது இருப்பதையும் கண்ணால் உணர்த்தினான்.

ஆவலோடு பக்கம் பார்த்துப் புத்தகத்தை விரித்தாள் வாஸந்தி, அங்கே முத்துமுத்தாய் அந்தப் புத்தம் புதுக்கவிதை மலர்ந்தது.

தனித்தோர் மரநிழலில் படிப்பது போல் பாசாங்கு காட்டிச் சற்றுநேரம் அவள் தன்கண்களை மூடிக் கவிதையின் ஊட்பொருளை எண்ணிச் சுவைத்தாள். நாணம் மேலிட அவள் மனமே பேசியது.

எத்தனை அழகான கவிதை! செல்வம் கவிதை எழுதுவதில் ஆர்வம் உள்ளவன் என வாஸந்தி அறிவாள். அவன் எழுதிய பல கவிதைகளைப் பள்ளிக் காலத்தில் அவள் படித்துச் சுவைத்துள்ளாள். ஆனால் மனத்தைத் தொட்டுச் சுகானுபவத்தைச் சேர்க்கும் இப்படியொரு கவிதையை எனக்கு மட்டுமே செல்வாவால் எழுதமுடியும் என எண்ணி வாஸந்தி மனம் பூரித்தாள்.

மறுநாள் செல்வாவைக் கண்டபோது, வழமைபோல் அவனை நேர்கொள்ள அவளால் முடியவில்லை. நாணத்தால் கன்னஞ் சிவக்க, பார்வையை நிலத்தில் பதியவிட்டாள். கூடவிருந்த காவேரிக்கு இந்தப் புதுமை ஆச்சரியத்தைத் தந்தது. இருந்தும் அவள் எதையுமே கண்டு கொள்ளாதவள் போல் வேறுபுறம் திரும்பிக் கொண்டாள். அந்தச் சிறுபொழுதில் நான்கு கண்கள் பார்வைகளால் பேசிக் கொண்டதையும் அவள் உண்மையாகவே கண்டு கொள்ளவில்லை என்பதையும் அறியாது போனாள்.

## 17

காலைப் பொழுதின் மெல்லிய உஷ்ணத்தில் துயில் கலைந்த மலைகள் பசுமை கொஞ்ச உடல் சிலிர்த்து மிளிர்ந்தன. தமதுடலில் அணியணியாச் செல்லும் தோட்டத்து ஜனங்கள், தம்மைச் செழிக்கச் செய்ய தங்களையே அழித்துக் கொள்வதை எண்ணி மனம் நெகிழ்ந்தன.

மெல்லென ஓடும் மலையருவிகளாலும், பீறிட்டுப் புரண்டு விழும் நீர்வீழ்ச்சிகளாலும், தம்மைத் தாமே அலங்கரித்துக் கொண்ட அவை , தமதுடலில் பசுமை போத்தி அழகு செய்யும் அவர்களை நன்றியோடு

சுமந்தன.

வெண்மேகப் பொதிகளாலும் பனி மூட்டத்தாலும் தமது மார்புகளை மூடிக்கொண்டு, மேலாடைபோட்ட ஆளான பெண்கள்போல அவை அழகு காட்டின.

உடலைச் சுற்றிப் படங்குகள் அணைக்கு, முரட்டுக் கம்பளிகளைத் தலையோடு உடல்மூடும் போர்வைகளாக்கிக் கடுங்குளிரில் பவனிவரும் மலையகப் பெண்களை எண்ணி, வானமும் இடையிடை கண்ணீர் சிந்தும்.

அன்றாடம் நிகழும் இயந்திரவாழ்வு, வறுமையின் கோரப்பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள இயலாத துர்பாக்கிய நிலை. இவற்றில் உழலும் அந்த மலைநாட்டு மக்கள், இயற்கை அன்னையின் அழியாத அழகில், தம்மை மறந்து அனுபவிக்கட்டும் என்றோ, இறைவன் மற்ற எந்தவொரு நிலத்திற்கும் இல்லாத எழிலை, அந்த நெய்தல் நிலத்தின்மேல் அள்ளிச் சொரிந்துள்ளான்.

"பிரஷ்"—ல் பற்பசையை இட்டுக் கொண்டு, வெளியில் வந்தான் வீரபுத்திரன். சுற்றிச்சுற்றித் தன்பார்வையைச் செலுத்தினான். அவன் சிந்தனையில் ஏதேதோ தோன்றி மறைந்தன.

இந்தமலைமண்ணில் வாழும் ஒவ்வொரு குடும்பத்துள்ளும், எத்தனை எத்தனை சோக வரலாறுகள் புதைந்து கிடக்கின்றன. ஆரம்ப முதலே, மலைக்காடுகளை அழித்து தமது உதிரத்தை வியர்வையாக்கி இதனையோர் புண்ணிய நிலமாக ஆக்கித் தந்த, தம் மூதாதையரின் தியாகங்களைக் கண்ணில் காணும் ஒவ்வொரு மலையும் சொல்லுவதை அவன் கண்ணாரக் கண்டான். அவன் நெஞ்சம் அவர்களை எண்ணிப் பூரித்தது. பூஜித்தது.

இருந்துமென்ன இத்தனை தியாகங்களைச் செய்தும், இந்த நாட்டின் பொருளாதாரத்தைத் தாங்கும் தூண்களாக இருந்தும், இந்திய வம்சாவழியினரை, நாட்டின் பெருங்குடியினர், எண்ணும் விதத்தினை எண்ணி, அவன் மனம் வருந்தியது.

"நாட்டின் பொருளாதாரத்தை உறிஞ்ச வந்த வெள்ளையன், தனக்கு உதவிக்காய்க் கொண்டுவந்த ஒரு கூலிப்பட்டாளம்" என்றல்லவா எண்ணுகின்றது.

சுதந்திரம் பெற்ற நாட்டில், சுதந்திரம் அற்று வாழும் நிலையால், தொடர்ந்தும் போராடும் ஒரு துர்பாக்கியம் மலையக மக்களுக்கு ஏன் வந்தது? இது என்று முடிவடையும், இங்குள்ள பிறர்போல் சமஉரிமை பெற்று வாழும்நாள் வருமோ என அவன்மனம் ஏங்கியது.

இவ்வாறான சிந்தனையில் தன்னை விடுவித்துக் கொண்ட வீரபுத்திரன், காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, நகரத்துக்குப் புறப்பட்டான். அம்மா வழியனுப்ப வழிவரை வந்தாள். கையில் இருந்த பூவிழி தந்தைக்குக் கையசைத்து விடைதந்தாள்.

அப்பா வராத நாட்களில் பூவிழி தேவியுடன் தான் இருப்பாள். அங்குதான் அவளுக்குத் தாயினது அரவணைப்புக் கிடைக்கும். பூவிழியைப் பிரிந்திருக்கும் வாரத்தின் ஒருநாள், தேவிக்குப் பொழுதே போவதில்லை. தந்தையின் ஒன்றுதல் இல்லாது போகக் கூடாதே என்று, அந்தநாள் அவள் வீரபுத்திரனுடன் கழிப்பதையே விரும்பினாள். தாயில்லாக் குறையும் பூவிழியால் உணரப்படாமலேயே நாட்கள் நகர்ந்தன.

கையில் தாங்கிய குழந்தையோடு பொன்னுமாமி, தேவியின் காம்பறாவை நோக்கி நடந்தாள். தேவிக்கு அன்று தோட்டத்தில் பெயர் விழவில்லை. வீட்டிலேயே தங்கி இருந்தாள். அது அந்த மலையக மக்களின் தலையெழுத்து. சில நாட்களுக்குக் கேட்காமலேயே விடுமுறை தந்து விடுவார்கள்.

நாளந்தம் தொழில் கிடைத்தாலும் அதில் வரும் ஊதியத்தில் ஒரு நாட்பொழுதை, அரைவயிற்றோடு கடத்த வேண்டியுள்ள அந்த மக்களுக்கு, இப்படியும் என்றால் அவர்கள் என்னதான் செய்வார்கள்.

எத்தனை வேலை நிறுத்தங்கள், எத்தனை போராட்டங்கள. நன்மைகள் விளைந்தாலும், அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளான, வயிற்றுக்கும் உறைவிடத்திற்கும், இன்னும் பூரண உத்தரவாதம் கிடைக்கவே இல்லை.

தேவியைக் கண்ட பூவிழி பாய்ந்து அவளோடு ஒட்டிக்கொண்டாள். பெற்றாலும் சிலரக்குக் கிட்டாது பிள்ளைப் பாசம். தேவியோ அதனைப் பெறாமலே அனுபவித்தாள். பூவிழியைப் பிரிந்திருப்பது அவளுக்கு உளரீதியான வெறுமையைத் தோற்றுவித்தது.

காலாகாலத்தில் நடப்பவை நடந்திருந்தால், இன்று அவளும் சில குழந்தைகளுக்குத் தாயாகித்தானே இருப்பாள். அவள் மட்டுமா இதுபோல் எத்தனை மலையகப் பெண்கள் வெவ்வேறு காரணங்களால் தங்கள் இளமையைக் காட்டுப் பூப்போல் கருகிக் கொண்டு இருகின்றார்கள். ஏதோ ஒரு மன உளைச்சல் மேலிட, பொன்னுமாமி தேவியிடமிருந்து விடைபெற்று நகர்ந்தாள். அந்த மன உளைவு இப்போது சில நாட்களாக இருந்து கொண்டிருப்பதை அவள் உள்மனம் அவளுக்கு உணர்த்தியது. அதற்கான விடையையும் அறிய அவள் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

❀❀❀❀

செல்வத்துக்கு வாஸந்திக்கும் இடையிலான தொடர்பினை முதலில் சந்தேகித்த காவேரி, காலப்போக்கில் தன் எண்ணத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டாள். இதுபற்றி அவள் வாஸந்தியிடங் கூட எதுவுமே பேசவில்லை. தெளிவாக அறிந்து கொண்ட பின்னரும், அதை வேறு யாரிடமும் சொல்லவும் இல்லை.

ஆரம்பத்தை தேவி அறிந்திருந்தாலும், தனது கண்டிப்பான தடை அவர்களைத் தூரவே வைத்திருக்மென அவள் நம்பினாள் செல்வமும், வாஸந்தியும் தங்கள் விவகாரம், தேவிக்கும் காவேரிக்கும் தெரிந்திருப்பதை அறிந்தே இருந்தனர். வீட்டுக்கு ஒருவர் அறிந்திருப்பது அவர்களுக்குத் திருப்தியைத் தந்தது.

செல்வத்தின் இறுதியாண்டுப் பரீட்சை நெருங்க நெருங்க, அவன் பாடங்களில் அதிக கவனம் செலுத்தினான். வாஸந்தியும் தனது சந்திப்பை வெகுவாகக் குறைத்துக் கொண்டாள். அவளுக்கும் பரீட்சை இருந்ததால் காவேரியின் உதவியோடு அவளும் பாடங்களில் புலனை அதிகப்படுத்தினாள்.

பரீட்சைகள் முடிந்து, சில மாதங்களில் முடிவுகளும் வெளியாகி இருந்தன. தேவி மகிழ்ச்சியில் மூழ்கிப் போனாள். வாஸந்தியின் எதிர்

காலம், பொன்போல அவள் கண்முன் பிரகாசித்தது.

அவள் பரீட்சையில் உயர்சித்தி பெற்றிருந்தாள். காவேரியும் வாஸந்தியின் முடிவை ஒக்கவே தேறி இருந்தாள். செல்வத்தின் இறுதியாண்டுப் பரீட்சை முடிவு அவனுக்குப் பொருத்தமான ஒரு தொழிலைத் தேடிக்கொள்ளுமளவு அதி உயர்வாக அமைந்தது.

செல்வத்தின் தேர்வு, தேவிக்கு மனத் தெம்பைத் தந்தது. செல்வா வாஸந்தி பற்றிய விவாகரம் அவளால் அங்கீகரிக்கப் பட்டதொன்றானாலும் வாஸந்தியின் படிப்பு முடியும்வரை, தேவி அது பற்றி யாரிடம் எதுவம் பேசவில்லை.

அவர்கள் இருவரும் எதிர்காலத்தில் ஒன்றாவதை, அவள் விரும்பினாள். வரண்டுபோன தன்வாழ்வோடு, தங்களின் குடும்பத்தின் சோகம், முற்றுப் பெறவேண்டுமென அவள் ஆசைப்பட்டாள்.

## 18

வாஸந்தியும், காவேரியும், தொடர்ந்து மேலும் இரண்டு வருடம் பல்கலைக் கழகப் படிப்பைத் தொடர்தனர்.

காலமும் கரைய, காதலும் வளரக் கல்வியிலும் வாஸந்தி திறமை காட்டினாள். இறுதியாண்டுப் பரீட்சையிலும் சிறப்புச் சித்தி பெற்றாள். காவேரியும் அவளோடு இணைந்தே சென்றாள்.

பொன்னுமாமி பூரித்துப் போனாள். தனது பிள்ளைகள் மூவரும், கல்விக்குப் பஞ்சமான தோட்டத்தில் பிறந்து தமது முயற்சியால் முன்னேறி விட்ட போது எந்தத் தாய்குத்தான் மனம் பூரிக்காது.

தேவி தன் இலட்சியத்தின் கண்ட பெரு வெற்றியாகவே, வாஸந்தியின் பரீட்சையின் தேறலை எண்ணினாள். தோட்டத்துக்குப் பெருமை சேர்க்கும் தோட்டத்துப் பட்டதாரிப் பெண்கள் என்பதில் அந்தத் தோட்டமே பெருமை கொண்டது.

பல்கலைக் கழக வாழ்வு முடிந்ததும், காவேரி வீட்டோடு தங்கி விட்டதால், பொன்னுமாமியின் பொறுப்புக்கள், வெகுவாகக் குறைந்தன. வாஸந்தியும் வீட்டில் இருந்ததால், தேவி தினமும் வேலைக்குச் சென்றுவந்தாள். பூவிழி தேவி வரும்வரை, வாஸந்திக்கும் காவேரிக்கும்

பொழுது போக்கத் துண்ணையானாள். அவள் பேசும் மழலை மொழியில் அவர்கள் மகிழ்ந்திருந்தனர்.

யார் எப்படி அன்பு செலுத்தியபோதும், தேவியைக் கண்டதும் அத்தனையும் அவளுக்கு மறந்தே போகும் பாய்ந்துபோய் அவளோடு ஒட்டிக் கொள்வாள்.

தொழிலுக்காகச் செல்வம் அதிக நாட்கள் காத்திருக்கவில்லை. தேர்வு அடிப்படையில் பல்கலைக் கழகத்தில் சிலகாலம் தங்க வாய்ப்பிருந்தும், அவன் வாய்ப்பாய்க் கிடைத்த இந்திய வங்கித் தொழிலை விரும்பி ஏற்றான்.

தலைநகரிலேயே பயிற்சிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததால் அங்கேயே தங்கும் கட்டாயமும் பிறந்தது. மேற்படிப்புக்கான சூழ்நிலைகளும் அதிகம் இருந்ததால் அதனையே அவனும் விரும்பினான்.

வாரத்தின் இறுதி இரண்டு நாட்களுக்காக செல்வத்தின் மனம் ஏங்கும். தோட்டத்திலும் அதுபோல ஒரு பெண்மனம் தவிப்பதை அவன் மனம் அவனுக்கு நினைவுபடுத்தும். வாஸந்தி நாட்களை எண்ணிக் காத்துக் கிடப்பாள்.

ஒருவார இறுதியில் தேவியைத் காண செல்வா அவள் வீடுசென்றான். வாஸந்தியும், ராஜாவும் அங்கிருக்கவில்லை. வாஸந்தி, காவேரியோடு பீலிக்குச் சென்றதைக் கண்ட பின்னர்தான், தேவியைக் காணும் எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

"வா செல்வா வா" எப்ப வந்தே" உக்கார்" என்றாள். அங்கிருந்த நாற்காலியைக் காட்டி தேவி.

"நேத்து ராவுதான்" என்றான் செல்வா பதிலுக்கு.

நீண்ட நாட்களாய் செல்வாவுடன் ஒரு நீண்ட சந்திப்புக் காலத்தை எதிர்பார்த்திருந்தாள் தேவி. இப்போது ஒரு சந்தர்ப்பம் வலியவே வந்ததால் அவள் முதலில் தன்னை மனத்தால் தயார் படுத்திக் கொண்டாள்.

"அக்கா!" என்றான் செல்வம்

"ம்...." என்று மட்டுமே தேவி பதிலாக ஒலி செய்தாள்.

செல்வாவின் முகத்தை நோக்கினாள் தேவி. அவன் நிலத்தில் எதையோ விரலால் கீறிக் கொண்டிருந்தான். அவனே பேசினான்.

"அக்கா! வாஸந்தி படிப்பு முடிஞ்சி போச்சிலே?

"ஆமா!".

"இப்ப நானொன்னு கேக்கலாமில்லே?"

தேவிதிடுக்கிட்டாள். இவன் நேரடியாகவே விஷயத்துக்கு வருகிறான் என்பது அவளுக்கு விளங்கியது.

"என்னா..! கேளேன்!" என்றாள் தேவி. செல்வா தொடர்ந்தான்.

"அக்கா! ஒன் ஆசப்படி வாஸந்தி படிச்சு முடிச்சிட்டா!" சற்று நிறுத்தினான். முகத்தை ஏறிட்டு நோக்கி, மீண்டும் பேசலானான்.

"அவ மேலே எனக்குள்ள விருப்பம் ஒனக்குத் தெரியும். ஆரம்பத்தில நீ எங்களக் கண்டிச்சு வெச்சே. இப்ப சொல்லுக்கா, வாஸந்திய எனக்கு நீ தரணும்".

நறுக்குத் தெறித்தாற்போல் வார்த்தைகளை அடுக்கி, நேரடியாகவே அவன் தொடுத்த கேள்வி அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"முந்தியொருநாள் நீ வாஸந்தியோட வாழ்வு ஒன்னால ஒளிபெறும்னா, அதில மகிழ்ச்சி அடையிற முதல் ஜீவன் நான்தான்னு சொன்ன! இப்ப சொல்லுக்கா, நீ எனக்கு வாஸந்திய தரணும்! அவள சந்தோஷமா வைக்க எனக்கு முடியும். நீ இத நம்பணும்!". என்றான். பழைய நிகழ்வொன்ற நினைவு படுத்தியவனாக.

தேவிக்கு நா எழவில்லை. பேசாது அவனையே வெறிக்கப் பார்த்தவளாக சிந்தனையில் ஆழ்ந்தாள். பூவிழி அவள் மடியில் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவ்வேளை உள்ளே நுழைந்த ராஜாவால் அவர்கள் பேச்சுத் தடைப் பட்டது.

❀❀❀❀

இரவு முழுவதும் தேவிக்குத் தூக்கம் வரவில்லை. செல்வாவின் ஒவ்வொரு வார்த்தையும் அவள் நினைவில் மீண்டும் மீண்டும் தோன்ற, எண்ணங்கள் எங்கெங்கோ அலையத் தொடங்கின.

செல்வம் தன் விருப்பத்தை நேரடியாகவே வெளிப்படுத்திய போது, அவளுக்குப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. தருகிறேன் என்பதே சொல்லத்தக்க ஒரே பதிலாகவிருந்தது அவளுக்கு. ஆனால் அதைச் சொல்லும் தைரியம் அவளுக்கு அப்போதும் இருக்கவில்லை. இப்போதும் தோன்றவில்லை.

தேவியின் சிந்தனையில் பொன்னுமாமியின் தோற்றம், பூதாகரமாகத் தோன்றியது. அதன்முன் தான் ஒரு குற்றவாளியாகத் தோன்றச் சட்டென அவள் எழுந்து கொண்டாள். அருகில் கிடந்த பூவிழி புரண்டு மெல்ல விலகினாள். தேவி மீண்டும் பாயில் சாய்ந்து குழந்தையைத் தனது சேலைத் தலைப்பால் போர்த்தி தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

மீண்டும் தேவியின் சிந்தனைக்குத் தீனி கிடைத்தது. அவள் தன் எண்ணங்களைத் தொடர்ந்தாள். பொன்னுமாமியிடம் இந்த விஷயத்தை எப்படிக் கூறுவது? என்னைத் தன் மருமகளாக ஏற்றுக் கொள்ள ஒருபோது அவள் விரும்பினாள். ஆனால் இன்று நிலைமை வேறு. படித்த அவள் குடும்பம், பாவி ஒருவனால் சீரழிக்கப்பட்ட குடும்பத்தில் பெண் கொள்ள விரும்புவார்களா?

செல்வாவின் விருப்பம் அதுவாக இருப்பினும், கல்வியறிவில் குறைவான பொன்னுமாமியின் மனத்துள் எத்தனை ஆசைகள் கோட்டைகளாக உருப்பெற்று இருக்குமோ?

நாமாக இல்லாமல் செல்வாவே அம்மாவிடம் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும். அவள் விரும்பாது போனால் இதற்கு நாமும் சம்மதம் தெரிவிக்கக் கூடாது. இதுநாள் வரை எமது ஒவ்வோர் அசைவிலும் துணையாக நின்று, கைதூக்கி விட்ட அந்த நல்ல உள்ளம் ஏமாற்றத்தால் நொந்துவிடக் கூடாது.

தீர்க்கமாக ஒரு முடிவு மனத்தில் தோன்ற தேவியின் கண்களும் மெல்ல மூடிக்கொண்டன.

# 19

மறுநாள் காலை பொழுது விடிந்ததும், ராஜாவையும் வாஸந்தியையும் எழுப்பி விட்டு, தேவி முகம் அலம்பிக் கொண்டாள். பூவிழி மெல்ல எழுந்து பாயில் உட்கார்ந்தபடி, கண்களைக் கசக்கிக் கொண்டிருக்க, வீட்டில் வளரும் குட்டிப் பூனை அவளருகில் சென்று அவளோடு முட்டி மோதியது.

பழக்கப்பட்ட சிற்றுயிர். பூவிழி ஆதரவாக அதன் தலையைத் தடவி விட்டாள். அது பாய்ந்து அவள் மடியில் ஏறிப் படுத்துக் கொண்டது. பூவிழியின் முகத்தில் அதன் மேல் அவள் கொண்ட பாசம் புன்னகையாய் மிளிர்ந்தது. தனக்குக் கிடைத்த ஆதரவை அவள் அந்த வாயில்லா ஜீவனுக்கும் வழங்கினாள்.

தேவி குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தாள். இளஞ்சூட்டில் கதகதப்பாக, வாஸந்தி எடுத்து வைத்த சுடுநீரில் அதனைக் கழுவிச் சுத்தம் செய்து, குளிருக்குப் பொருந்த ஆடை மாற்றினாள்.

வாஸந்தி தயாரித்த தேனீரை அனைவரும் உண்டபின், தேவி குழந்தையோடு பொன்னுமாமி வீட்டை நோக்கி நடந்தாள்.

இவளுக்காகவே காத்திருப்பவள் போல் வாசலில் நின்றவாறு பொன்னுமாமி தேவியை வர வேற்றாள். தேவிக்கு அது அதிர்ச்சியைத் தந்தாலும் முகத்தில் அதை அவள் காட்டிக் கொள்வில்லை.

என்ன! எல்லாவற்றையும் செல்வம் அம்மாவிடம் சொல்லி விட்டானா வர வேற்பு மற்ற நாட்களிலும் வேறுபட்டு இருக்கின்றதே? என அவள் குளம்பினாள்.

கதவைத் தாண்டி உள்ளே சென்றதும், காவேரி இருக்க அவளுக்கு ஒரு பலகைக் கட்டையைத் தந்தாள். செல்வம் வெளியில் சென்றிருக்க வேண்டும். அவனை அங்கு காணவில்லை. குழந்தைகள் இரண்டும் இன்னும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தன. ஞாயிறு ஒருநாள் கிடைக்கும் சந்தர்ப்பம். ஆழமான தூக்கத்தில் தம்மை மறந்து தூங்கின குழந்தைகள். எல்லா இடங்களிலும், எல்லாக் குழந்தைகளும் காணும் சுகானுவபம்.

காவேரி, பூவிழியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

"தேத்தண்ணி குடிக்கிறியா தேவி?" மாமி கேட்டாள்.

"இல்ல மாமி, இப்பதான் குடிச்சேன்" என்றாள் தேவி.

"காவேரி, பூவிழியக் கொஞ்சம் வெளியே தூக்கிட்டுப் போம்மா," என்றபடி தேவியைப் பார்த்தாள் பொன்னுமாமி.

"தேவி" ஒன்னோட நான் கொஞ்சம் பேசணும்" என்றாள்.

தேவிக்குப் புரிந்தது. செல்வம் அம்மாவுடன் பேசியிருக்கின்றான். முகத்தில் கேள்விக் குறியோடு பொன்னுமாமியைப் பார்த்தாள் தேவி.

"செல்வம் நேத்திக்கி ஒன்னோடே என்னமாச்சும் கதச்சானா?"

தேவியின் மௌனம் கலையவில்லை அவளை அறியாது அவள் கண்கள் பெருக்கிய உஷ்ணமான நீர் வழிந்தோடிக் கன்னத்தைச் சுட்டது. சேலைத்தலைப்பால் துடைத்துவிட முயன்றாள். துடைத்துவிடும்முன் மற்றுமொரு கண்ணீர் வெள்ளத்தின் படையெடுப்பு. தோற்றுப் போனாள் தேவி. அது மேலும் பெருகி மார்புச் சேலையை நனைத்தது.

மௌனமாக விசும்பும் தேவி மீது பொன்னுமாமி பார்வையைச் செலுத்தினாள். அவளின் நெஞ்சக் குழப்பத்தை அவள் முகத்தைக் கழுவும் கண்ணீரில் கண்டாள்.

"ஏம்மா அழுகிறே, நான் ஒண்ணுமே சொல்லலியே"

தேவி விம்மினாள். அந்த விம்மலுக்கிடையே வார்த்தைகள் ஒடிந்து பிறந்தன.

"மாமி! என்ன மன்னிச்சிடுங்க மாமி! ஒழுங்காத்தான் வளத்தேன். ஆனா அவ இப்படிப் பண்ணிட்டா!. நான் மொதல்ல சொல்லிட்டேன் மாமி," என்று கூறியவாறு பீறிட்டு வரும் அழுகையை அடக்க முடியாது தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள் தேவி.

பொன்னுமாமியின் கண்களும் குளமாயின. அவள் தேவியருகில் போய் அமர்ந்து கொண்டாள். அவள் தலையை ஆதரவாகக் கோதிவிட்டாள்.

"அழாதேம்மா! நீ ஒண்ணும் தப்புப் பண்ணல!. வாஸந்தியும் பண்ணல!. எல்லாத்துக்கும் செல்வந்தானே பொறுப்பு? எல்லாத்தையும் நான் தெரிஞ்சுதான் பேசுறேன்". எனக் கூறியவாறு பேச்சை இடை நிறுத்தச் சிறுது அமைதியானாள்.

தேவிக்கு சற்று அமைதி கிடைத்தது. தன்னையோ வாஸந்தியையோ அவள் தப்பாக எண்ணவில்லை. என்பதும் செல்வாவே இந்த உறவைத் தொடங்கினான் என்பதும் பொன்னுமாமி அறிந்தவை என்பதை அவள் வார்த்தைகள் புலப்படுத்தியதால், அவள் சற்று நிதானமும் அடைந்தாள்.

இருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு பொன்னுமாமியின் முடிவு, என்ன என்பதில்தான் தன் தங்கையின் வாழ்வே தங்கியுள்ளது என எண்ணும் போது மீண்டும் அவள் நெஞ்சத்தில் வேதனை வேரூன்றத் தலைப்பட்டது.

இடையில் எவரின் இடையூறும் நிகழாததால், நீண்ட நேர அமைதி அங்கு குடிகொண்டது. சிறிது நேரத்தில் பொன்னுமாமியே பேசினாள்.

"தேவி! பாரும்மா!. வாஸந்தி படிச்சவ. அவ படிப்புக்காக நீ ஒன்னையே அழிச்சுக்கிட்டவ. ஒனக்கு என்னென்ன ஆசைங்க இருந்திச்சோ, ஆருக்குத் தெரியும்? அவள ஒரு பெரிய எடத்தில சேக்கிறதுக்கு நீ ஆசப்பட்டிருப்ப! ஏம்புள்ள படிச்சவன் தான். ஆனா காசு பணம் ஏங்கிட்ட இல்ல!. எந்தப் பணக்காரனும் கண்ணப் பொத்திக்கிட்டு கூட்டிகிட்டு போற அழகிம்மா வாஸந்தி".

"ஒண்ட ஆசையில மண்ணப்போட மனசு கேக்கல! நான் செல்வாக்கிட்ட சொல்லி அவன்ட மனச மாத்திடுறேன். நீ ஒண்ணும் கவலப்படாதேம்மா. ஏதோ, நானும் கேட்டுப்பாக்கலாமேனுதான் பேசினேன். ஆரம்பத்தில நீ அழுதப்போ இது ஒனக்குப் புடிக்கலன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு! அதுக்கப்புறம், நான் என்னா ஒங்கிட்ட கேக்கிறது..? நீ அழுகாதம்மா", எனக் கூறியபடி தன் பேச்சை நிறுத்தினாள் பொன்னுமாமி.

தேவிக்கு ஒன்றுமே புரியவில்லை. பொன்னுமாமி என்னதான் பேசுகின்றாள் என்பதை அந்த நிலையில் அவளால் சரியாக ஊகிக்க

முடியவில்லை. சற்று நேரம் அமைதியாக இருந்தாள். அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும், தன்மனத்தில் மீட்டுப் பார்த்த அவளுக்கு ஒரு தெளிவு பிறந்தது.

"அப்படியானால் நான் எண்ணுவது போலல்லவா அவளும் யோசிக்கின்றாள்".

எட்டமுடியாத கொப்புத்தேன் என்றல்லவா செல்வாவை அவள் எண்ணினாள். ஆனால் பொன்னுமாமியின் பேச்சிலிருந்து மரமே வளைந்து இரப்பது போலல்லவா இருக்கின்றது.

என் எண்ணத்துக்கு மாறாக பொன்னுமாமியே, தன்னைத் தாழ்த்திக் கொண்டு, என் ஆசைகளுக்கு நான் எண்ணாத ஒரு புது வடிவம் தந்து பேசுவது, அவளுக்கு வியப்பைத் தந்தது.

கண்ணீர் காய்ந்து போன கன்னங்களோடு, அவள் பொன்னுமாமியை நோக்கினாள். அவள் தன்னை ஏமாற்றத்துக்கு ஆட்படுத்தி மௌனமாகத் தேவியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன்னை அடக்கிக் கொள்ள முடியாத தேவி, வேகமாய்ப் பேசினாள்.

"மாமி! வாஸந்திய ஒங்கவூட்டு மருமகளா ஏத்துக்க ஒங்களுக்குச் சம்மதமா மாமி?" என்றாள் மாமியைப் பார்த்து.

"வாண்டாம்மா! ஒன்ட ஆசப்படி நீ பண்ணிக்கலாம். செல்வாவை நான் சமாளிச்சுக்கிறேன்" எனப் பதில் கூறி முடிப்பதற்குள், அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு தேவி தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

தனது பதில் தேவிக்குத் திருப்பதி அளித்திருக்க வேண்டுமென தப்பாக அவளைப் புரிந்து கொண்ட பொன்னுமாமி, அவள் அழுது ஒரு நிதானம் பெறும் வரை அவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

அழுகையில் கரைந்தது சில நிமிடங்களே.

"மாமி! வாஸந்திய நீங்க மருமகளா ஏத்துக்கிறதுக்கு நாங்க

தவம் பண்ணி இருக்கணும். அனாதைகளாப் போகாம எங்களக் காத்து வளத்த ஒங்களுக்கு, நாங்க அடிமைங்கமாமி. எப்படி ஒங்க ஆசைக்கு நான் வானாண்ணு சொல்லுவேன்? எப்படி ஒபகாரம் பண்ணி, எங்க கடனக் கழிக்கிறதுன்னு நான் ராப்பகலா யோசிச்சிக் கவலப்படுவேன். நீங்க நெனைக்கிறாப்ல நான் வாஸந்திய வேறு ஆருக்குங் கொடுக்கறதா இல்ல மாமி. ஆருக்குக் குடுக்கிறதுண்ணுதான் ஏங்கிட்டிருந்தேன். நீங்க, நாங்க பட்டிருக்கிற கடனோட, இன்னுங் கடன்காறவுங்களாப் போக வாஸந்திய மருமகளா கேக்கிறீங்க மாமி!. செல்வம் வாஸந்திய ஏத்துக்கிட்டா, எனக்குத்தானே மாமி சந்தோஷம்? எங்கே கேட்டா நீங்க மாட்டேண்ணு சொல்விடுவீங்கன்னுதான் நான் பயந்திட்டிருந்தேன். ஆனா நீங்களே விரும்பினா நான் வானாண்ணு சொல்லுவேனா மாமி?"

படபடவென்று சொல்லி முடித்த தேவியின் பேச்சைக் கேட்ட பொன்னுமாமிக்குத் தான் இதுவரை நினைத்ததெல்லாம் தவறு, என்பதையும் அவள் எண்ணத்தைப் புரியாது பேசி அவளை மனம் வருந்தச் செய்து விட்டதையும் நினைத்து வருந்தினாள்.

தேவி வாஸந்தியை என் புள்ளைக்குத் தராள் என்று நான் எண்ண, நான் செல்வத்தை வாஸந்திக்கு தருவேனா என அவள் அஞ்சியிருப்பதையும் பொன்னுமாமி புரிந்து கொண்டாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டநிலையில் வாசலில் செல்வம் "அம்மா!" எனக் குரல் கொடுத்தான்.

## 19

தேவியைத் தனித்துப் பேசிய அன்றே செல்வம் அம்மாவிடமும் பேசினான். ஆரம்பத்தில் அவன் தன் விருப்பத்தைச் சொன்னபோது அம்மா சற்றுத் தயங்கினாள். தேவியின் விருப்பம் எப்படி இருக்குமோ என்பதை, அவள் அறிந்து கொள்ளாமல் எவ்வாறு ஒரு முடிவுக்கு வருவது. வாய்விட்டுக் கேட்டுவிட்டால், மறுப்பு இருக்கக் கூடாதே என்பது அவள் எண்ணம்.

தங்கள் இருவருக்கும் இடையிலுள்ள நெருக்கத்தை அவன் தாயிடம் சொல்லவில்லை. ஆனால் அன்றிரவே சேதிகளைச் செவியில் வாங்கிக் கொண்ட காவேரி, செல்வதிற்குத் தெரியாதவாறு அம்மாவின்

காதில் அனைத்தையும் ஊதினாள்.

அவர்களின் நீண்டநாட் தொடர்பை அம்மா தெரிந்து கொண்டதும், தலைக்குமேல் வெள்ளம் பரவுகின்றது என்பதை ஊகித்துக் கொண்டாள்.

இந்நிலையில் காலத்தை வீணாகக் கடத்துவதிலும், கேட்டு ஒரு முடிவுக்கு வருவது நல்லதென அம்மா எண்ணினாள்.

சந்தர்ப்பமும் பொருந்திவந்ததால் இருவரும் மனம்விட்டுப் பேசினர்.

❀❀❀❀

தேவியின் ஒப்புதல் பெற்ற பொன்னுமாமி, வீரபுத்திரன் வீட்டுக்கு வந்தபோது அவனிடம் நடந்தவற்றைக் கூறினாள். அவனும் அம்மாவின் கருத்துக்கு உடன்படவே, எல்லாமே எதிர்ப்பின்றி ஒருமனத் தீர்மானமாகிற்று.

இதற்குள் மற்றுமோர் பிரச்சினைக்கும் தீர்வு காண வேண்டிய அவசியம் அவர்களுக்குள் உண்டானது. வீரபுத்திரனே அம்மாவிடம் எடுத்துக் கூறினான்.

அது காவேரியைப் பற்றியதாகும். ஒத்தவயதுள்ள வாஸந்தியின் திருமண ஏற்பாடுகள் தொடங்குமுன் காவேரிக்கும் ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்துகொள்ள வேண்டுமென்றான்.

அதனை அவனிடம் அம்மாவே சொல்ல வேண்டுமென எண்ணினாள். ஆனால் ஓரே நேரத்தில் இரண்டு சுமைகளை அவனால் சுமக்க முடியாது என்பதனால் சொல்ல அஞ்சினாள். வீரபுத்திரனே தானாக முன்வரும்போது, அவளுக்கு ஒருபாரம் நீங்கியது போலிருந்தது.

"ஏன் வீரா! நீயா யாரையாச்சும் பாத்து வைக்கிலியா? இங்கண்ண அவளுக்குப் பொருத்தமா யாரிருக்காப்பா? படிச்சவள்ள? படிச்ச ஒருத்தனாப் பாத்தா தேவலப்பா!" என்றாள் அம்மா.

"அம்மா! முத்துவுக்குத் தம்பி ஒருத்தன் இருக்காம்மா. படிச்சபய. எனக்கு ஒதவியா வேல செய்றான். கெட்டிக்காறன். எந்தக்

கெட்ட பழக்கமும் இல்ல. வயசுப் பொருத்தமும் சரியாத்தான் இருக்கும். நீங்க சம்மதம்ன்னா நானே முத்துக்கிட்ட கேட்டுப் பாக்கலாம்".

பதிலுக்கு இவ்வாறு வீரபுத்திரன் கூறியதும், அம்மா சந்தோஷப்பட்டாள். இருந்தாலும் காவேரியிடமும் ஒருவார்த்தை கேட்டுப் பதில் சொல்லுவதாகக் கூறினாள்.

காலையில் தேவி பூவிழியோடு மாமி வீட்டுக்கு வந்தாள். மிக்க மகிழ்ச்சியாகவே இருந்தாள்.

"வாம்மா தேவி, ஒக்காரு! ஒங்கிட்ட ஒரு நல்ல சேதி சொல்லணும். நேத்து ராவு, மூத்தவங்கிட்ட வாஸந்தி, செல்வம் வெசயமாப் பேசினேன்", என்றாள்.

தேவிக்கு நெஞ்சுக்குள் "திக்" என்றிருந்தது. அவள் இதயம் துடிப்பது அவள் செவிகளுக்கே கேட்டது. அவசரமாய்ப் பதில் என்னவென்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டவளாய்,

"மச்சான் என்ன சொன்னார் மாமி, சம்மதிக்கலியா?" என்றாள் வார்த்தைகளுக்கு வேகங்கூட்டி.

"ஏம்மா அவசரப்படுறே! அவன் அப்பிடியொண்ணுஞ் சொல்லலே. காவேரியைப் பத்தியும் ஏங்கிட்டே சொன்னான்!" என்று மீண்டும் வார்த்தைகளைக் கட்டுப்படுத்தி, தேவியின் முகத்தைப் பார்த்தாள். அது சோபையற்றுக் கிடந்தது.

"தேவி! அவுங்க வெசயத்தில அவனுக்கும் பூரண சம்மதம்னான். ஆனா அதோடே காவேரிக்கும் கல்யாணத்த முடிச்சிட்டம்னா பொறுப்பெல்லாம் முடிஞ்ச மாதிரின்னுஞ் சொல்றான்" என்றாள் மாமி.

தேவிக்கு நெஞ்சுக்குள் பனிகொட்டியது போலிருந்தது. வீரபுத்திரன் தம்பியின் திருமணத்தோடு, தங்கைக்கும் ஒரு நல்ல வரன் தேடி, முடித்துவிட எண்ணுவது அவளுக்குச் சரியாகவே தோன்றியது. மகிழ்சியோடு அவள் பொன்னுமாமியுடன் பேசினாள்.

"அவர் சொல்லுறது சரிதானே மாமி! வாஸந்தி செல்வாவோடே காவேரியும் குடும்பமாயிட்டா எங்க பொறுப்பும் முடிஞ்சிடுமில்லே?".

அவள் வார்த்தைகளை முடிக்குமுன்னே பொன்னுமாமியின் கண்களில் இரு கண்ணீர் முத்துக்கள் பிறந்து வழிந்தன. இதைக் கண்ட தேவி அதிர்ச்சியுற்றாள்.

"ஏன் மாமி அழுறே எல்லாமே நல்ல வெசயங்கள்தானே பேசினோம் சொல்லுமாமி சொல்லு" என்றாள் தேவி மாமியின் புயங்களைப் பற்றி.

மாமி ஒன்றும் பேசவில்லை. அடுக்களையை நோக்கி நடந்தாள். தேவிக்குப் புரிந்தது. அவள் எதையோ ஒன்றை எண்ணி வருந்துகின்றாள் என்று என்னிடம் சொல்லமுடியாத ஒன்று அவள் நெஞ்சுள் கனத்திருக்க வேண்டும். சொல்ல முடிந்தால் சொல்லி இருப்பாள் என எண்ணி தேவியும் மௌனமானாள்.

வடித்தெடுத்த தேனிரோடு தேவியிடம் வந்தாள் பொன்னுமாமி. இப்போது அவள் அமைதியடைந்திருந்தாள். புன்னகையோடு தேவியிடம் தேனீரை நீட்டினாள். அவளும் வாங்கிக் கொண்டாள். விளையாடிக் கொண்டிருந்த பூவிழிக்கும் பாட்டி கிண்ணத்தில் பால் தந்தாள். தனக்கெனக் கொண்டுவந்த தேனீரை ஒருபுறம் உட்கார்ந்து பருகியவாறு.

"தேவி! கொழப்பத்தில சொல்ல வந்ததையே மறந்திட்டேன்"

குழப்பத்துக்குக் காரணம் தேவியும் தான் என்பதை தேவி எப்படி அறிவாள்.

"வீரபுத்திரன் காவேரிக்கு ஒரு நல்ல இடத்தில ஒரு சேதி சொன்னான். எனக்குன்னா புடிச்சிப் போச்சி. நீ என்னா சொல்ற? நமக்குப் புடிச்சிட்டா அப்புறம் காவேரி காதுல போடலாம் எனக் கூறிய வாறே என்று அவள் வீரபுத்திரனிடம் கொண்ட சம்பாஷனையை தேவிக்குச் சொன்னாள் பொன்னுமாமி.

ஏற்கனவே அந்தக் குடும்பத்தைப் பற்றி அறிந்திருந்தாள் தேவி. முத்துவையும் அவளுக்குத் தெரியும். பள்ளிக் கூடத்தில் கூடப் படித்தவன். அவனுக்கோர் தம்பி இருப்பதும், இப்போது அவளுக்கு நினைவு வந்தது. நகர்ப்புற வாழ்வை வியாபார நிமிர்த்தம் தந்தை தேடிக்கொண்டதால், அவர்கள் தோட்டத்தில் மறக்கப் பட்டவர்களாய்ப் போனார்கள்.

"மாமி, முத்து குடும்பத்தவுங்க நல்லவுங்க வசதியானவுங்க! பையனும் படிச்சிருக்கிறதாலே, அவன் காவேரிக்கு நல்லதுணே எனக்கும் தோணுது. என்னா இருந்தாலும் காவேரியோட மனசு தெரியாம எதிலையும் முந்திக்கிட வேணாம்மாமி", என்றாள் தேவி.

பொன்னுமாமியின் எண்ணமும் அதுவாகவே இருந்ததால், "தேவி! நீயே சேதிய காவேரி காதுல போடும்மா. நான் கேட்டா இஷ்டமில்லாட்டியும், அம்மா மனசு நோகுமேன்னு சம்மதிப்பா. அது சரியாப்படல்ல. நீயே பேசிப்பாத்து எனக்குச் சொல்லு! நல்லா யோசிச்சு சொல்லச் சொல்லு!" எனத் தேவியிடம் கேட்டுக் கொண்டாள்.

## 20

மறுநாள் தோட்டத்தில் வேலை இல்லை. காலையிலேயே காவேரியைக் காணலாமென தேவி நினைத்தாள்.

செல்வா வாஸந்தி திருமண முடிவு காற்றோடு கலந்த சேதியாயிற்று. இப்போதெல்லாம் வாஸந்தி வெளியே வருவதைக் குறைத்துக் கொண்டாள்.

பார்க்கும் ஒவ்வொருவரும் தங்கள் கண்களுக்குள் எதையோ புதைத்துக் கொண்டிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. அது அவளது மனப் பிரமையாகக் கூட இருந்திருக்கலாம்.

வீட்டிலிருந்த வாஸந்தியிடம் பூவிழியைத் தந்துவிட்டு, தேவி பொன்னுமாமி வீட்டுக்குப் போனாள். அங்கு காவேரி ஒரு புத்தகத்தில் தன் கவனத்தைப் பதித்தபடி இருந்தாள்.

"காவேரி!"

தேவியின் அழைப்பைக் கேட்ட காவேரி சட்டென எழுந்தவளாய்,

"தேவியக்கா வா!" பூவிழி வரல்லியா?"

"இல்லேம்மா, வாஸந்தி கையில குடுத்துட்டு வந்தேன். அம்மா இல்லியா?" என்று கேட்டவாறு வீட்டினுள் நுழைந்தாள் தேவி.

அங்குகிடந்த பலகைக் கட்டையை ஒரு காலால் ஒதுக்கி அதில் தன்னை அவள் அமர்த்திக் கொண்டாள். காவேரி பதில் சொன்னாள்.

"அம்மா பீலிக்குப் போயிட்டாங்க. நெறையத் துணி தொவைக்கணும், வரக் கொஞ்ச நேரமாகும்!".

இது நல்லதொரு சந்தர்ப்பம். வீட்டில் காவேரி தனித்தே இருக்கின்றாள். கல்யாண விஷயம் பற்றி காவேரியிடம் பேச நல்லதோர் வாய்ப்பு: என எண்ணிய தேவி திடீரெனக் கிடைத்த சந்தர்ப்பம் என்பதால், எப்படிப் பேச்சைத் தொடங்குவது என அறியாது யோசித்தாள்.

முன்பின் பழக்கமில்லாத ஒரு புதிய முயற்சியில் இறங்க வேண்டும். கொஞ்சம் பிசகினாலும் தடம் மாறிப் போகலாம். படித்தவளல்லவா காவேரி. தேவி சற்றுத் தயங்கினாள்.

சிறுபொழுதில் அவளுக்கோர் யோசனை தோன்றியது. அவளது கையில் இருக்கும் நாவலைக் காரணமாக்கிப் பேச்சைத் தொடங்கினாள்.

"படிச்சு முடிச்சதுக்கப்புறம் ஒனக்கும் வாஸந்திக்கும் இதே பொளப்பாப் போச்சுல்லே" என்றாள் புன்சிரிப்பொன்றை வரித்துக் கொண்டவளாக.

காவேரி புத்தகத்தை மூடிக்கொண்டாள் அதன் முன் அட்டை தேவியின் கண்களில் பட்டது.

"மனைவி"

"நல்ல தலைப்பா இருக்கே! என்ன கவிதையா?"

இல்லேக்கா, நாவல். ஒரு பொண்ணு வாழ்க்கைய வெச்சி எழுதி இருக்கு. நான் படிச்சப்புறம் தேவியக்கா ஒனக்கும் தாரேன், நீயும் படிக்கணுமக்கா" என்றாள் காவேரி சற்று உறுத்தலாக.

"எனக்கெங்கம்மா நேரம்! பத்து வருஷம் பள்ளிக்குப் போனாலும் எனக் கொன்னும் அதனால பெரயோசனம் கெடைக்கலியே!".

"ஏன் அடிக்கடி குமுதம் படிப்பியேக்கா!" என்றாள் காவேரி, இருவரும் ஒன்றிப் பலமாய்ச் சிரித்தனர்.

"ஆமா.. கதையென்னா? நீயே கொஞ்சம் சொல்வேன்!" என்று தேவி கேட்க வாஸந்தி சொன்னாள்.

"ஒரு படிச்ச பொண்ணு தனக்குத் கெடச்ச கணவன, திருப்தியோட ஏத்துக்கிட்டு அவனோட எப்படி சந்தோஷமா வாழுறாங்கிறது தான் கதையோட கரு அக்கா நல்லாவே போகுது.

தேவிக்குச் சந்தர்ப்பம் ஒரு நாவல் உருவில் வந்திருப்பது புலப்பட்டது. அவள் அதிசயித்தாள். அதனையே பயன்படுத்திக் கொள்ளவும் செய்தாள்.

"காவேரி, நல்ல "கரு"ம்மா. அதுபோல ஒரு செய்திதான் நான் ஓங்கிட்ட கேக்க வந்தேன்". என்றாள் தேவி.

காவேரி ஆச்சரியத்தால் புருவங்கள் உயர, தேவியை விழிகளால் விழுங்கினாள்.

"காவேரி! நீ படிச்ச பொண்ணு. நான் சொல்லுறத நீ கொஞ்சம் நல்லா கேக்கணும்." என்ற புதிரோடு வார்த்தைகளை நிறுத்தினாள்.

அவள் பேச்சைக் கேட்ட காவேரிக்கு மேலும் வியப்பு மிகுந்தாலும், அதனை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. கையில் இருந்த நாவலை மடியில் வைத்துக் கொண்டு, தேவியின் முன்னால் கால்மடித்து அமர்ந்தாள். தேவிதொடர்ந்தாள்.

"காவேரி! செல்வாவுக்கும் வாஸந்திக்கும் ஒரு முடிவு பண்ணிட்டோம். இப்ப அதோடே சேர்ந்தாப்ல ஒன்ட கல்யாணத்தையும், முடிச்சுடனும்ன்னு அம்மா ஆசப்படுறாங்க. நீ என்னம்மா சொல்லுறே" எனப் பேச்சைத் தொடங்கினாள் தேவி.

நாணத்தால் முகம் அந்திவானமாய்ச் சிவக்கக் காவேரி தலையைக் குனிந்து கொண்டாள்.

ஒரு பெண்ணின் வாழ்நாளில் கேட்கப்படும் முக்கிய கேள்விகளில் இதுவுமொன்று என்பதால், தேவி மிக நிதானமாகவே வார்த்தைகளைக் கையாண்டாள்.

"காவேரி, ஒரு நல்ல எடத்தில ஒனக்கொரு பையன அண்ணா பார்த்திருக்கார். நீ சம்மதிச்சா மட்டுந்தான் அத மேற்கொண்டு பேசுவார்" என்று சொல்ல ஆரம்பித்து, முத்துவின் குடும்பம் பற்றியும் அவன்

தம்பி பற்றியும் கூறி, பொன்னுமாமி சொன்ன பிற அனைத்தையும், அவள் மனத்தில் பதியுமாறு நிதனமாய் ஒப்படைத்தாள்.

வாய்திறந்து எதுவுமே பேசாது தலைதாழ்த்தி மௌனமாய் இருந்தாள் காவேரி. மடியில் கிடந்த நாவல் அவள் கைக்கு இடம்மாறி இருந்தது.

"இப்ப நீ ஒண்ணுமே சொல்லவேணாம். நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்குவா. ரெண்டுநாள் பொறுத்துக்கலாம்" எனக்கூறியபடி தன் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைக்க முனையும் போது, வாசலில் துணிமூட்டையுடன் பொன்னுமாமி வந்து கொண்டிருந்தாள். அவள் கண்கள் தேவியின் முகத்தில் பதிலொன்றைத் தேடிக் கொண்டிருந்தன.

❀❀❀❀

எழில் கொஞ்சம் மலைநாட்டின் அழிவில்லாப் பெருஞ்செல்வம், நீர் வீழ்ச்சிகள். சிறிது சிறிதாய் ஊற்றெடுத்து, ஒன்றுபட்டு நதிகளாகி, மலைமண்ணைச் சீராட்டிச் செழிக்கச் செய்து, பீடபூமிகளையும் சமவெளிகளையும் தன் பெருங்கொடையால் நீராட்டிக் கடலோடு சங்கமிக்கும் அழகு இந்தப் பொன்னாட்டின் பெரும் பேறாகும். அவ்வாறு புரண்டுவரும் ஒரு ஆற்றங்கரை உல்லாச விடுதியில், முத்துவும் வீரபுத்திரனும், எதிர் எதிராக அமர்ந்திருந்தனர்.

நீரில் தவழ்ந்துவரும் மாலைத் தென்றலின், மெல்லிய நெருடல், உடலைச் சற்றுச் சிலிர்க்க வைக்கச் சூடான தேனீரைச் சிறிது சிறிதாக உறுஞ்சி நாவுக்குச் சுவையும், உடலுக்குக் கதகதப்பையும், ஊட்டிக் கொண்டிருந்தனர் நண்பர்கள்.

வாழ்வு எவ்வளவு இன்பகரமானது! சோகங்களுக்கிடையிலும், தோன்றுகின்ற இன்பகரமான நிகழ்வுகள் அந்தச் சோகங்களை மறக்கடிக்க அவ்வப்போது மனித மனங்களுக்கு ஒத்தடம் தருகின்றன.

இன்பத்தை மனிதன் மனதில் தக்க வைத்துக் கொள்வது போல், சோகங்களை நிலைபெறச் செய்வதில்லை. சிலபோது ஏற்படுகின்ற துன்பத்தின் தீராதவடுக்கள், சிலரின் வாழ்வை அழித்தொழித்தாலும், பெரும்பான்மையான துன்பங்கள் மறக்கப்பட்டனவாய், நிழலற்றும்

போகின்றன.

முன்னொருபோது அதே விடுதியில், அதே சூழலில், தங்களின் நீண்டகால நட்பினைப் புதுப்பித்துக் கொண்டனர் நண்பர்கள்.

சங்கரியின் துயரப்பிரிவும் அதனால் ஏற்பட்ட வாழ்வின் இடறல்களும்தான், அவர்கள் பேச்சில் மிகைத்துக் கிடந்தன. ஆனால் இன்றோ அதற்கு மாறான ஒரு சந்தோஷ நிகழ்வுக்கு அத்திவாரமிட்ட நிலையில், மன நிறைவோடு, குளிர்காற்றின் சுகானுபவத்தோடு, தேனீர் அருந்திக் கொண்டிருந்தனர்.

❀❀❀❀

தேவியின் கேள்விக்குப் பதில் தேட காவேரி வாஸந்தியின் உதவியை நாடினாள். இருவரும் இரண்டு நாட்களின் பெரும் பகுதியை அதற்காகவே செலவிட்டனர்.

வாஸந்தியின் வாழ்வோடு செல்வம் ஒன்றுவது, ஒன்றுக்குள் ஒன்று இணைவது போன்றதே. ஆனால் காவேரியின் வாழ்வுக்குத் துணையாக வரப் போகிறவன், சற்றே நினைவிருந்தாலும் கால ஓட்டத்தில் மறக்கப்பட்டுப் போனவன். இடைப்பட்ட காலத்தில் அவன் வாழ்வின் போக்கினைக் காவேரியோ அன்றி காவேரி பற்றி அவனோ தெரிந்திருக்கவில்லை.

புதிதாகத் தோன்றும் மனித ஒன்றுதலின் பெறுபேறுகள், எவ்வாறு அமையுமோ என்ற வினாக்குறியோடு நம்பிக் கரம்பற்றும் ஒரு துணிகர முடிவுக்குக் காவேரி வர வேண்டி இருந்தது.

ஈற்றில், ஒன்றுமே அறியாத ஒருவனை படிப்புக்கோ, பொருளாதார மேன்மைக்கோ நம்பிக் கைப்பிடிப்பதை விட, தானறியாவிடினும், தன் உடன் பிறந்தவன் அறிந்து, தெரிந்தவனைத் துணையாக்கிக் கொள்வதில் தப்பில்லை என முடிவு செய்து தனது சம்மதத்தை தேவியிடம் தெரிவித்தாள் காவேரி.

தனது தங்கையின் ஒப்புதலைத் தெரிந்த பின்னர், வீரபுத்திரன் ஒரு வாய்ப்பான சந்தர்ப்பத்தை முத்துவிடம் அறிந்து கொண்டு அவனைத்

தனித்துச் சந்தித்தான். முத்துவும் தமது தொழிலோடு கொண்ட உறவின் நெருக்கத்தால், நட்பின் இறுக்கத்தால், தனக்குச் சம்மதம் என்றும், தம்பியைக் கேட்டு முடிவு கூறுவதாயும் வாக்களித்தான்.

நீண்ட நேரம் அந்த இருக்கைகளுக்குத் தம் உடற்சுமைத் தந்தவர்கள், "வெய்ட்டரு"க்கு நிறையவே "டிப்ஸ்" கொடுத்துவிட்டு எழுந்தனர்.

## 21

வீரபுத்திரன் சொன்ன சேதிகளை தருணம் பார்த்துத் தம்பியிடம் கூறினான் முத்து. படித்த பெண் என்பதனால் தம்பி பொன்வண்ணனுக்குப் பிடித்துப் போயிற்று. பெண்ணின் அண்ணன் வீரபுத்திரனின் நாணயமும், நல்ல பண்புகளும், முத்து அண்ணனின் சிபாரிம் அவனை ஒப்புதல் தரச் செய்தன.

நல்லதொருநாளில் எல்லாமே சுமுகமாகப் பேசி, திருமண நாளையும் தீர்மானித்துக் கொண்டனர். இரண்டு திருமணங்களும் ஒரேநாளில் செய்ய முகூர்த்தமும் பொருந்திவர, திருமண ஏற்பாடுகள், வேகமாய் நடைபெற்றன.

படித்த பெண்களைக் கரம்பிடிப்பதால், செல்வமும், பொன்வண்ணனும் அழியாச் செல்வமான கல்வியையே, சீதனமாகப் பெறுவதென ஒத்துப் பாடினர்.

வீரபுத்திரன் தரமுயன்றாலும் பொன்வண்ணன் முற்றாக மறுத்துவிட்டான. தேவியின் நிலைமையில் வாஸந்தியை அவள் வெறுங்கையோடு, அனுப்ப வேண்டியாயிற்றே என மனத்துள் வெதும்பினாள். எனினும் இதுநாள்வரை அந்தக் குடும்பத்தின், அனுசரணையுடன் வாழ்ந்து விட்டதால் அதை எண்ணி அவள் வெட்கப்படவில்லை.

இரண்டு பெண்களுக்குரிய நகை நட்டுகள், துணிமணிகளை, வீரபுத்திரனின் செலவிலேயே வாங்கிக் கொண்டாள் அம்மா. செல்வம் தனக்கான அனைத்தையும் தன் செலவில் வாங்கிக் கொண்டதோடு அம்மாவுக்கும், தேவிக்கும் குழந்தைகளுக்கும் உடுதுணிகளுக்கு அவனே பொறுப்பேற்றுக் கொண்டான்.

திருமண நாளும் வந்தது. நகர்ப்புறக் கோயில் திருமண மண்டபத்தில் இரட்டைத் திருமணங்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகின.

மண்டப அலங்காரங்களோடு இரண்டு மண மேடைகள் அருகருகே போடப்பட்டிருந்தன. வாசலில் வாழை மரங்களும் வழி நெடுக, மாவிலையும், தென்னங்குருத்தும் கொண்ட சோடனைகள். எங்கும் தொங்க விடப்பட்ட மல்லிகைச் சரங்களிலிருந்து மலைத் தென்றல் ஊதியம் பெறாமலையே மணத்தை வாரி மண்டபமெங்கும் பரவச் செய்தது.

அலங்கார விளக்குகளின் அணிவகுப்பால், இருளரக்கன் எங்கோ ஓடி ஒளிந்தான்.

முத்துவின் சார்பில் பணக்கார வீட்டுத் திருமணம் என்பதால், பந்தியில் அவனைச் சார்ந்தவர்களே அதிகம் காணப்பட்டனர். தேவியின் சார்பில் ஒருசிலரும், பொன்னுமாமி வீரபுத்திரன் சார்பில் சிலரும் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

திருமணச் செலவீனங்கள் அனைத்தும் தனது செலவிலேயே நடைபெற வேண்டுமென முத்து கேட்டுக் கொண்டதால், அனேக பேர்களை அழைக்கும் எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை. இதனைப் புரிந்து கொண்ட முத்துவுக்கு மிக்க மனச் சங்கடமாயிற்று. முத்து இது பற்றி வீரபுத்திரனிடம் வெளிப்படையாகவே வினாவினான்.

"ஏன் வீரா! ஒங்க பக்கம் சனங்களையே காணமே. நீ அழைக்கலியா?"

வீரபுத்திரன் பதில் சொல்லவில்லை. முத்துவே பேசினான்.

"வீரா! நீ என்னய வேத்து மனுஷனா நெனச்சிட்டே! நாம ஒண்ணுங்கிற எண்ணம் இன்னும் ஒனக்கு வரலியே!" என்றான் மனம் நொந்தவனாக.

வீரபுத்திரன் ஒருவாறு நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, அவனை மணமேடைப்பக்கம் அழைத்துச் சென்றான்.

முகூர்த்த வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. சொந்தமும், சுற்றமும், சூழ்ந்திருக்க, வந்திருந்தோர் கண்களெல்லாம் ஒன்றிணைந்து நோக்க கெட்டி மேளம் கொட்டியது.

எல்லோரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். கண்ணில் வழிந்த ஆனந்தப் பெருக்கைத் துடைக்கவும் மறந்து தேவி நின்றாள். தனது வாழ்வின் மிகப் பெரியதொரு பொறுப்புத் தன்னை விட்டு நீங்கிவிட்ட மனநிறைவோடு, அவள் கண்கள் மகிழ்வால் பொழிந்தன.

❀❀❀❀

வாஸந்தியின் பட்டப்படிப்பு அவள் திருமணம், இரண்டுமே சிறப்பாக நிறைவு பெற்றபோது, அவள் கண்முன் பொன்னுமாமியே தோன்றினாள். தாயைப்போல் பிள்ளைகளும் ஒவ்வொரு வகையில் தன் குடும்பத்திற்கு உதவி செய்து, அந்தக்குடும்பத்திற்கு வாழ்நாளெல்லாம் கடமைப்பாடுடையவர்களாக ஆக்கிவிட்டனர்.

பொன்வண்ணன் காவேரியைத் தன்னோடு வாழ அழைத்துக் கொண்டதால், அவளிடத்துக்கு வாஸந்தி வீட்டின் புதுவரவானாள்.

ராஜாவைப்பற்றி தேவி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. அவன் விளையாட்டைப்போல, படிப்பிலும் சமர்த்தாகவே இருந்தான். அவன் ஆண்பிள்ளை. வாழ்வைச் சற்று நெறிப்படுத்திவிட்டாலே போதும், அவன் வாழ்ந்து கொள்வான் என்னும் நம்பிக்கை அவளுக்கு இருந்தது. அத்தோடு, செல்வா வாஸந்தி இருவரதும் வழி நடத்தல் கல்வியில் அவனை ஒரு உன்னத நிலைக்கு கொண்டுவந்துவிடும் என்ற உறுதிப்பாடும் அவளுக்கு இருந்தது.

❀❀❀❀

திருமணமாகி வாஸந்தி வீட்டை மாற்றிக் கொண்டதால் ஏற்பட்ட வெறுமையை தேவி ஓரிரு நாட்களிலேயே உணர்ந்தாள். தன் கைப்பட இருந்த ஒரு பெருஞ்செல்வமே, தன் கைகடந்துப் போனது போலிருந்தது அவளுக்கு. பூவிழி என்றோர் பாசத்தின் பிம்பம் அவள் இருண்டமனத்திற்கு ஒளிகாட்ட, அவள் அமைதியடைந்தாள்.

தனித்திருந்து தேவி சிந்திப்பாள். தன் கடந்த கால வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்வும் அவள் மனத்திரையில் தோன்றி மறையும்.

தீடீரென ஒருநாள் அவள் சிந்தனையில் பட்டஒரு நினைவு அவளைத் தன்னைப் பற்றி எண்ணத் தூண்டியது. தேவி இதுகாலவரை சிந்திக்காத, சிந்திக்கத் தோன்றாத ஒன்று அது. பெற்றோரை இழந்து இரண்டு உடன் பிறப்புகளுடன், நிர்க்கதியாய் நின்றபோது, கொண்ட வைராக்கியம் தனது உடன் பிறப்புகளைச் சுற்றியே நின்று விட்டதால், கொழுகொம்பற்ற கொடியாக, தனது இளமை இதுநாள் வரை பயிரிடப்படாத பசுந்தரையாய் வீணாகி போனதும், அவள் சிந்தனைக்குப் பொருளானது.

இளமையின் எழிலெல்லாம் தனதாக்கிக் கொண்டு வாழ்ந்த காலத்தில் தன்னை வீரபுத்திரன் விரும்பியதும் அதனை அவன் தன்னிடம் கூறி தன் விருப்பத்தைக் கேட்டதும், அவள் நினைவுக்குள் வந்தன.

பொன்னுமாமியியும் அவளை மருமகளாக ஏற்றுக் கொள்ள விரும்பினாள். அவ்வாறிருந்தும் அதனை மறுத்தது, இப்போது தான் செய்த தவறோ! என அவள் மனம் எண்ணியது. வீரபுத்திரனுடன் வாழ்திருந்தாலும், தனது இலட்சியங்களுக்கு நிச்சயம் அவன் உதவி இருப்பான் என்றும் மனம் சொல்லியது.

முனியன் என்ற காமுகனால், தனது கற்பு காவு கொள்ளப்பட்டபோது, அவள் இயலாமையை எண்ணி, சுற்றம் கூட அவள்மீது அபாண்டத்தைச் சுமத்தவில்லை. அனுதாபமே காட்டியது.

அவள் நல்ல உள்ளமும் தூய்மையான வாழ்வும், அயலவர் மத்தியில் முதன்மை பெற்றதால், அந்த நிகழ்வை ஒரு விபத்தாகவே அனைவரும் எண்ணினர். ஆயினும் தேவிமனத்தில் அது ஆறாத் தழும்பையே தோற்றிவித்திருந்தது.

தான் களங்கப் பட்டவள் என்ற அடிமன உணர்வு அவளை ஆண்களிடமிருந்து, பிரித்தே வைத்தது. இருப்பினும் ஒரு வெறியனுக்காக, அந்த இனத்தின் பால் அவள் வெறுப்போ, பழிவாங்கும் எண்ணமோ கொள்ளவில்லை.

இன்று அவள் மனத்தின் துயரச் சுமையைக் குறைத்துக் கொள்ள பூவிழியொருத்தியே துணையாக நின்றாள்.

## 22

நாட்களுக்குத்தான் எத்தனை அவசரம்! நாள்காட்டியின் ஒவ்வொரு இலக்கத்தையும் மிகவேகமாகச் சம்ஹாரம் செய்து கொண்டிருந்தன.

பூவிழிக்கு வயது நான்கு கடந்தது. பொன்னுமாமிக்கும் முன்போல குடும்பச் சுமையைத் தலைதாங்கும் திராணியற்றுத் தன்னை மட்டுமே கவனித்துக் கொள்ளும் உடல் வலுக் குறைவுக்குள்ளானாள்.

இப்போது அவளுக்கு குழந்தைகள் இரண்டையும் பராமரிக்க ஒரு துணை வேண்டி இருந்தது. முன்னர் காவேரியும், தொடர்ந்து வாஸந்தியும், துணையாக இருந்து அவள் சுமையின் பாதியைப் பங்கிட்டுக் கொண்டனர்.

இப்போது அவள் பங்கினை நிறைவேற்ற அவளால் இயலாதபோது, முழுச் சுமையையும், வாஸந்தியின் மேல் சுமத்த அவள் மனம் ஒப்பவில்லை.

ஒரு நாள் நிலாப் பொழுது, லயத்துக்குச் சற்றுத் தள்ளியுள்ள பாறைக்கு வீரபுத்திரனை அழைத்துக் கொண்டு பொன்னுமாமி சென்றாள். எப்போதும் குடும்பச் சுமைகளைத் தீர்த்துவைக்கும் ஒரு தீர்வு மேடையாக அப்பாறை அவர்களுக்கு இருந்து வந்தது.

குடும்ப பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்போது, லயத்திலுள்ள பிறரின் செவிகளுக்குத் தம்குடும்ப விவகாரங்கள் தீனியாகிவிடாமல், ஒரு ஒதுக்குப்புறமாக இருந்த அந்தப் பாறைக்கே அம்மா அழைத்துப் போவாள்.

அம்மாவின் செய்கை வீரபுத்திரனுக்கு வியப்பைத் தந்தது. இப்போது தனித்துப்பேசும் அளவு குடும்பத்தில் எந்த ஒரு பிரச்சினையும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

கல்லின் மேல் இருவரும் முகம்காட்டி உட்காந்து கொண்டனர். அம்மாவின் முகத்தைத் தன்பார்வையால் ஆராய்ந்தான் வீரபுத்திரன்.

பால்போல் நிலவிலும் அவன் அவள் முகத்தில் எதையும் தெரிந்து கொள்ளவில்லை. அம்மா சிறிது நேர மௌனத்தின் பின் பேசினாள்.

"வீரா, இத்தன நாளும் குடும்பச் சொமைய, என்னால தாங்க முடிஞ்சுச்சி. ஒடம்புல இப்ப பெலம் கொறஞ்சு போச்சு. வாஸந்தி மேலே எல்லாச் சொமையையும் போட நான் விரும்பல்ல. இதுக்கு ஏதாச்சும் ஒரு வழி பண்ணனும்பா", எனக்கூறி சற்று பேச்சை நிறுத்தினாள்.

வீரபுத்திரன் தாயின் நிலை எண்ணி மனம் வருந்தினான். இத்தனை நாளும் தன் இயலாமையிலும், தன்பங்கினுக்கு அதிகமாகவே செய்து வந்தவள், எள்ளத்தனையும் தன் சோர்வினை வெளிக்காட்டாது மறைத்திருக்கின்றாள் என்பதை உணர்ததும், அவன் மனம் கலங்கியது.

வயதான காலத்தில் சுமக்கவியலாத சுமைகளைச் சுமந்திருக்கின்றாள் என்பதை நான் ஏன் இது காலவரை தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கின்றேன் என எண்ண அவன் உள்மனம் அவனைச் சபித்தது.

"அம்மா! கைத்தொணைக்கு............, இல்லேம்மா, வீட்டு வேலைக்கே நீங்க யாரையாச்சும் வச்சுக்கலாமே. இத ஏம்மா எனக்கு இத்தன நாளுஞ் சொல்லல்லே? நாளைக்கே யாரையாவது தேடிக்கம்மா, இன்னிக்கே. பணந்தந்துர்றேன்!" என்றான் தன் குற்ற உணர்வால் உந்தப்பட்ட வீரபுத்திரன்.

"வேலைக்கின்னு யாரு வரப் போறாப்பா? அப்பிடி யாரும் வேணாம்பா. அவுங்க கொழந்தைங்கள நல்லா பாத்துக்க மாட்டாங்க. அப்பிடின்னா நானே பாத்துக்கலாமே!" என மறுத்தாள் அம்மா.

வீரபுத்திரனுக்கு எதுவுமே புரியவில்லை. அம்மா எதனை எதிர் பார்க்கின்றாள்? வீட்டு வேலை செய்ய ஒருவரை உதவிக்கு எடுப்பதைவிட, இந்தப் பிரச்சினைக்கு வேறு வழியே கிடையாதே.

"அப்பிடின்னா நீ என்ன செய்யனும்கிறம்மா?" என்றான் புரியாதவனாக.

"வீரா! சங்கரி நம்ம உட்டுட்டுப் போயி நாலு வருஷம்

போயிரிச்சில்ல? இன்னமும் ஏய்யா நீ தனியா இருக்கணும்? நல்ல ஒரு பொண்ணப்பாத்து கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன?"

"அம்மா............!" வீரபுத்திரன் அலறியே விட்டான்.

"நீ.. என்னம்மா சொல்றே! ரெண்டாந்தாரமா? வேண்டாம்மா! அந்த எண்ணமே எனக்கில்ல! சங்கரி இன்னும் ஏம் மனசில இருந்து போகல்லம்மா! அவ போகவும்மாட்டா. அவமனசில இருக்கிற வரைக்கும் நான் எப்பிடிம்மா ரெண்டாந்தாரம் பண்ணிக்கிடுறது?" என்றான் கண்கள் கலங்க வேதனை கலந்த வார்த்தைகளோடு.

பொன்னுமாமிக்கு அவன் மனநிலை புரிந்திருந்தாலும், இந்த வயதில் அவன் தனித்து வாழ்வதை அந்தத் தாயுள்ளத்தால் பொறுக்க முடியவில்லை. வாழ வேண்டிய வயதில் ஒருவன் தனித்துக் காலத்தை ஓட்டுவது எத்தனைப் பாவம். இந்த வயதில் அவன் வேறொரு பெண்ணைத் துணையாக்கிக் கொள்வது அவளுக்குக் குற்றமாகத் தோன்றவில்லை. அது அவசியமாவும் தோன்றியது.

எப்படியேனும் அவனைத் தன் வழிக்குக் கொண்டுவந்து, இருண்டுபோன அவன் வாழ்க்கையில் மீண்டும் ஒளியேற்றுவது தாயாகிய தனது கடமை என எண்ணியவளாய் அவள் மீண்டும் பேசினாள்.

"வீரா! ஒனக்கு ஒரு பொண்ணு தேவயில்லாம இருக்கலாம்பா, ஆனா வளர்ர புள்ளைங்கள ஒழுங்கா கவனிச்சிக்கிட ஒரு அம்மா வேணும்!" என்றாள் குரலில் சற்று வன்மை கலந்தே.

"அம்மா! இப்ப ஒனக்குப் புள்ளைங்களால கஷ்டம்னு எனக்குத் தெரியுதும்மா! நீ ஒத்துக்கிட்டா, நாம ஒண்ணு பண்ணலாம். புள்ளைங்கள் சங்கரியோட, அம்மாக்கிட்ட குடுத்திடலாம்".

"வேணாம்பா! அதால எனக்குக் கஷ்டம் கொறையலாம். ஆனா என்ட புள்ள நெலமாறுமா? நீ தனியா வாழப்புடாதுப்பா! எனக்குப் பொறகு யாருப்பா ஒன்னய பாத்துக்குவா? அதுக்குத் தான் நான் ஒனக்கொரு தொண வேணுங்கிறன்".

தன் பிள்ளைக்காக, தன் பிள்ளையிடமே இரந்து கேட்பது போல்

இருந்தது அவள் வார்த்தைகள்.

அம்மாவின் விருப்பம் தாயென்ற நிலையில் பொருந்தினாலும், தான் தன்னளவில் சங்கரிக்குத் துரோகம் பண்ணுவதா, அவள் ஆத்மா என்னைக் குற்றம் சொல்லாதா? அவள் இருந்த இடத்தில் இன்னொருத்தி எப்படி வாழ்வது, என்ற எண்ணங்களின் ஒவ்வொரு தேவைக்கும் ஈடு கொடுத்து எந்த வொரு குறையுமில்லாமல் என்னோடு ஒன்றறக் கலந்து இருந்தவளல்லவா என் சங்கரி. அவள் பிரிவு என்னையோர் அரை மனிதனாக அல்லவா மாற்றிவிட்டது. அந்த வெறுமையை, இன்னுமொரு பெண்ணினால் எப்படி ஈடுசெய்ய முடியும் என அவன் மனம் எண்ணியது.

அம்மாவின் வேண்டுகோளுக்கு எவ்வாறு பதில் கூறுவது எனக் குழம்பிப்போன வீரபுத்திரன் பதில் தோன்றாது தரையைப் பார்த்தபடி மௌனமாக உட்காந்திருந்தான்.

காற்றுச் சற்றுப் பலமாக வீசியது குளிர் தாங்காத அம்மா தன் சேலையால் உடலை இறுக மூடிக் கொண்டாள். அதனைக் கண்ட வீரபுத்திரன்.

"அம்மா! குளிருதில்ல? வாம்மா போகலாம். பொறகு பேசிக்கலாம்", என்றான்.

"இல்லேப்பா, இன்னிக்கே பேசிமுடிச்சிடலாம். ஒவ்வொரு நாளும் நம்மவயசு போயிகிட்டுத்தானே இருக்கு? வாஸந்தி புள்ளத்தாச்சி ஆகிட்டா, புள்ளைங்க அனாதைங்க ஆயிடும்! யோசிச்சி சொல்லுப்பா".

இந்த வார்த்தைகள் வீரபுத்திரனுக்குத் தன் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனையைக் கிளறி விட்டன. அவனது நெஞ்சில் உறைந்து கிடந்த வைராக்கியம் தன் குழந்தைகளை நினைத்தபோது சற்றுத் தளர்வதை அவன் உணர்ந்தான்.

அம்மாவின் ஒவ்வொரு வார்த்தையும், உலக அனுபவத்தின் வெளிப்பாடாக அவனுக்குத் தோன்றின. அம்மா என் குடும்ப வாழ்வின் எதிர்காலம் பற்றிய தொலை நோக்கின் காரணமாகவே மறுமணத்திற்கு

என்னை வற்புறுத்துகின்றாள் என்பதை அவனால் தீர்மானிக்க முடிந்தது.

தங்களுக்குப் பற்றுமிக்க ஒரு தாயாக, வாழ்ந்தது மட்டுமல்லாமல் பிறரின் வாழ்விலும் முடிந்த வரை தோள் கொடுத்து மலரச் செய்த தியாக உள்ளத்தின் சொந்தக் காரியான தனது தாயை மனுக்குலத்தின் ஒரு உன்னத பிறப்பாக அவன் மனம் எடைபோட்டது.

அவளது ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தங்களும் அவனுக்குப் புரியலாயின. இவ்வாறு நீண்ட சிந்தனையில் அவன் நேரத்தைக் கழிக்க அம்மா பொறுமையோடு அவன் பதிலுக்காய்க் காத்திருந்தாள்.

வீரபுத்திரனுக்கு ஓரளவு தெளிவு பிறந்ததும், தனக்கென்றில்லா விட்டாலும், தனது குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஒருதுணையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிரபந்தத்துள் தானிருப்பதை அவன் அறிந்து கொண்டான்.

"அம்மா! ரெண்டாந்தாரம் கட்டிக்கிட்டா அவ ஏம்புள்ளைங்கள கவனிச்சுக்குவான்னு நீ எப்பிடி நம்புற?" என அவனையறியாது திடீரென அவனிடமிருந்து ஒரு கேள்வி பிறந்ததும், பொன்னுமாமியின் மனத்தில் புதிதான ஒரு நம்பிக்கை புலர்ந்தது.

அவன் கேள்வியில் பதிலும் பொதிந்து கிடந்ததை அறிந்த அம்மா, பொருத்தமான ஒரு பெண் கிடைத்தால், அவன் எண்ணத்திற்கு, ஒத்துவருவான் என்னும் நம்பிக்கை பிறந்ததும்.

"வீரா! அப்பிடி ஒரு பொண்ணு இருக்கிறாப்பா. நீ ஒத்துக்கிட்டா, அவக்கிட்டே நானே கேட்டுக்றேன்!" என்றதும் வீரபுத்திரன் அதிர்ந்தே போனான்.

"யாரும்மா அவ?" எனத்துடித்தன அவன் அதரங்கள் வேகமாக, ஆச்சரியத்தால் கண்ணிமைகள் மேலெழுந்தன.

"தேவிதாம்பா" என்றாள் அம்மா.

வீரபுத்திரனின் உடல் சில்லிட்டுப் போனது. பனிக் காற்றின் சீதளத்தை இத்தனை நேரமும் பொருட்படுத்தாத அவனுடல், அம்மாவின் பதிலால், உள்ளம் சிலிர்த்து, உடல் உறைந்து போனது.

நிச்சயமாய் இந்த வார்த்தைகளால் அவன் அதிர்ச்சியுறுவான் என அம்மா அறிவாள்.

சஞ்சரி தன்னைத் தனிக்கவிட்டுச் சென்ற பிரிவுத் துயரில் இருந்து விடுபடாமல் இந்த நான்கு வருடங்களும் மற்றவர்களின் உதவியோடு பிள்ளைகள் வளர்ந்ததால் தனித்து வாழ்ந்த வீரபுத்திரனின் இன்றைய நிலை, அவன் தன் தனிமையைப் பற்றிச் சிந்திக்க வைத்தது.

குடும்பத்தில் ஒவ்வொருவராகத் தத்தமக்கென்றொரு வாழ்வைத் தேடிக் கொண்டபோது தனது தாய் தனித்து நிற்பதும், உறுதியான ஒரு துணையின்றி இனிமேல் குடும்பச்சுமையையும், குழந்தைகளின் பராமரிப்பையும் அவளால் சுமக்கமுடியாமல் இருப்பதையும் அவன் உணர்ந்தான்.

தனித்துப் போன தாய்க்குத் தக்க பலமாகத் தன்னால் இருக்க முடியாதபோது, தன் மூலமாக ஒரு துணையைத் தேடி, மகனுக்கும் வாழ்வளிக்க அம்மா எண்ணுகின்றாள் என அவனுக்குப் புரிந்தது.

வயதான தாயின் மறைவுக்குப் பின், என்னையும் என் குழந்தைகளையும், பொறுப்போடு கவனிக்க ஒருத்தியைத் தேடிக்கொள்வதில் உள்ள அவசியத்தை, அந்தத்தாயின் வார்த்தைகளிலிருந்தே அவன் தெளிவு பெற்றான்.

எதிர்காலத்தில் தன்னால் தனித்து தன் குடும்பத்தை கொண்டு செல்ல இயலாது போகும். தொழிலோடு, பிள்ளைகளின் கல்வி, பிற தேவைகள், அனைத்தையும் தன்னால் நிறைவேற்ற முடியாத நிலைமையையும் வீரபுத்திரன் எண்ணினான்.

இழந்து விட்ட ஒன்றை எண்ணியெண்ணி, எதிர்காலத்தை சூன்யமாக்குவதைவிட தன் குழந்தைகளின் எதிரகாலத்தை எண்ணியாவது தன் தனிமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய அவசியம் அவனுக்குத் தெளிவானது.

நீண்ட நாட்களாக பொன்னுமாமியின் மனத்தில் தேயிலைப் பதியம் போல் மெல்ல மெல்லச் செழித்துவளர்ந்த தேவிபற்றிய எண்ணம், இன்று அவள் வாயால் வெளிப்பட்டது. தனித்து வாழும் இரண்டு ஜீவன்களை

ஒன்றாக்கி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவுகாண அவள் விரும்பினாள்.

பூவிழிமீது தேவி கொண்டுள்ள பாசம், அந்த எண்ணத்தை அவள் மனத்தில் விதைத்தது. தாயில்லாக் குழந்தைக்கு அவள் தாயாக மாறியதால் அந்தப் பிஞ்சுமனம் தாயென்று வரித்துக் கொண்டது தேவியைத்தான். எந்தச் சக்தியாலும் பிரித்துவிட முடியாத அந்தப் பாசப்பிணைப்பினை நிரந்தரமாக்குவதே சாலப் பொருத்தமென பொன்னுமாமி எண்ணினாள். தவிரவும் முன்னொரு பொழுதில், தேவியை மணந்து கொள்ள, வீரபுத்திரன் விரும்பியதும் அவளுக்கு நினைவு வந்தது.

சங்கரி இல்லாத வெறுமையைப் போக்க தேவியொருத்தியே தகுதியானவள் என்னும் தீர்க்கமான முடிவு கொண்ட பின்னரே, பொன்னுமாமி, அவனிடம் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

அம்மா தனக்குப் பார்த்திருக்கும் பெண் தேவி என்று அறிந்த வீரபுத்திரன்,

"அம்மா! மொதலயே என் ஒரு புள்ளைக்கு அவ தாயாக இருக்கிறப்ப இன்னும் ரெண்ட அவ தலமேலே சொமத்தலாமா? வாஸந்திக்கும் ராஜாவுக்குமாகத் தனிச்சு வாழ்ந்த அவளுக்கு ஏம்மா இன்னுஞ் சொமயைத் தரணும்? அவ ஒரு நாளும் இதுக்குச் சம்மதமே தரமாட்டா" என்றான்.

"நான் சொல்லிட்டா அவ சம்மதிச்சுக்குவா வீரா! நானே கேட்டுப் பாக்கிறேன்.

அம்மாவின் வார்த்தைகளுக்குத் தேவி பெட்டிப் பாம்பாவாள், அம்மாவுக்காக எந்தத் தியாகமும் பண்ணுவாள். தன் வைராக்கியங்களையும் கூட விட்டுக் கொடுப்பாள் என்பது வீர புத்திரனுக்குத் தெரியும். இருப்பினும் அவள் சொந்த விருப்பினில் அல்லாது இதற்கு நாம் உடன்படக் கூடாது என எண்ணி அவன் "வேண்டாம்மா! இப்ப அதப்பத்தியொண்ணும் நீங்க கேக்க வேணாம்" என்றான்.

கேட்காதே என்ற தன் பிள்ளையின் வார்த்தைகளுக்குத் தப்பான

வேறு பொருள் கொண்ட அம்மா.

"வீரா! நான் சொல்லுறத நீ கொஞ்சம் கேளுப்பா! நீ ஏன் தேவிய விரும்பலங்கிற காரணம் எனக்குப் புரியுது. முன்னால அவ முனியனால சோரம் போனவ. அதத்தவிர அவ மேல எந்தக் களங்கமும் யாராலயும் சொல்ல ஏலாதுப்பா. அந்தப் பழி கூட சேராது. அவ பிரியமில்லாம அந்த நாடுமாறிப்பய அவள அடிச்சுப் போட்டுட்டு மயக்கத்தில கெடுத்துப்புட்டான். அந்த பாவி செஞ்ச பாவத்துக்கு, கடவுளாப் பாத்து பத்து நாள்ல பலியும் எடுத்துட்டான்".

"மனுஷன் நடக்கிறப்ப, தடுக்கி விழுவானில்ல? அப்பிடித்தாம்பா அதுவும். விழுந்து படுற காயம்போல. அவளுக்கும் நடந்திறிச்சு!".

"அந்தப்பாவி அவள கெடுத்ததுக்கப்புறம் தேவி மேலே ஆருமே பழிபோடல்ல, குத்தம் சொல்லல்ல, அவமேலே வெறுப்புக் காட்டல அவ தப்புப் பண்ணிட்டாண்ணு ஆருமே நெனெக்கல! என்னயப் பொறுத்தமட்டில அவ துப்புரவான பொண்ணுதாம்பா. அதனாலதான் அவளைக்கட்டிக்கண்ணு நான் கேக்குறேன் ".

மகனை வாய் திறக்க விடாமல் அவளே தொடர்ந்து பேசி நிறுத்தினாள்.

தேவியைப் பற்றி வீரபுத்திரன் நன்கு புரிந்தே வைத்திருந்தான். முனியனால் ஏற்பட்ட பழியை அவனும் ஒரு விபத்தாகவே எண்ணினான். அவள் மீது களங்கம் கற்பிப்பது பெரும்பாவம் என்பதையும் அவன் அறிவான். எப்போதுமே அவளைத் தப்பாக எண்ணாத போதும். தனது தாய் அந்த ஒரேயொரு காரணத்திற்காய் வெறுப்பதாய் எண்ணிப் பேசியதைத் தவறென தன்தாய்க்குச் சொல்ல,

"அம்மா! நீங்க நெனைக்றாப்பல நான் நெனைக்கல்ல. நீங்க கேட்டா அவ நிச்சயமா சம்மதிப்பா! அந்தக்குடும்பத்துக்கு அம்மா செஞ்சிருக்கிற, ஒவ்வொன்னையும், தேவி மறக்காம மனசில வெச்சிருப்பா".

"பெத்த தாயாயவும், அப்பனாவும் இப்ப அவளுக்கு இருக்கிறது நீங்க தானேம்மா! நீங்க சொன்னா அவ எதையுமே செய்வா! அவ விருப்பம் என்னான்னு தெரியாம கேட்டா, அது பாவம்ன்னு நான்

நெனைக்கிறேன். அதுனாலே நானே அவகிட்ட கேக்கிறேன். அவ விருப்பம் என்னான்னு தெரிஞ்சதும் நான் ஒங்கக்கிட்டே சொல்லுறம்மா" என்றான்.

தாய்க்கு இப்போது ஏற்பட்ட மன நிறைவுக்கு அளவேயில்லை. மகனை அழைத்துக் கொண்டு அவள் வீட்டை நோக்கி முன் நடந்தாள். அவளது மனச்சுமை பாதிக்குறைந்து போன மனநிறைவோடு.

## 22

வேலைப்பழுக் காரணமாக வீரபுத்திரன் சிலநாட்கள், தோட்டப்பக்கம்வரவில்லை. அம்மாவிடம் சொல்லிவிட்டே சென்றான். புதிதாய் ஏற்பட்டுள்ள பிரச்சினையும், அவனை அம்மாவிடமிருந்து சற்று விலகி இருப்பதையே விரும்பச் செய்தது. தன் பாட்டில் ஒரு முடிவுக்கு வராது இது பற்றி முத்துவின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ள அவன் விரும்பினான். நண்பனாக, தொழில் பங்குதாரனாக இருந்தவன் இப்போது குடும்பத்தில் ஒருவனாகவும் மாறிவிட்டதால், அவனிடமிருந்து, உபயோகரமான ஆலோசனை கிடைக்குமென அவன் நம்பினான்.

தினமும் போல் தேவி பொன்னுமாமி வீட்டுக்கு வருவாள். ஆனால் வீரபுத்திரன் விடயமாக அவள் எதுவும் தேவியிடம் கேட்கவில்லை. வீரபுத்திரன் வேண்டாமென்று சொல்லிவிட்டதால், பேசி வேண்டாத விபரீதங்களை ஏற்படுத்திக் கொள்ள அவள் விரும்பவில்லை. இருந்தும் அவள் என்றுமில்லாதவாறு மகிழ்வாக இருப்பது தேவிக்குப் புதுமையாக விருந்தது. அவள் தினமும் வீரபுத்திரனின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதும் தேவிக்கு வியப்பைத் தந்தது.

ஒருநாள் வீரபுத்திரன் தோட்டத்துக்கு வந்தான். அம்மா அவனுடன் என்றும் போலவே நடந்து கொண்டாள். தேவி பற்றி அவன் என்ன சொல்லப் போகிறான். என்பதை அறிந்து கொள்ள அவள் மனம் துடித்தது. இருந்தும் அவனிடம் அவள் பேச அஞ்சினாள்.

இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்ட வீரபுத்திரன் பிள்ளைகளோடு சிறிது நேரம் இருந்துவிட்டு படுக்கைக்குப் போனான். குழந்தைகள் இரண்டும் அவன் பக்கங்களில் அணைந்து கொண்டன.

இந்தக் காட்சி, பொன்னு மாமியின் கண்களைப் பனிக்கச் செய்தன. அதன் பொருளை அவள் மட்டுமே அறிவாள்.

❀❀❀❀

மெல்லெனப் புலர்ந்தது காலைப்பொழுது. வயதான காலத்திலும் பழக்க தோஷத்தால் வழக்கம் போல் அனைவரையும் முந்திக் கொண்டு எழுந்தாள் அம்மா. கூடவே வீரபுத்திரனும் எழும்பினான். அம்மா அவனுக்குத் தேனீர் தந்தாள். சிறிது நேரத்தில் குழந்தைகளும் விழித்துக் கொண்டன. பள்ளிக்குச் செல்ல ஆயத்தமாகின. வாஸந்தி உதவினாள் செல்வம் வீட்டில் இருக்கவில்லை.

காலைக் கடன்களை முடித்துக் கொண்ட வீரபுத்திரன், அம்மா காலையில் செய்த உணவை உண்டுவிட்டு வெளியில் புறப்பட்டான். வழக்கமாகப் பூவிழியோடு அந்த வேளை வரும் தேவி வராதது கண்டு அதனையே காரணமாக்கி மகளைப் பார்த்து வருவதாகக் கூறிப் படியிறங்கினான். அம்மாவின் இதயம் இயல்பையும் மீறி வேகத்தை கூட்டிக் கொண்டது.

"பூவிழி!.....

வாசலில் நின்றபடி குரல் கொடுத்தான் வீரபுத்திரன். குரல் கேட்டு ராஜா வெளியில் வந்தான்.

"வாங்க பெரியமச்சான்" என்று மகிழ்ச்சி பொங்க வரவேற்றான் ராஜா. அப்பாவின் பேச்சொலி கேட்ட பூவிழி தேவியின் சேலைத் தலைப்பில் தொங்கியபடி அவளுடன் வெளியில் வந்தாள். தேவியைக் கண்ட வீரபுத்திரனின் மனம் பதட்டத்தால் தவித்தது.

❀❀❀❀

தோட்டத்துக்கு வராமல் இருந்த நாட்களில், வீரபுத்திரன் முத்துவைச் சந்தித்தான். நடந்த அத்தனை விசயங்களையும் ஒன்று விடாமல் அவனிடம் எடுத்துச் சொன்னான். இப்போதுள்ள நிலைமையில் தன்னால் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லையென முத்துவிடம் கூறினான்.

"வீரா! அம்மா சொல்லுறதை நான் ஏத்துக்கறேன். தேவியைப்

பொறுத்த மட்டில், அவள் தோட்டத்தில் வேலை செய்யிறவளா இருந்தாலும், படிச்சவ. தன் குடும்பத்தின் கஷ்ட நிலையில் அந்தத் தொழிலைத் தவிர வேறு எதைத்தான், தோட்டத்தில் தேடிக்கிட முடியும்".

"உடன் பிறப்புகளுக்காக தன்னையே, அர்ப்பணித்த உத்தமி அவ. முனியனால் ஏற்பட்டகளங்கத்த, மனித மனங்கொண்ட எவருமே குற்றமாவோ, களங்கமாவோ ஏத்துக்க மாட்டாங்க. அவளக் கட்டிக்கிறதாலே ஒரு நல்ல பெண்ணின் வாழ்வு கருகிப் போகாம நீ வாழ்வளிக்கிறது மட்டுமில்ல, உன் கொழந்தைங்களுக்கு ஒரு பாசமுள்ள தாயையும் தேடித் தர்ற!.

"அம்மாவோட முடிவுக்கு நீ சம்மதிக்கிறதாலே அவ மனச்சுமையும் நீங்கும் அதோடே அவ நிம்மதியா கண்ணையும் மூடுவா" என்றான் முத்து.

முத்துவின் யோசனைகளைக் கேட்ட வீரன், ஒரு தீர்க்கமான முடிவுக்குள் தன்னை ஆள்படுத்திக்கொள்ள வேண்டிய நிரபந்தத்துக்குள்ளானாள். தேவி விரும்பினால் அவளை ஏற்புக் கொள்ளும் முடிவோடு தான் அவன் தோட்டத்துக்கும் வந்திருந்தான்.

❀❀❀❀

"உள்ள வாங்க மச்சான்" என்றாள் தேவி உபசரணையாக.

"பூவிழி அப்பாகிட்ட போம்மா", என பூவிழியைத் தந்தையின் பக்கம் செல்லத் தூண்டிவிட்டு வீரபுத்திரனுக்கு உட்கார ஒரு கதிரையையும் தந்தாள். ராஜா பள்ளிக்குப் புறப்பட்டுப் போனான். பூவிழியோடு தேவியும் வீரபுத்திரனும் மட்டுமே வீட்டில் இருந்தனர்.

குழந்தை தந்தையோடு சேர்ந்து கொண்டதால் தேனீர் ஊற்றிவர தேவி அடுக்களைக்குச் சென்றாள். வேண்டாமென்று மறுத்தும், நீண்டநாள் வராத காரணங்காட்டி அவள் உள்ளே சென்றாள்.

தேவி வரும் வரை தந்தையும் மகளும் பேசிக் குதுகலித்தனர். பூவிழியின் மழலைப் பேச்சில் வீரபுத்திரனின் நெஞ்சம் நிறைந்தது. தந்தையும் மகளும், மகிழ்ந்திருப்பதைக் கெடுக்க விரும்பாத தேவி தேனீர் தயாரிப்பதை நீட்டிக் கொண்டாள். ஓரக் கண்ணால் அந்தப்

பாச உணர்வுகளின் பரிமாற்றத்தைக் கண்டு அவளும் பூரிப்படைந்தாள்.

சிறிது நேரம் தந்தையும் மகளும் மகிழ்ந்திருக்கும்போது, பூவிழி அப்பாவை நோக்கி...

"அப்பா! நீங்க அம்மாவோட கோபமாப்பா" என்றாள்.

எதிர்பாராத அந்தக் கேள்வி. வீரபுத்திரனை வியப்பில் ஆழ்த்தியது. பூவிழி ஏனிப்படிக் கேட்டாள் என அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. செவியில் விழுந்த அந்தக் கேள்வியால் தேவியும் திகைத்துப் போனாள்.

மேலும் வாய்திறந்து அவள் ஏதேனும் விபரீதமாகக் கேட்குமுன், கையில் தாங்கிய தேனீர் கோப்பையுடன் வெளிவந்த தேவி அதனை வீரபுத்திரனிடம் நீட்டினாள். அவள் கரம் நடுங்குவதை கோப்பையில் இருந்த தேனீரே காட்டிக் கொடுத்தது. கோப்பையை வாங்கிக் கொண்ட வீரபுத்திரன் தனது உணர்வுகளை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

தான் பேசவந்த விடயத்திற்கு பூவிழியின் கேள்வியே தூண்டுதலாக அமைந்து போனதால், தன்னை நிதானப்படுத்திக் கொண்டவனாய் தேவியின் முகத்தை நோக்கினான் அவன். அது ஏனோ வியர்வை முத்துக்களால் நிரம்பிக்கிடந்தது.

"தேவி பாத்தியா இவ சரியான குறும்புக்காரியா இருக்கிறாளே. உன்னோட நான் கோபமான்னு கேக்குறா".

தேவி மெல்லப் புன்னகைத்தாள். இன்னும் அவள் முகத்தில் வியர்வை அரும்புகள் மண்டிக் கிடந்தன பூவிழி எப்போதும் தேவியை அம்மா என்றுதான் அழைப்பாள். இப்படி அவள் இரண்டு பேரையும் ஒன்று சேர்த்துப் பேசுவாள் என அவர்கள் இருவருமே எண்ணவில்லை. அதுவே அவர்கள் இருவரதும் வியப்புக்குந் திகைப்புக்கும் காரணமானது.

"வீரபுத்திரன் தேனீரை மகளுக்குந் தந்து தானும் அருந்தினான். வெறுக் கோப்பையை தேவி வாங்கிக் கொண்டாள்.

"தேவி!"

...என்றான் வீரபுத்திரன் மென்மைத் தொனியில் மடியில் இருந்த பூவிழியின் கேசத்தைத் தடவியவனாக.

"ஒன்னோட கொஞ்சம் பேசணும்னு தான் நான் இங்க வந்தேன். அதுவும் தனியா!" எனத் தொடங்கி இடைநிறுத்தினான்.

தேவிக்கு எதுவும் புரியவில்லை. வாஸந்தி பற்றி ஏதேனும் சொல்லப் போகின்றாரோ! என அவள் உள்மனம் எண்ணியது. தேவி மௌனமாக நின்றாள்.

"தேவி" நீ படிச்சவ! ஓங்கிட்ட நான் கேக்கப் போ்ற கேள்விய நீ தப்பா புரிஞ்சுக்கக் கூடாது. அம்மா சொன்னதுனால இதப்பத்தி நான் ஓங்கிட்டப் பேசறேன். எனக்கு சொந்த விருப்பு வெறுப்புன்னு இப்ப எதுவுங் கெடயாது. பெத்தமனசு தாங்காம சொன்னதுனால அம்மா விருப்பத்துக்கு நான் பணிய வேண்டியதா இருக்கு. அம்மாவே பேசி முடிவுக்குவர நெனச்சிச்சி, நான் தடுத்துட்டேன். நேரடியா நானே ஒன்னோடே பேசினா தேவலன்னு தான் நானே வந்தேன்!".

எதைப்பத்தி பேச இவர் இத்தனை பீடிகை போடுகிறார் என்பது தேவிக்கு இன்னும் புரியாமலே இருந்தது.

"இன்னும் நீங்க ஒண்ணுமே கேக்கலியே! எதப்பத்தி நீங்க பேசப்போறிங்கண்ணு நான் தெரிஞ்சுக்க வேணாமா?" என்றவாறு அவன் முகத்தைப் பார்த்தபடி மெல்லப் புன்னகைத்தாள் தேவி.

"பூவிழி ஒன்னய அம்மாவா நெனச்சுக்கிட்டு இருக்கா. அது பொய்யில்லெ?" என அவன் நிறுத்தியதும். மின்னலொன்று தன்னுள் புகுந்து நடுங்கியது போலிருந்தது அவளுக்கு.

"ஏன், பூவிழிய ஏங்கிட்ட இருந்து பிரிச்சுட்டுப் போகப் போறிங்களா?" என்றாள் பூவிழியை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டவளாக. அவள் கண்களிலிருந்து பொல பொலத்துக் கண்ணீர் வடிந்தது. பயத்தால் விரிந்த கண்கள், வீரபுத்திரனை தன்னுள் முழுமையாக அடக்கிக் கொண்டன.

"இல்ல தேவி! அத மெய்யாக்கிட வேணும்னு அம்மா விரும்புது".

இன்னும் தேவிக்கு அவன் கூறுவது புரியவில்லை. அவள் நெற்றி சுருங்க அவனை உற்றுப் பார்த்தாள். அதன் பொருளைப் புரிந்து கொண்ட வீரபுத்திரன்".

அம்மா ஒன்ன என் வாழ்வுக்குத் தொணையா சேத்துக்க ஆசப்படுறாங்க".

அவன் வார்த்தைகள் முடிவுற்றபோது தேவிக்குத் தன் செவிப்பறைகள் வெடித்து விட்டதுபோல் அதிர்ந்தன. அவள் கால்கள் திராணியற்று, நிற்க இயலாதவளாக நிலத்தில் குந்தினாள்.

பூவிழி மெல்ல விலக்கிக் கொண்டாள். பொங்கிவரும் பொருளறியாத கண்ணீர் வெள்ளத்தில் அவள் கன்னங்கள் கழுவுண்டு கிடந்தன.

அருகில் இருந்த மரப்பெட்டியில் தன்னைச் சாத்திக் கொண்டவளாகக் கண்களை மூடினாள். இன்னும் அவள் கண்ணீர் மதகொடித்து வெள்ளமாய் இமைகளை விலக்கிப் பீறி வடிந்தது.

வீரபுத்திரன் தன் கேள்வியோடு தலையைத் தாழ்த்திக் கொண்டதால் அப்போதைய அவள் நிலையை அவன் அவதானிக்கவில்லை. சிறிது நேரம் நிலத்தை விறைத்த அவன் கண்கள், பேச்சு வராமையால் தேவியை அளந்தன. அவள் இருந்த நிலை கண்டதும் தன் சொற்கள் அவளை வன்மையாகத் தாக்கி விட்டதாக உணர்ந்தவனாய் "தேவி! நான் தப்பா எதாச்சும் பேசி இருந்தா தயவு செய்து என்ன மன்னிச்சிடும்மா. நான் ஒன்ட விருப்பத்துக்கு மாறா எதையுமே செய்யமாட்டென். நீ என்ன நம்பலாம்".

"அம்மா ஒங்கிட்ட கேட்டா நீ விரும்பலைன்னாலும் ஒத்துக்குவே அதனால தான் நானா வந்தேன். நீ விரும்பலைன்னா ஏங்கிட்ட சொல்லிடு! நான் ஒன்னத் தெண்டிக்க மாட்டேன்!" என்றான் வார்த்தைகளுக்கு வேகங்கூட்டியவனாய்.

நீண்ட பொழுது மெல்லக் கரைந்தது. இருவரும் எதையுமே பேசிக் கொள்ளவில்லை. தேவியின் விழிகளில் இன்னும் கண்ணீர் வற்றவில்லை. அதைத் தாங்கிக் கொள்ளாத பூவிழியின் பிஞ்சுவிரல்கள்

அவள் முகத்தைத் தடவித் துடைத்தன. தேவி அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

"அம்மா! நீ அழுவாதேம்மா" என்ற அவள் அம்மாவின் அழுகைக்கு அப்பாவே காரணம் எனப் புரிந்து கொண்டு அவனை வெறுப்போடு நோக்கினாள். சுட்டெரிக்கும் கோபத்தீ அவள் கண்களில் கொப்பளித்தது.

"நீ... போ, நீ.. போ" என்றன, அதன் பிஞ்சு அதரங்கள் கோபத்தோடே. கண்கள் நீரைப் பெருக்கின.

குழந்தையின் மனத்தில் தோன்றிய மாற்றத்தைக் கண்டு, வீரபுத்திரன் மௌனமானாள். நீண்ட இடைவெளியின்பின் சற்றே நிதானமடைந்த தேவியின் நிதர்னமான சொற்கள் அந்த அமைதியைக் கலைத்தன.

"அம்மாவோட ஆசை நியாயமானதுதான். நீங்க தனிச்சிருக்கிறதப் பாக்க அம்மா மனம் பொறுக்கல. அம்மாவுக்கு வயசாயிடிச்சில்ல. இனிமே ஒங்களத் கவனிச்சுக்க ஒரு தொண வேணும்ன்னு அம்மா நெனக்கிறதுல தப்பிலிங்க. ஆனா அதுக்கு ஏன் என்னத் தேடனும்? நான் சோரம் போனவ!".

இப்போது அவள் கண்களிலிருந்து நீர் சிந்தவில்லை. மனதுக்குள் ஒரு தீரக்கமான முடிவுக்குள் அவள் வந்த பின்னரே பேசத் தொடங்கினாள். அதனை மிகவும் நிதானமாகவே சொல்ல வேண்டுமெனவும் அவள் எண்ணினாள்.

"உன்னய சோரம் போனவளா நான் நெனெக்கல்ல தேவி. அது ஒனக்கு உண்டான ஒரு விபத்துன்னுதான் நான் எண்ணுறேன். ஏன், இந்தத் தோட்டமே எண்ணுது".

"ஆனா நான் எண்ணல்லியே! அது என் நெஞ்சு முழுக்கப்பூசின கறுப்பால்லே இருக்கு!".

"ஒடல்ல உண்டான காயம் மாறிப்போனா, அத நாம மறந்திடுறோம்மில்லியா தேவி? அது எங்கபட்டாலும் வெறும் காயந்தான். அத மறந்திடணும்".

"அது அழியாத தழும்பா மாறிப்போனாலுமா மச்சான்?"

"தழும்பா இருந்தாலும் நாம தெனந்தெனம் அத தடவிப் பாக்கிறதில்ல தேவி"

"கண்ணுக்குப் பொலப்படுற மாதிரி இருந்தா, தெனமும் அது எப்பிடி வந்துச்சின்னு நெனப்பு வருந்தானே? மனசில ஒறஞ்சிட்டா எப்பிடி மறக்கிறது?"

"கல்யாணம் பண்ணிகிட்ட பொண்ணுங்க, புருஷனுக்கு ஏதாச்சும் ஆயிட்டா திரும்பவும் கல்யாணம் பண்ணிக்கலயா? அவ முந்தின காலத்த நெனச்சு, நெனச்சு தான் வாழுறாளா? இல்லியே! அப்பிடி நெனஞ்சிட்டு இருந்தா அவளால ரெண்டாம்மொற எப்பிடி தேவி சந்தோஷமா வாழமுடியும்?"

"ஏன் மச்சான் நான் முந்தி கல்யாணமா கட்டிக்கிட்டேன்?" முனியன் என்னக் கெடுத்திட்டான் மச்சான், என்ன கெடுத்திட்டான்".

திடமான மனத்துடன் பேசிய அவள் இப்போது கண்கள் கலங்க விம்மினாள். பின் தன் சோகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். வீரபுத்திரன் தொடர்ந்தான்.

"நான் ஒன்ன கட்டிக்கிட விரும்புறேன். மருமகளா ஒத்துக்க அம்மா பிரியப்படுறாங்க. இதுவரைக்கும் ஆருமே ஒன்னத் தவறா எண்ணல தேவி!"

"நீங்க மறக்கலாம், ஏத்துக்கலாம். அம்மாவும் மறக்கலாம், ஏத்துக்கலாம். ஆனா உலகம் இப்ப ஏத்துக்கறாப்போல பொறகு ஏத்துக்காது மச்சான்.

"ஒத்துக்கும் தேவி, ஏத்துக்கும். ஏன்னா இதுவரைக்கும் யாரும் ஒம்மேலே பழி சொல்லல!".

"இதுவரைக்கும் சொல்லல்ல நான் தனிக் கட்டையா கெடந்ததுனால. என் தலையிலே பூவில்ல. நெத்தியில பொட்டில்ல இத சனங்க ஏத்துக்குவாங்க. என்னெப் பாவமென்னு நெனெக்கறாதாலே. கெட்ட குடியப்பாத்து சனங்க பாவன்னு நெனப்பாங்க. ஆனா நல்லா

வாழுறவங்களபாத்து, எல்லாருமே சந்தோஷப் படுறதில்ல. மனம் புழுங்குவாங்க. இல்லாதத கூட நெனச்சி சொல்லுவாங்க. என்ட வாழ்க்கையில நடந்தே இருக்கே மச்சான் சொல்லாம உடுவாங்களா?".

"அதப்பத்தி நானே கவலப்படலியே தேவி"

"நான் கவலப் படுறேன் மச்சான். அது எனக்காக இல்லே. ஒங்களுக்காக, ஒங்க புள்ளைங்களுக்காக. முன்னால ஒரு பத்தினிப் பொண்ணால கெடச்ச மூணு புள்ளைங்களும் இனிமே தான் வாழப் போறாங்க. சின்னம்மா முந்தியே சோரம் போனவன்னு, மத்தவுங்க சொன்ன வளந்ததுக்கப்புறம், அவுங்க ஒங்களையே வெறுப்பாங்க. உலகம் கட்டாயம் கத சொல்லும் மச்சான்".

"வாழப் போறதா நீ சொல்லுற புள்ளைங்கள வளக்கப்போறது நீ தானே தேவி அவுங்களுக் காசுத்தான் நான் ஒன்ன ஏத்துக்கிடுறதா சொல்றேன். ஒன்னத்தவிர வேறு ஆராலயுமே அவங்கள வளக்கமுடியாதே. பூவிழிய ஓங்கிட்டஇருந்து என்னால பிரிச்சிட முடியாதே தேவி".

பூவிழியின் பேச்சுவந்ததும், தேவியின் மனம் பதறியது. வேறொருத்தி சித்தியானால் பூவிழி என்ன உட்டுப் போயிடுவா".

பொறியுள் சிக்கிய நிலைக்குள்ளானாள் தேவி. அவளிடமிருந்து உடன் பதில் ஒன்றும் பிறக்கவில்லை. அவள் விழிகள் பொழியும் சுடுநீரை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை.

பூவிழியை நெஞ்சொடு அணைத்தவாறு தேம்பித் தேம்பி அழலானாள் தேவி. பொங்கிப் பீறிடும் அழுகைக்கிடையே மீண்டும் வார்த்தைகள் வெடித்துப் சிதறின.

"என்பூவிழி எனக்குத்தான் சொந்தம். நான் ஆருக்கும் குடுத்திட மாட்டேன் அவள எங்கிட்டருந்து பிரிச்சிடாதீங்க. நான் செத்துடுவேன்.

தேவியால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. "கோ" வென்று அழத் தொடங்கி விட்டாள். அவள் மடியில் இருந்து நெஞ்சோடு அணைந்து கிடந்த பூவிழியும் அழத் தொடங்கினாள்.

அம்மாவின் அழுகைக்கு அப்பாவே காரணம் என்பதை அந்தப்

பிஞ்சு நெஞ்சு தாங்கிக் கொள்ளவில்லை. அப்பாவை வெறுப்போடு தன் அழுகைக்கிடையே.

"நீ போ.. நீபோ!..........." என வார்த்தைகளால் மீண்டும் சபிக்கத் தொடங்கியது.

எதிர்பாராத இந்தச் சூழ்நிலை வீரபுத்திரனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. இருந்தும் அவன் ஆண்மனம் தாங்கிக் கொண்டு, ஒரு முடிவை எண்ணிக் காத்துக்கிடந்தது.

"என்ன மன்னிச்சுடுங்க! என்னால ஒங்க விருப்பத்துக்கு எணங்க முடியல. ஒங்க நல்ல மனசுக்கு ஒரு நல்ல பொண்ணுகெடப்பா. பூவிழி மட்டுந்தான் என்னோட என்புள்ளையா இருப்பா! மத்த ரெண்டு பேரும் எவவந்தாலும் சேந்துகிடுவாங்க".

"அம்மா விருப்பத்துக்கு ஒரு பொண்ண நீங்க கல்யாணங்கட்டுங்க. சாகிறப்போ அவுங்க நிம்மதியாச் சாகணும்" ஒங்களோடு சேந்துவாழ எனக்கு விதியில்ல!"

"பூவிழிய வளத்துத்தாற பொறுப்ப நான் ஏத்துக்கிடுறேன். அவ எனக்கு ஓடலால சொந்தமில்லாட்டிப் போனாலும், அவ ஏம்புள்ளைங்க" எனத்தாங்கிக் கொள்ள முடியாத சோகத்தால் சிறிது நேரம் அழுத அவள் மீண்டும் பேசினாள்.

"சொந்தமா பெத்துக்கற பாக்கியம் கெடய்க்கல! இனியும் கெடய்க்கமாட்டாது. இருந்தாலும் நானே என்ட வயித்தில சொமந்து பெத்துக்கிட்ட சந்தோஷத்த அவ எனக்குத் தர்றா!"

"மச்சான் இது என்ட சொயநலம்னு நீங்க நெனச்சாலும் தப்பில்ல. நான் பூவிழிக்கு தாயா இருந்துக்கிடுறேன். அவ எனக்கு இல்லேண்ணா ஒலகத்தில இருக்கவே புடிக்காது. எதுவுமே எனக்குக் கெடைக்கலன்னு எண்ணுறப்போ, எல்லாமே கெடய்ச்ச மாதிரி அவ எனக்கு இருக்கிறா".

நான் செத்துப் போறப்போ எனக்கு ஒரு பொண்ணு பொறந்தான்னு நெனச்சு, நெறஞ்ச மனசோட நான் செத்துப் போகனும்னா பூவிழி ஏங்கிட்டயே இருக்கணும். இல்லேண்ணா நான் இப்பவே

செத்துப்போறேன்... செத்துப்போறேன். நீங்க போயிருங்க... போயிருங்க.......

எத்தனை எடுத்துச் சொன்னாலும் தேவியின் மனத்தைத் தன்பால் திருப்ப முடியாதென்ற தன் தோல்வியை வீரபுத்திரன் உணர்ந்தான்.

தனக்கு வாழ்வளிக்க இளமையில் ஒருவன் முன்வந்தபோது, தன் உடன் பிறப்புகளுக்காக அதனை ஒதுக்கிவிட்ட அவள், மீண்டும் சந்தர்ப்ப வசத்தால் அவனே அவளுக்கு வாழ்வளிக்க இருந்தும், களங்கமுற்ற கடந்த கால சம்பவத்தால், அவன் வாழ்விலும் களங்கம் பூசப்படும் என்ற அச்சம், அவன் குழந்தைகளுக்கு அவளால் ஏற்படப்போகும் இழிசொல், இவைகளுக்கு அஞ்சி, சுயநலமற்ற அவள் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளவே விரும்புவதை, நிதானமாக தன் மனத்திலிட்டுச் சிந்தித்தான் வீரபத்திரன்.

அவள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் நியாயத் தராசில் அவள் பக்கமே கனத்து நின்றன. கிடைக்கும் வாழ்வைப் பிறருக்காக இழந்து நிற்கும் ஒரு தியாக பிளம்பாய் அவன் கண்முன் அவள் தோன்றினாள்.

தனக்கே தான் தண்டனை விதித்துக்கொள்ளும் பொருட்டே, அவள் தன்னைத் தனித்து வைத்துக்கொள்ளச் சங்கற்பம் கொண்டுள்ளால் என்றே வீரபுத்திரன் எண்ணினான்.

இறுதியாய் அவன் தேவியை நோக்கி....

தேவி! ஒன்ட முடிவுக்கு குறுக்காக நான் நிற்கறது எனக்கு நியாயமாய் படல.

இத நான் நல்லாவே ஒணர்றேன். ஆனாலும், இப்பிடி ஒன்னயப் போல மனிச மிருகங்களால பழிவாங்கப்படுற பொண்ணுங்க வாழ்வு ஒன்ன போலதான் ஆகணும்கிற பொய்மைய என்னால ஒத்துக்க முடியல.

"தோட்டங்கள்ள வாழுற இளம்புள்ளைங்க, இனிமே மத்தவங்களபோல ஒசந்து வரணும்ன்னு நெனச்சி, வாஸந்தியப் படிப்பிச்சி, அவளுக்கு நல்ல வாழ்கையையும், தேடிக்குடுத்த நீ, இப்பிடி ஒரு பழங்காலக் கொள்கையப் புடிச்சிட்டு நடக்க நெனக்கிறத என்னால நம்பமுடியல தேவி".

"புருஷன் செத்துட்டா ஒடன் கட்டை ஏறுற, இல்லாட்டி ஏத்தப்படுற ஒரு பழைய வழக்கத்துக்கும், ஒன்ட புடிவாத்தத்துக்கும் ஒரு வித்யாசமும் இல்லை. ரெண்டு வழின்னாலும், ரெண்டிலயுமே பொம்பளைங்க அழிக்கப்படுறாங்க, தங்கள தாங்களே அழிச்சுக்கிடுறாங்க".

"நீ ஒன்னத் தனிமைப் படுத்துறது ஒரு வகையில தற்கொல செஞ்சுக்கறப் போலதான். பூவிழிக்கு அம்மாவா நீ ஒன்னய நெனச்சுக் கிட்டாலும் அவளுக்கு அப்பாவா நீ யார வய்க்கப் போற? தகப்பன் இல்லாத புள்ளையா நீ பூவிழிய வளக்க விரும்பினா வளத்துக்கோ!" எனக் கூறி நிறுத்தினான்.

இவ்வளவும் பேசும்வரை தன் பார்வையை நிலத்திலலே பதித்துத் தன் புலனை மட்டும் அவன்பால் செலுத்திக் கொண்டிருந்த தேவி, அவன் கடைசி வார்த்தைகளால் திடுக்குற்று நிமிர்ந்தாள். வீரபுத்திரனின் பார்வை அவள் கண்களோடு மோதின. அதரங்கள் பேசமறுத்தன. அவள் மீண்டும் தலைகுனிந்து கொண்டாள். அவள் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளுக்காகக் காத்திருப்பவனாக வீரபுத்திரனும் மௌனமானான்.

நீண்ட மௌனத்தின் பின் தேவி பேசினாள். "மச்சான்!" நான் ஒங்ககிட்டே தோத்துப் போயிட்டேன்! என்னோட வாழ்க்கைய இனிநான் என்னோட பூவிழிக்கா மாத்திக்கிறேன். என்னோட முடிவு பொண்ணுங்கள தப்பான போக்குல கொண்டு போகும்ன்னா அத நான் செய்ய விரும்பல. எனக்காக இல்லாட்டிலும், என்னால ஏதாச்சும் பிரயோசனம் மத்தவங்களுக்கு வரும்ன்னா, அதுக்காக நான் என்ட மனச மாத்திக்கிறேன்!. என்னால பூவிழி அப்பா தெரியாத பொண்ணா வாழ வேணாம்!. ஒங்க கண்முன்னாலேயே அவளும் வளரணும். மத்தரெண்டு புள்ளைங்களப் போல அவ ஒங்கபத்திலேயே இருக்கணும்" என்றாள்.

"அதுமட்டுமில்ல தேவி, ஊருசனம் குத்தம், கொற சொல்லும்ன்னா நாம நம்ம வாழ்க்கைய அழிச்சுக்கிட வேண்டாம். இன்னுமொருவாட்டி சொல்றேன், ஒன்னொட வாழப் போறது நான்தான். அந்தத் துணிவோட நீ ஒன்னோட வாழ்க்கைய மாத்திக்கணும். ஒலகத்துக்கு இதுவரைக்கும் நீ ஒரு உதாரணமாத்தான் வாழ்திருக்கே. இதுக்கப்புறமும் அப்பிடித்தான் வாழப்போறே".

வீரபுத்திரனின் வார்த்தைகள் அவளுக்கு மனத்தெம்பைத்தந்தன. அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். முடிவை மாற்றிக் கொண்டது இப்போது அவளுக்கு ஒரு தெளிவையும் தந்தது.

அவள் அழுகை மாறி, அவர்களிடையே ஏற்பட்ட சுமுகமான பேச்சுக்களைக் கண்ட பூவிழியின் பிஞ்சு மனத்தில் மகிழ்ச்சிபொங்க ஓடிச் சென்று தந்தையின் கைகளில் தொற்றிக் கொண்டாள். அந்தச் செய்கை தேவியின் மனத்தை நெகிழச் செய்ய அவள் கண்களிலிருந்து இரு கண்ணீர் முத்துகள் பிதுங்கிக் கொட்டின. அது இதுவரை வெளிவந்த சோகத்தின் சூடான கண்ணீரல்ல, மகிழ்வினால் ஏற்பட்ட குளிரான காலைப் பனியின் மெல்லிய பொழிவு.

– நிறைவு –

## எனது நன்றிக்குரியவர்கள்

| | |
|---|---|
| தமிழறிஞர் | எஸ். டி. சிவ நாயகம் |
| தமிழ்மணி | தெளிவத்தை ஜோசப் |
| கவிஞர் | அல்-அஸூமத் |
| கவிஞர் | டாக்டர் தாஸிம் அகமது |
| கலைஞர் | பேராதனை ஜுனைதீன் |
| என்பெறாமகள் | புவனேஸ்வரி (இந்தியா) |
| என்மகன் | றோஷன் ஹமீத் |
| | ஆகியோர் |



## இவரைப் பற்றி

தலை சிறந்த யாப்புக் கவிஞர்களுள் ஒருவராகத் தீவிலும் தமிழகத்திலும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் 'ஷம்ஸுஸ் ஸுஆரா' (கவிப்பரிதி), 'தமிழ் மாமணி' ஜின்னாஹ் ஷரிபுத்தின் அவர்கள், சிறுகதைத் துறையில் முன்னேறிவரும் இதே வேளையில், நாவல் துறையிலும் தன் இலக்கியப் பங்களிப்பை முன் வைக்கிறார்.

'பாலையில் வசந்தம்', 'முத்து நகை', 'பனிமலையில் பூபாளம்' ஆகியன அவரது கவிதைத் தொகுதிகளாகும்.

'மஹ்ஜபீன் காவியம்', 'புனித பூமியிலே' ஆகிய இரு காவியங்களை அளித்திருக்கும் காவிய மாமணியாகிய ஜின்னாஹ் அவர்களின் மேலுமிரு குறுங் காவியங்களும் "பண்டாரவன்னியன்" என்னுமொரு காவியமும் சிறுகதைத் தொகுதி ஒன்றும் அச்சில் இருக்கின்றன.

தம் உலக வாழ்வை மலையகத்தில் தொடங்கிய ஜின்னாஹ் அவர்கள், தம் கல்வியை கிழக்கில் வளர்த்து இலக்கியத்தை மேற்கிலிருந்து வளர்த்து வருகிறார்.

'பனிமலையில் பூபாளம்' கவிதைத் தொகுதியை அடுத்து மலையக இலக்கியத்திற்கு வைத்திய கலாநிதி ஜின்னாஹ் அவர்கள் செய்யும் பங்களிப்பு இந்தக் 'கருகாத பசுமை' நவீனமாகும்.

மலையகம் என்றால் அது விரக்தியின் இருப்பிடம் தான் என்ற பழைய இலக்கியக் கோட்பாட்டுக்கு மாறான ஒரு கோட்பாட்டோடு புனையப்பட்டிருக்கும் இந்நாவல், மலையக நாவலிலக்கியத் துறையில் ஒரு திருப்புமுனை என்பது எமது கருத்தாகும்.

**- அல் அஸுமத் -**